இலவசம் : சென்னை ஸ்கேன்
சென்னை வாசகர்களுக்கு மட்டும்

# கல்கி


KALKI 26.12.2004 ரூ.6.00



## விஜயேந்திரர்

# என்ன செய்ய வேண்டும்?

–மக்கள் கருத்து



Celebrate Your Meal!
with wide range of
SAKTHI®
PICKLES
Avakkai Mango,
Cut Mango,
Lime, Lime and Mango,
Tomato,
Garlic, Ginger
Mixed Vegetable,
Mango Thokku and many more!
SAKTHI
SAKTHI
SAKTHI
CUT MANGO PICKLE
Something Special
A Quality Product from
SAKTHI MASALA
SAKTHI MASALA (P) LTD., #6, Mamarathupalayam, Erode - 638

# சங்கீத தர்மம்



மண்ணில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியைப் பந்து போல் தூக்கிப் போய் மேடையில் அமர்த்தி விட்டார்கள். அம்மா ஷண்முக வடிவின் வீணைக் கச்சேரி நடந்து கொண்டிருந்த மேடை! குஞ்சம்மாவுக்கு மேடையோ கச்சேரியோ புதிதல்ல... ஆனால் "பாடு" என்று அம்மா கேட்டது புதிது. எனினும் எந்தவிதத் தயக்கமும் இன்றி தொண்டையை விட்டுப் பாடியது குழந்தை- தெரிந்த சில பாடல்கள். பாடுவதற்கென்றே பிறந்தது போல் பாடியது! கைத்தட்டல் வானைப் பிளந்தது. அதன் பிறகு ஷண்முகவடிவு செய்த கச்சேரிகளில் ரசிகர்கள் எம்.எஸ். சுப்புலட்சுமியின் சிறு பங்கை ஆவலோடு எதிர்பார்க்க ஆரம்பித்தார்கள்.

மதுரை, ஷண்முகவடிவு சுப்புலட்சுமி மிக எளிய கலைக்குடும்பத்தில் பிறந்து, பாடகியாக வளர்ந்ததும், திரை நட்சத்திரமாகி ஜொலித்ததும், டி. சதாசிவத்தை திருமணம் செய்து கொண்டதும் 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்று இசையை இறையர்ப்பணம் செய்து, செல்வத்தை சமுதாய நலனுக்கு அள்ளித் தந்ததும் வரலாறாகிவிட்டன.

ஆனால், மேடையில் முதன் முதலில் பாடிய அந்தக் குழந்தை உள்ளத்தின் கள்ளமற்ற அன்பும் நேசமும் மட்டும் இறுதிவரை மாறவே இல்லை.

திருச்சிக்குச் சென்றால், சின்னக் கடை வீதியில் எல்.என்.எஸ் மணி அய்யர் வீட்டில்தான் சதாசிவம் தம்பதி தங்குவது வழக்கம். தெருவிலும், திண்ணை வரையிலான ஐந்துபடிகளிலும் கூட்டம் நிறைந்து விடும் - எம்.எஸ்ஸைப் பார்க்க... ஒருமுறை மணி அய்யர் வீட்டு மூத்த பெண்மணி ஒருவர், "குஞ்சம்மா, இத்தனை ஜனங்க உன் பாட்டைக் கேட்க பணம் கொடுத்து கச்சேரிக்கு வர முடியுமா...? இவாளுக்காக ஒரு பாட்டு பாடேன்..." என்று கேட்டுக் கொள்ள, சதாசிவம் அனுமதியுடன் திண்ணையில் வந்து நின்றார் எம்.எஸ். ''கண்டதுண்டோ கண்ணன் போல்'' என்ற அமரர் கல்கியின் பாட்டை அவர் பாட, வீதியில் மேலும் கூட்டம் சேர்ந்து போக்குவரத்தே தடைப்பட்டது.

- ''இப்போதும் அந்தக் காட்சி எங்கள் கண் முன்

பசுமையாக இருக்கிறது'' என்று விவரித்து நமக்கு எழுதியுள்ளனர் மணி அய்யரின் பெண்கள் ரேவதி ரமணி, இந்திரா நரசிம்மன்.

பிறிதொரு சமயம் ஒரு சிற்றூரில் மூன்று மணி நேரம் ஸ்ரீராம நவமி கச்சேரி. நிகழ்ச்சி அற்புதமாக நடந்து முடிந்து, களைத்துப் போய் குழுவினர் உறங்கவிருந்த நேரத்தில் ஒரு சில விவசாயக் குடிமக்கள் இரைக்க இரைக்க வந்து சேர்ந்தனர். "தொலை தூரத்திலிருந்து வருகிறோம்... குக்கிராமம்... நீண்ட தூரம் நடந்து வண்டி பிடித்து வருவதற்குள் கச்சேரி அனேகமாக முடிஞ்சு போச்சு... அம்மாவைப் பார்க்கணும்..'' நள்ளிரவை நெருங்கும் நேரம் என்றும் பாராமல், உடன் வந்திருந்த கௌரி ராம்நாராயணுடன் (ஆனந்தியின் மகள்) தங்கியிருந்த கிராமத்து வீட்டின் வாசல்படியில் அமர்ந்தபடி, அந்த எளியவர்களுக்காக 'குறையொன்றுமில்லை' பாடினார் எம்.எஸ்.

இரண்டாண்டுகளுக்கு முன் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு இஸபெல் மருத்துவமனையில் இருந்த நேரம். அறுவைச் சிகிச்சை முடிந்த நிலையில் அவரைக் காண ஒரு பெரிய செவிலியர் குழுவே வந்தது. மெள்ள அவரை எழுப்பி சாய்வாக உட்கார வைத்தனர்... "அம்மா, உங்க பாட்டைக் கேட்கணுமே...'' என்றனர். புன்னகை செய்துவிட்டு அவர்களுக்காக "கஞ்சதளாயதாக்ஷி'' என்ற தீக்ஷிதர் கீர்த்தனையைத் தாளம் போட்டுக் கொண்டு பாடினார் எம்.எஸ். உலகத்துக்கே ஒரு பிரார்த்தனை போல் ஒலித்த அந்தக் குரலையும் பாடலையும் கேட்டு, நெகிழ்ந்துபோய் நின்றுவிட்டனர் செவிலியர்கள்.

ஐநா சபையானாலும் சரி, ஆஸ்பத்திரி அறையானாலும் சரி, சின்னக் கடை வீதி திண்ணையானாலும் சரி... தன்னையே உருக்கி வார்த்துத்தான்

---

# வாசகர்களின் அஞ்சலி

என் ஒரே மகள் பிறக்கும்போதே கேட்கும் திறனின்றிப் பிறந்தாள். ஆனால் படிப்பிலும் மற்ற எல்லாவற்றிலுயம் சிறந்து விளங்கினாள். காமிராவுக்கு ஏற்ற முகம். 1984ல் மங்கை பத்திரிகையில் ஊனமுற்றோர் ஆண்டுக்காக அட்டைப் படத்தில் போடப் பேட்டி எடுத்தார்கள். அப்போது நிருபர் 'உன் ஆசை என்ன. நான் நிறைவேற்றுகிறேன்' என்று என் பெண் அமுதாவைக் கேட்டார்.



''என் அம்மா மறுபடியும் மறுபடியும் எம்.எஸ். அம்மாவின் பாட்டைக் கேட்க ஆவலோடு ஓடுவார்கள். 'ஏன் இப்படி க்ரேஸியாக இருக்கிறீர்கள்?' என்று கேட்டேன். 'அவர்கள் குரல் இனிமையும் பக்தியும் நிறைந்தது' என்பார்கள். என்னால் குரலைக் கேட்க முடியாது. அவரை நேரில் ஒரு முறை காண ஆவலாக இருக்கிறது'' என்றாள். ஏற்பாடு செய்தார்கள்.

அப்போது நுங்கம்பாக்கத்தில் சுதந்திரா பார்க் எதிரில் வீடு. எம்.எஸ். அம்மா எளிமையான



பாடினார் எம்.எஸ். சுப்புலட்சுமி.

இப்பேர்பட்ட பாடகர் உலகத்துக்கே சொந்தமாகிப் போனதில் ஆச்சர்யம் என்ன!

இதன் காரணமாகவே அவர் குடும்பத்து உறுப்பினர்கள் அவர் மீதும், அவரது பொன்னான நேரத்தின் மீதும் அதிகம் உரிமை கொண்டாடாமல் இருக்க கஷ்டப்பட்டு முயன்றனர்; தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டனர். ஆனால் "அம்மா," "குஞ்சக்கா", "குஞ்சம்மா" என்று அழைத்து வளைய வந்த குடும்பத்தின் மூத்த தலைமுறையையும், "அம்முப் பாட்டி" என்று வியந்த அடுத்த தலைமுறையையும் 'அம்மூஸ்' என்று செல்லமாக உரிமையுடன் பெயரிட்ட மூன்றாவது தலைமுறையையும், தமது அரவணைப்பில் இழுத்து இழுத்து வைத்துக் கொண்டு, அன்பைப் பொழிந்தார் எம்.எஸ்.

குழந்தைப் பருவத்தில் அவர் கையால் நிலாச் சோறு வாங்கிச் சாப்பிட்டதும் வளரும் பருவத்தில் உடுத்தவும் பழகவும், அவர் கற்றுத் தந்ததும், சத்

---

புடைவையில் தம்பூராவுடன் பாடிக் கொண்டிருந்தார்கள். என் மகளை அன்புடன் உபசரித்து ஆசீர்வதித்தார்கள்.

லக்ஷ்மியும், சரஸ்வதியும் ஒருங்கிணைந்த தெய்வீக முகம், அன்பு, எளிமை எங்கள் இருவர் நெஞ்சிலும் நிரந்தரமாகத் தங்கிவிட்டது. எப்போதும் எங்கள் நெஞ்சில் வசிக்கிறார்கள்.

*- கமலா சீனிவாசன்,*
*சென்னை - 90*

இரண்டு வருடங்களுக்கு முன் என்னுடைய மகன் திருமலை, அவனது மனைவி சுதா, குழந்தைகளுடன் பஹ்ரைனிலிருந்து வந்திருந்தான். குழந்தைகள் அனன்யா, அபிநயா 'ஹனுமான் சாலிஸா' நன்றாகக் கற்றுக் கொண்டிருந்தார்கள். என் மகன் தன் குழந்தைகளை எம்.எஸ். அம்மா எதிரில் பாட வைத்து ஆசீர்வாதம் வாங்கும் தன் ஆசையை வெளியிட்டான். ஸ்ரீமதி ராதா விஸ்வநாதன் அதற்கு அனுமதி வாங்கித் தந்தார்கள். நாங்களும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு போனோம். சிரித்த முகத்துடன் வரவேற்று, தாமே தம் கையால் குழந்தைகளுக்கு ஸ்ருதி சேர்த்துக் கொடுத்து 'ஹனுமான் சாலிஸா' பாடச் சொன்னார். அவர்கள் பாடும்போது அம்மா கண்களை மூடிக் கொண்டு மெய்மறந்து அனுபவித்தது என் கண் முன்னாலேயே நிற்கிறது.

*- லக்ஷ்மி ராகவன் அசோக்நகர்*

நம்முடைய தேகமும் உள்ளமும் ஆண்டவனின் கோயில். அதை படு சுத்தமாக வைத்துக் காப்பது, நமது



யம் - தர்மத்தின் நிலையான முக்கியத்துவத்தை அவருடைய வாழ்க்கையை அருகிலிருந்து பார்த்து உணர்ந்து கொண்டதும், இறையருளால் அவர் குடும்பத்தினருக்கு வாய்த்தவை. "நேரமில்லை" என்று நாம் சர்வ சாதாரணமாக இன்று கூறும் காரணத்தை அவர் சொல்லிக் கேட்டதேயில்லை! உலகுக்காகவே வாழ்ந்தவர் என்றாலும், எளிய சந்தோஷங்களை அனுபவிக்கவும் வழங்கவும் என்றுமே எப்போதுமே தயாராயிருந்தார்.

குடும்பத்தினர் மட்டுமில்லை, நண்பர்கள் வட்டத்திலும் சரி, ஓரிருமுறை மட்டுமே சந்தித்தவர்களும் சரி... "எம்.எஸ்.ஸுக்கு என்னிடம் தனிப் பிரியம் உண்டு தெரியுமா" என்று தவறாமல் சொல்லக் கேட்டதுண்டு. ஆயிரம் பேர் அடங்கிய கூட்டத்திலும் தெரிந்த முகம் ஒன்று தென்பட்டால், உடனே அடையாளம் தெரிந்து கொள்வார்... "விசாலத்துடைய அம்மா தானே...? சௌக்கியமா...?" என்று ஆரம்பித்து, ஓரிரு கணங்களில் குடும்பத்தையே விசாரித்து விடுவார்.

வாழ்வின் இறுதி நாட்களில் சென்னை இஸபெல் மருத்துவமனையில் இருந்தபோது டாக்டர் சி.வி.

---

கடமை- என்ற முதறிஞர் ராஜாஜியின் சொல்லின்படி வாழ்ந்து காட்டிய திருமதி எம்.எஸ். அவர்கள், இந்த நூற்றாண்டின் ஒப்பற்ற பெண்மணி!

- சிம்மவாஹினி,
வியாசர் காலனி

பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபாவின் பொற்பாத கமலங்களில் சேர்ந்தார் திருமதி எம்.எஸ். அவருடைய பஜனைப் பாடல்களையும், விஷ்ணு சஹஸ்ரநாமம், பஜகோவிந்தம் முதலிய ஏராளமான சொத்துக்களையும் நாம் பாடி அவருக்கு அஞ்சலி செலுத்துவோமாக!

- டி.ஏ.நாகராஜன்,
திருப்பத்தூர்

பாடிப் பாடி கனிந்த குரல்
கொடுத்துக் கொடுத்து சிவந்த கைகள்
அன்பை மட்டுமே பொழிந்த இதயம்
அகிலத்தையும் அரவணைக்கும் கண்கள்.

- எஸ்.ஜெயராமன்,
பெங்களூர் - 32

தாபித்தாய் சாம்ராஜ்யம்!
இசையின் ராஜ்யம்!
தனி ராஜ்யம்! ஈடில்லா
எம். எஸ்ஸின் ராஜ்யம்!
சோபிக்கும் இசை வீச்சில்
குவலயமே
சொல்லவொண்ணா
மயக்கத்தில் சொக்கி நிற்கும்!

- ரெ. மல்லபிள்ளை,
ஆத்தூர்

அறுபதுகளில் இருமுறை அவர் பிலாயில் கச்சேரி செய்ய வந்தார். ஒருமுறை அவர், சதாசிவ அத்தான், ராதா மூவரும் எங்கள் வீட்டில் காலை டிபனுக்கு வந்தார்கள். அப்போது நான் சமையலில் கற்றுக்குட்டி என்றாலும் என் கைவண்ணத்தை அவர்கள் ரசித்துச்

கிருஷ்ணசாமி தலைமையிலான மருத்துவக் குழு அவரைக் கண்ணும் கருத்துமாக கவனித்துச் சிகிச்சை அளித்து வந்தது. டாக்டர் சி.வி.கே வந்தபோதெல்லாம் கரம் குவித்துப் புன்னகை செய்தார். இரவுப் பணிக்கு வந்த நர்ஸ் சிஸ்டர் நிர்மலாவின் கன்னத்தைத் தடவி, "சாப்பிட்டாச்சா?" என்று விசாரித்தார். பேசுவதற்கு சக்தி இருந்தவரை, இந்த விசாரிப்பும் நிகழ்ந்தது.

தாம் வாழும் காலத்தில் பிறர் வாழ்வை மலர்விக்க இயன்றதனைத்தும் செய்ய வேண்டும் என்று, சிறிதும் பெரிதுமாக அவர் செய்தவற்றைச் சொல்லியோ எழுதியோ மாளாது.

அவரை அறிந்தவர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒரு வாழ்நாள் முழுவதும் நினைத்து நினைத்து அசை போடும் அளவுக்கு ஞாபகங்கள் இருக்கும்.

அவரை அருகிருந்து அறியாதவர்களுக்கும்கூட, அவர் இசையும் வாழ்வும் பணியும் ஊக்கமளித்து வழிகாட்டும்.

'சத்யம் வத - தர்மம் சர' என்பது நமது வேத வாக்கு.

- சத்தியத்தைப் பேசு. தர்மத்தை வெறுமே பேசிப் பயனில்லை; வாழ்ந்து தான் காட்ட வேண்டும் என்பது இதன் பொருள்.

எம்.எஸ். சுப்புலட்சுமியின் வாழ்க்கை இந்த இலக்கணத்தை உள்ளடக்கிய காவியம். சத்திய ஒளியுடன் அவர் சங்கீதம் வெளிப்பட்டது. வாழ்க்கை தர்மமும் சங்கீத தர்மமும் வேறல்ல என்பதை உலகுக்கு உணர்த்திக் கொண்டேயிருக்கிறது.

- சீதா ரவி

---

சாப்பிட்டது இன்னும் என் நினைவில் பசுமையாக உள்ளது!! அவரைப் போன்ற எளிமையான குணம் யாருக்கு வரும்?

- இந்திரா, சென்னை - 14

கர்நாடக சங்கீதம்
பூலோக முடுக்குகளிலெல்லாம்
புகுந்தது போதாதென்று
வானுலகச் சந்துகளிலும் பரவ
வழியாகிச் சென்றாயோ?

- சுகாசி விஸ்வநாதன், சென்னை - 44

ஊன் கலந்து உயிர் கலந்து
உவப்பூட்டும் உன் இசையால்
வான் உலகை மகிழ்வூட்ட
வாஞ்சையுடன் சென்றாயோ?

செவி நிரப்பும் உன்னுடைய
சங்கீதப் பேரலைகள்
புவியிருக்கும் நாள்வரைக்கும்
புகழ் கொண்டே நிற்கு மம்மா!

- இளங்கம்பன், பழனி

(அஞ்சலி தொடரும்)



# கருவியால் குறட்டை நிற்காது!

**க**ல்கி 28.11.2004 இதழில் வெளியான 'கொர்...கொர் விபரீதம்' கட்டுரையையும் 12.12.2004 இதழில் வெளியான 'குறட்டைக்கு குட்பை' கட்டுரையையும் படித்தேன். மருத்துவர் என்ற முறையில் சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன்.

நம் மூக்கு நுனியிலிருந்து குரல்வளை வரை எந்த இடத்தில் காற்றுப்பாதை சுருங்கியிருந்தாலும் குறட்டை வரும். சுருங்கிய காற்றுப்பாதை வழியே காற்று செல்வதால் ஏற்படும் சத்தமே குறட்டை.

தங்கள் இதழில் 28.11.2004 இதழில் வெளியான கட்டுரை சி பாப், பீ பாப் (C PAP, P PAP) ஆகிய கருவிகள் மூலம் குறட்டையை நிறுத்திவிடலாம் என்ற தொனியில் எழுதப்பட்டுள்ளது.

இக் கருவிகள் நமது மூச்சுக் குழாய்க்குள் பிராணவாயுவை அழுத்தத்துடன் செலுத்துகின்றன. இதனால் குறட்டையின் நீண்டநாள் பாதிப்புகளான இரத்த அழுத்தம், இருதய நோய் போன்றவற்றிலிருந்து விடுபடலாம். ஆனால் இந்த சிபாப், பீ பாப் கருவிகள் குறட்டையை நிறுத்துவதில்லை.



தவிர மூக்கு முழுமையாக அடைத்திருக்கும் ஒரு நோயாளிக்கு, இந்தக் கருவிகளால் உபயோகமில்லை. தவிர முகமூடி போன்ற இந்தக் கருவியை எப்போதும் அணிந்திருக்க வேண்டும், பயண நேரங்களில்கூட!

இனி KTP லேசர் மற்றும் UAUP3 என்ற அறுவை சிகிச்சைகளைப் பற்றி பார்ப்போம். லேசர் ஒரு கத்தியாக மட்டுமே பயன்படுகிறது. இரத்தமின்றி வெட்டும் ஒரு கத்தி. லேசர் படும் இடத்திலும், சுற்றியுள்ள தசைகளும் இரத்தக் குழாய்களும் கருகி விடுகின்றன. பலமடங்கு தசை லேசரினால் சுட்டு கருக்கப்படுகின்றது. இதனால் லேசரால் உண்டாக்கப்பட்ட காயம் ஆறுவதற்கு நீண்ட நாட்கள் ஆவது மட்டுமல்லாமல், வலியும் (Postoperative pain) அதிகமாக இருக்கின்றது. இது உலகில் பல லேசர் மையங்களில் ஆராய்ச்சிகளால் நிரூபிக்கப்பட்ட உண்மை.

ஆனால் கண் மருத்துவத்தில் லேசர் இன்றியமையாததாகும். Cosmetic surgery-ல் லேசருக்குப் பெரும் பங்கு உண்டு. இரத்தம் உறைவதில் கோளாறு உள்ள நோயாளிகளுக்கு லேசர் உபயோகித்து அறுவை சிகிச்சை செய்தால், இரத்தம் வெளியாவது குறையும். சாதாரண அறுவை சிகிச்சை vascular malformations, vascular tumours, சில இரத்தக் கட்டிகள் மற்றும் புற்று நோய்களுக்கும், லேசர் உபயோகமுள்ள கருவியாகும்.

**கு**றட்டை சாதாரணமாக முப்பத்தைந்து வயதுக்கு மேல் ஏற்படும் விபரீதமாகும். அதிக உடல் பருமன், உடல் சோர்வு, சுறுசுறுப்பற்ற வாழ்க்கை முறை ஆகியவை குறட்டைக்கு முக்கியக் காரணங்களாகும். இவற்றைச் சரி செய்யாமல், லேசர் அறுவைச் சிகிச்சையை மட்டும் செய்தால் குறட்டைக்குத் தீர்வு காண முடியாது. LAUP3 (Laser assisted uvulopalatopharyngoplasty) அறுவை சிகிச்சையைப் பல வருடங்களாக செய்து வந்த மையங்கள் பல, அதனை நிறுத்தி விட்டன. காரணம், உடல் பருமனைக் குறைக்காத வாழ்க்கை முறையை மாற்றியமைக்காத பல நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சைக்குப் பின் குறட்டை அதிகமானதுதான்!

காற்றுப் பாதையில் அடைப்பு இருந்தால் மட்டுமே அறுவை சிகிச்சை உதவி செய்யும்.

- டாக்டர் துளசிதாஸ்,
காளியப்பா மருத்துவமனை

புதிய

# Exo

Anti-bacterial Dishwash bar

## க்ரீஸ் கட்டர் சக்தி + கிருமிகளிடமிருந்து பாதுகாப்பு மற்றும் ரூ. 5 மதிப்புள்ள எக்ஸோ ஸஃபாய் ஸ்க்ரப்பர் முற்றிலும் இலவசம்.

ரூ. 5
மதிப்புள்ள
(60mm x 75mm)
ஸ்க்ரப்பர்
இலவசம்!

புது க்ரீஸ்
கட்டர் உடன்






புதிய Exo ஆன்டி-பாக்டீரியல் டிஷ்வாஷ் பார் உங்களுக்கு இரண்டு கூடுதலான ஆரோக்கிய நன்மைகளை அளிக்கிறது.

பிடிவாதமான கறையையும் நீக்கிட இப்போது Exo ஒப்பற்ற க்ரீஸ் கட்டர் கொண்டது. உங்கள் பாத்திரங்களை மிகத் தெளிவாக சுத்தமாக்குகிறது.

மேலும் ரூ. 5 மதிப்புள்ள எக்ஸோ ஸஃபாய் ஸ்க்ரப்பரை இலவசமாகப் பெறலாம்!

சலுகை 400 கிராம் எக்ஸோ டிஷ்வாஷ் பார் உடன், மட்டும்.

Situations/JLL-EXO/07/2004 Tam

காஞ்சி ஸ்ரீ ஜயேந்திரர் விவகாரத்தில் நாளுக்கொரு அதிரடித் திருப்பம் ஏற்பட்டு வருகிறது. அவர் மீது தொடுக்கப்படும் புதுப்புது வழக்குகள், பத்திரிகைகளின் 'புலனாய்வுச் செய்திகள்' என்று அதிர்ச்சிகள் ஏராளம். இந்த நிலையில் 'ஸ்ரீ ஜயேந்திரர் மடாதிபதி பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். ஸ்ரீ விஜயேந்திரர் மடாதிபதியாக பொறுப்பேற்க வேண்டும்' என்றும் ஆங்காங்கே சில குரல்கள் ஒலிக்கின்றன. இது பற்றி மடத்தின் பக்தர்கள், பொது மக்களின் கருத்துகள் என்ன?



# விஜயேந்திரர் என்ன செய்ய

சில வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் என்று நினைவு கூர்ந்தார் பிரபல சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் திரு. ப்ரசன்ன வெங்கடேசன்: "மடத்தின் ஸ்ரீ காரியம் நீலகண்ட அய்யர், ராமகிருஷ்ண மடம் சிவராமன் மற்றும் நான் ஆகியோர் ஸ்ரீ ஜயேந்திரரிடம் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது ஒருவர் ஜயேந்திரரிடம் "நீங்களும் மகா பெரியவர் போல மடத்துக்குள்ளேயே இருந்து கொண்டு, பூஜை, புனஸ்காரங்கள், உலக நன்மைக்கு தியானம், யாகம் செய்து கொண்டிருக்கலாமே. எதற்காக சமூகப் பணி, கல்விப் பணி என்று நேரம் காலம் பார்க்காமல் உழைக்கிறீர்கள்?" என்று கேட்டார். இரண்டு மூன்று நிமிடங்களுக்கு அங்கே மௌனம் நிலவியது. அதன் பின் ஜயேந்திரர் சொன்னார். "மகா பெரியவர் போன்ற அவதார புருஷர்கள் இரண்டாயிரம் வருடங்களுக்கு ஒருமுறை தான் தோன்றுவார்கள். அவருடன் யாரையும் ஒப்பிடக் கூடாது.

# வேண்டும்?

## -மக்கள் கருத்து

என் மடியிலே பெரியவா காவியைப் போட்டுவிட்டார். ஆனால் காலம் மாறிக் கொண்டிருக்கிறது. மடத்தை விட்டு வெளியே வந்து மக்களுக்கான சேவை செய்தால் தான் மடத்தைக் கட்டுப் பாட்டுடன் வைத்துக் காப்பாற்ற முடியும். ரொம்பப் போராடித்தான், பெரியவாளி டம் இதற்கான அனுமதியைப் பெற் றேன்" என்றார்.

"இதை எதற்கு இந்த சந்தர்ப்பத்தில் சொல்கிறேன் என்றால், இப்போது பலர் 'மகா பெரியவர் போட்ட பாதையிலிருந்து விலகியதால்தான் அவருக்குப் பிரச்னை வந்து விட்டது' என்கிறார்கள். அது சரியல்ல. இந்த துர்பாக்கிய சூழலைப் பயன்படுத்திக் கொண்டு 'மடாதிபதி' பொறுப்பிலிருந்து அவர் விலகிக் கொள்ள வேண்டும். விஜயேந்திரரை நியமிக்க வேண்டும் என்றெல்லாம் கோஷங்கள் கேட்கின்றன. ஆடிட்டர் குருமூர்த்தி இந்த ரீதியில் பேசியும் எழுதியும் வருகிறார். இதை ஏற்க முடியாது. வீடு பற்றி எரிந்து கொண்டிருக்கும்போது, கூடிய மட்டும் அதைக் காப்பாற்ற வேண்டுமே தவிர, பெட்ரோலை ஊற்றக் கூடாது. ஜயேந்திரர் அவர்களுக்கும், விஜயேந்திரர் அவர்களுக்கும் 'நல்ல புரிதல்' இருக்கிறது. எதாவது முடிவு எடுக்க வேண்டுமென் றால், அவர்கள் இரு வரும் சேர்ந்து பேசித் தான் எடுக்க வேண் டும். இடையில் அர சாங்கமோ, தனி நபர் களோ "பாலிடிக்ஸ்" பண்ணக் கூடாது" என்றார் பிரசன்ன வெங்கடேசன். இவர் பல வருடங்கள் மடத்தில் நிர்வாகத்துக்கு உதவியாக இருந்தவர்.



கூக்கன் விஸ்வநாதன், மடத்துடன் பல வருடங்களாக நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பவர். இவர், "மடத்து



• ராஜேஸ்வரி



•கிருஷ்ணமூர்த்தி



• ராமச்சந்திரன்



• அலமேலு


நிர்வாகத்தைக் கவனிக்க ஸ்ரீ காரியம் மற்றும் மானேஜர் மற்றும் உதவியாளர்கள் இருக்கிறார்கள். காஞ்சி மடாதிபதி தினசரி சந்திரமௌலீஸ்வரர் பூஜை செய்து, அனுஷ்டானங்களைக் கடைப் பிடிக்க வேண்டும். அந்தப் பணியை செவ்வனே செய்து வருகிறார். மடத்தின் சொத்துக்களை நிர்வகிப்பதும், ஆன்மிகக் காரியங்களுக்காக மெனக்கெடுவதும் மடாதிபதியின் மற் றொரு பணி. இந்தப் பணிகளும் நிர்வாகி களால் நடத்தப்பட்டு வருகின்றன. ஸ்ரீ ஜயேந் திரர் சிறைக்குச் சென்றதிலிருந்து, விஜயேந்திரரின் செயல்பாடுகளை கவனித்து வரும் சங்கரமட அன்பர்களுக்குச் சில வருத்தங் கள் இருக்கின்றன. 'ஜயேந்திரரைப் போய் விஜயேந்திரர் பார்க்கவில்லை; தமது குரு நிரபராதி என்று உக்கிரமாகப் போராட வில்லை'- இதெல்லாம் குறைகளாகச்

சொல்லப்படுகின்றன. ஆனால் இவையெல்லாம் தவறான அபிப்ராயங்கள். இப்போது மடத்தின் மீது நடத்தப்படும் தாக்குதல்களைச் சமாளிக்க அசாத்தியத் திறமை வேண்டும். அந்த வகையில் விஜயேந்திரர் அமைதி காக்கும் அதே சமயம், மரபுகளைக் காப்பாற்றி ஆக்க பூர்வமாகவும் பணிகளைச் செய்து வருகிறார். மடத்தின் நிலையை விளக்கி இரண்டு விளம்பரங்கள் கொடுத்தது அன்பர்களுக்கு ஆறுதலாக இருந்தது. மற்றொன்று, 'புனிதம் கெட்டுவிட்டது, எனவே, விஜயேந்திரருக்கு அவர் வழி விட வேண்டும்' என்கிறார்கள். ஒரு பழி போடப்பட்டிருக்கிறது. இன்னமும் விசாரணை நடைபெற வேண்டும். தீர்ப்பு வரவேண்டும். அதற்குள் அவசரப்படுவானேன்? மடத்தின் ஆசார அனுஷ்டானங்கள் எந்த வகையிலும் பாதிக்காத வகையில் விஜயேந்திரர் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். இந்த நிலை நீடிக்கலாமே!" என்று சொல்கிறார் கக்கன் விஸ்வனாதன்.

"ஜயேந்திரர் கைது செய்யப்பட்டவுடன், 'அவரை கண்ணியமாக நடத்த வேண்டும்' என்று நகர முக்கியஸ்தர்கள் சிலர் கவர்னரிடம் மனு கொடுத்தார்கள். அதில் ஒருவர் பிரபல டாக்டர் ஜி. ரங்கபாஷ்யம். "மடத்தில் எந்தப் பணிகளும் நிற்கவில்லை. மகா பெரியவரின் அனுக்கிரகம் நம்மைக் கைவிடாது. சிக்கல்கள் தீரும். அவசரப்படவேண்டாம். பொறுத்திருந்து பார்ப்போம்" என்று சொல்கிறார் இவர். "மடத்தில் நிறுவன ரீதியான நிர்வாகம் (corporate management) ஏன் இல்லை என்று பலர் கேட்கிறார்கள். ஒரு மடத்தின் நிர்வாகத்தை அந்த வகையில் நடத்த முடியாது. அனுபவமிக்கவர்களின் ஆலோசனையோடு தான் இப்போதும் நிர்வாகம் நடத்தப்படுகிறது" என்று சொன்னார் மடத்துடன் நெருக்கமாக இருக்கும் அன்பர் ஒருவர்.



• பாரதி



• என்.வி. சாமி

'மடத்தை எடுத்துக் கொள்ளும் நோக்கம் அரசுக்கு இல்லை' என்று ஜெ. சட்ட சபையில் அறிவித்தாலும், பக்தர்களுக்குச் சில சந்தேகங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இறந்து போன சங்கர ராமன், "அறநிலையத்துறை சட்டம், பிரிவு 59ன் கீழ் ஜயேந்திரரை மடாதிபதி பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும்" என்று மனு கொடுத்திருந்தார். அந்த மனு மீது முறைப்படி அறநிலையத்துறை விசாரணை மேற்கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. "சட்டப்படி அரசு இப்போது ஒன்றும் செய்ய முடியாது. நிர்வாகியாக ஜயேந்திரர் தொடரும் பட்சத்தில், அவர் தாம் விஜயேந்திரருக்குப் பொறுப்பைக் கொடுப்பது பற்றி முடிவு செய்ய வேண்டும். ஜாமீனில் வெளிவரும் பட்சத்தில் ஜயேந்திரர் தமது பணிகளைத் தொடரலாம். ஆனால் ஜயேந்திரரும் சிறையில் இருக்கும் நிலையில் விஜயேந்திரருக்கும் எதாவது சிக்கல் வந்து விட்டால் தான் பிரச்னை" என்கிறார்கள் சட்ட வல்லுனர்கள். எனவே இன்றைய சூழலில் விஜயேந்திரரின் தோளில் பெரிய சுமை ஏற்றப்பட்டிருக்கிறது என்பது மட்டும் நிதர்சனமாகத் தெரிகிறது.

வாஸ்து நிபுணர் ஆர்.கே. பகவதிராஜ் கருத்து வேறுமாதிரியாக இருக்கிறது.

"இப்போது மடத்துக்கு ஏற்பட்டுள்ள சூழ்நிலை அசாதாரணமானது. எங்கேயோ ஏதோ ஒரு தவறு நடந்திருப்பது தெரிகிறது. அதன் விளைவுதான் ஜயேந்திரரின் சிறைவாசம். நாளை அவர் ஜாமீனில் வரலாம். நிரபராதி என்று கூட தீர்ப்பு வரலாம். ஆனால் இவரால் பாரம்பரியம்மிக்க மடத்துக்கும், இந்து மதத்துக்கும் ஏற்பட்டிருக்கும் களங்கத்தை இனி அழிக்க முடியாது. இந்த நிலையில் இவர் ஜாமீனில் வெளிவந்து, மடத்தின்

சம்பிரதாயங்களைத் தொடர்ந்து செய்வது என்பது தர்மப் படியும் சரியல்ல, மனசாட்சிப்படியும் சரியல்ல. ஆகவே இவர் தமது மனசாட்சியைத் தட்டி எழுப்பி விஜயேந்திரரிடம் பொறுப்பைக் கொடுப்பதே மடத்துக்கும் நல்லது; அவருக்கும் நல்லது.


"நாளை ஜயேந்திரர் நிரபராதி என்று தீர்ப்பு வந்தால் கூட அவர் மடத்தின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக் கூடாது. இப்படிச் செய்தால் ஜயேந்திரர் வரலாற்றில் நிலைத்து நிற்பார்" என்கிறார் ஆர்.கே. பகவதிராஜ்.

சில பொதுமக்களைச் சந்தித்து இந்த விவகாரம் குறித்து கருத்து கேட்டோம்.

**கிருஷ்ணமூர்த்தி:** ஜயேந்திரர் மீதான புகார் நம்ப முடியாததாக இருக்கிறது. உண்மை என்னவென்று தெரியவில்லை. ஜயேந்திரர் வெளியே வந்து உண்மையை உலகுக்குச் சொன்னால்தான் உண்டு. இந்த நிலையில் விஜயேந்திர சுவாமிகளுக்குப் பட்டம் சூட்ட வேண்டும் என சிலர் சொல்வது அபத்தமான செயல்.

**சுரேஷ்:** வரும் செய்திகளைப் பார்க்கும்போது இதில் அரசியல் அதிகமாக விளையாடுகிறது என்று தோன்றுகிறது. காஞ்சி மடத்தின் சார்பாக பத்திரிகைகளில் வெளியான ஒரு பக்க விளம்பரத்தில் பல உண்மைகளை வெட்ட வெளிச்சமாகக் கூறியிருக்கிறார்கள். ஜயேந்திரர் விரைவில் இந்த வழக்கிலிருந்து முற்றிலுமாக விடுதலையாகி விடுவார் என்பது மட்டும் உறுதி. அவரே தொடர்ந்து மடாதிபதியாக நீடிப்பார்.

**முத்தமிழ் மு. ராமச்சந்திரன்:** காஞ்சி காமாட்சியம்மனே பெரியவர் உருவில் அருள்வாக்கு சொல்வது போல பக்தர்கள் ஆசி பெற்று வந்தார்கள். இந்துக்களின் மத உணர்வைப் புண்படுத்தும்படியாக தொடர்ச்சியாக அவதூறான செய்திகள் வருகின்றன. சம்பந்தப்பட்டவர்கள் இதை உடனே நிறுத்த வேண்டும். இது மடம் சம்பந்தப்பட்ட விவகாரம் என்பதால், பெரியவர் சொல்வதுதான் இறுதித் தீர்ப்பாக இருக்க முடியும்.



• சுரேஷ்



• மாலதி

**அலமேலு ராமமூர்த்தி சாஸ்திரிகள்:** விரைவில் ஜயேந்திரர் தம் மீதான வழக்கிலிருந்து மீண்டு வருவார். வழக்கம்போல இளையவர், பெரியவர் வழிகாட்டியபடி நடப்பார்.

**திருமதி ராஜேஸ்வரி:** ஜயேந்திரர் தம் மீதான வழக்கிலிருந்து மீள சட்டதிட்டத்துக்கு உட்பட்டு அமைதியாக ஏற்பாடுகள் செய்து வருகிறார் விஜயேந்திரர். இந்நிலையில் விஜயேந்திரர் பொறுப்புக்கு வரவேண்டும் என்று சிலர் சொல்வது அபத்தம்!

**மாலதி முரளீதரன்:** இது ஏதோ கெட்ட நேரம் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் அவதூறு பேசியவர்களெல்லாம் அது தவறு என்று உணர்கிற மாதிரி எதிர்காலத்தில் தீர்ப்புகள் வரும் என்பது மட்டும் உண்மை. பெரியவரின் மீது எங்களுக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது.

**பாரதி விஸ்வநாத்:** எல்லாவற்றையும் விஜயேந்திரர் சாதுர்யமாக சமாளித்து மடத்துக்குத் தொய்வு வராமல் பார்த்துக் கொள்வார். ஆனால் ஜயேந்திரர் தான் பீடாதிபதியாக இருக்க வேண்டும்.

**என்.வி.சாமி:**

பெரியவர் பார்த்து என்ன செய்கிறாரோ செய்யட்டும். மற்றபடி சின்னவருக்கு மகுடாபிஷேகம் சூட்டி மடத்துக்குள் பாலிடிக்ஸ் செய்ய நினைப்பவர்களின் எண்ணம் பலிக்காது. சின்னவரும் இப்படிப்பட்ட அல்பகாரியங்களுக்கு ஆசைப்படுபவர் அல்ல.

**- ஸ்ரீநி, யுகந்த்**

படங்கள் : **ஸ்ரீஹரி, ராதா**

அட்டை வண்ணப்படம் : **யோகா**

# கல்கி இணைந்து வழங்கும் தங்க நகை பரிசுப் போட்டி!

## கல கல கலக்கப் போவது யாரு?

கல்கி பொங்கல் சிறப்பிதழில் (16.01.2005) உங்களை
நகைச்சுவையால் திணறடிக்கப் போகும் புத்தம் புதிய தொடர் ஆரம்பம்!
எழுதுபவர் யாரென்று யூகித்து கீழே உள்ள
கூப்பனில் டிக் செய்து அனுப்புங்கள். பரிசுகளை அள்ளுங்கள்.

**பம்பர் பரிசு**
VBJ வழங்கும்
ரூ.50,000 மதிப்புள்ள
தங்க நகை ஒருவருக்கு!

\+

**சிறப்புப் பரிசு**
போத்தீஸ் வழங்கும்
தலா ரூ.2,000
மதிப்புள்ள
புடைவை ஐந்து
பேருக்கு!

**வெற்றி பெறும் வாசகர்களுக்கு கலகல எழுத்தாளருடன் கமகம விருந்து**

---

உரிய இடத்தில் '✓' செய்க

### கல கல கலக்கப் போவது யாரு?


☐


☐


☐


☐

பெயர் : ..............................

வயது : ..............................

முகவரி : ..............................

..............................


..............................

..............................

நான் 'கல்கி'யை விரும்பக் காரணம்:

..............................

- கூப்பன் வந்து சேர கடைசித் தேதி **31.12.2004**
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
- கல்கி நிறுவன ஊழியர்களோ, அவர்களது குடும்பத்தினரோ இந்தப் போட்டியில் கலந்து கொள்ளக் கூடாது.




## பறிபோகும் பொருளாதார சுதந்திரம்!

**பி**ரதமர் மன்மோகன் சிங் ஓர் இலக்கு நிர்ணயித்துள்ளார். இந்தியா பெறுகிற நேரடி அந்நிய முதலீட்டுத் தொகை (Foreign Direct Investment) இன்னும் பத்தாண்டுக் காலத்தில் 150 பில்லியன் டாலரை எட்டவேண்டும் என்பதே அந்த இலக்கு!

அன்னிய நேரடி முதலீடு என்பது, அயல்நாட்டு முதலீட்டாளர்களும் நிறுவனங்களும், நம் நாட்டுக்கு வழங்கும் பங்கு மூலதனம். இது ஏதோ ஷேர் மார்க்கெட்டில் பங்கு வாங்குவது போன்ற விஷயமல்ல. ஒரு நிறுவனத்தில் முதலீடு செய்யும் யாருமே எதிர்பார்க்கக் கூடிய சில அதிகாரங்களை இந்த அந்நிய முதலீட்டாளர்கள் எதிர்பார்ப்பார்கள். கொள்கை நிர்ணயம், நிர்வாகம், மேலாண்மை செயல்பாடுகள் போன்றவற்றில், பங்கும் அதிகாரமும் வேண்டும் என்று இவர்கள் கேட்பதில் வியப்பில்லை. அதனால்தான் இது நாள்வரை அந்நிய நேரடி முதலீட்டின் அளவை அரசு ஒவ்வொரு துறையிலும் வெகுவாகக் கட்டுப் படுத்தி வந்தது. இப்போது அரசு அந்தக் கட்டுப்பாட்டுக் கொள்கையைத் தளர்த்தி விட்டது. அந்நிய நேரடி முதலீட்டுக்கான பத்து வருட இலக்கை அடைய, வருடாந்திர இலக்கு பதினைந்து பில்லியன் டாலர்!

எத்தனையோ துறைகளில் முதலீடுகளுக்கான விதிகளை ஏற்கெனவே தளர்த்தியிருக்கும் அரசு, சமீபத்தில் தொலைத் தொடர்பு, உள்நாட்டு விமானப் போக்குவரத்து இன்ஷூரன்ஸ்




கல்கி



2004 டிசம்பர் 26
தாரண மார்கழி 11
மலர் : 63
இதழ் : 22

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - *பாரதியார்.*




போன்றவற்றில் அந்நிய நேரடி முதலீடு அதிகரிக்க வழி செய்யும் சர்ச்சைக்குரிய முடிவையும் எடுத்திருக்கிறது. இந்த முடிவு, நாட்டின் பாதுகாப்பை பாதிக்கும் என்று நிபுணர்களும் எதிர்கட்சியினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் நிதியமைச்சர் ப. சிதம்பரம் செய்துள்ள அறிவிப்பு, மேலும் ஒரு பிரச்னையைக் கிளப்புகிறது.

'விரைவிலேயே இந்தியாவிலுள்ள தனியார் வங்கிகளில் எழுபத்து நான்கு சதவிகிதம் வரையில் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படவிருக்கிறது' என்பதுதான் அவ்வறிவிப்பு!


இந்தியாவில் வங்கித்துறை தற்போது மிக நன்றாகவே இயங்கி வருகிறது. ஒப்பு நோக்க, நமது வங்கிகள் (அரசு, தனியார்) அயல் நாட்டு வங்கிகளுக்கு இணையாக மிகவும் சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. தற்போதைய நிதிச் சூழலில் இவ்வங்கிகள் கடன் வழங்கச் சுலபமாக முன் வருகின்றன.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளையும் அயல்நாட்டு வங்கிகளையும் விட, தனியார் வங்கிகள் இன்னும் சிறப்பாக இயங்கி, சேவையும் அளித்து வருகின்றன.

இவ்வாறிருக்க, தேன்கூட்டில் கல் விட்டெறிவது போல் அமைந்துள்ளது ப. சிதம்பரத்தின் அறிவிப்பு.

தனியார் வங்கித் துறையில் முதலீடு செய்ய அந்நிய நாடுகளை அழைக்கிறபோது, முதலீட்டாளர்கள் விரைந்து முன்வர வாய்ப்பு இருக்கிறது. தொழில், உற்பத்தித் துறைகள் போலன்றி, இத்துறையில் முதலீட்டாளர்களுக்கான 'ரிஸ்க்' குறைவு.

ஆனால், இத்துறையில் அந்நிய முதலீடு அதிகமாக அனுமதிக்கப்படுகிறபோது, இந்தியப் பொருளாதாரத்தின் மீது அரசுக்கு உள்ள கட்டுப்பாடு தளர்ந்து விடும். சிறுதொழில் முன்னேற்றம் அல்லது விவசாயம் சார்ந்த தொழில்களின் முன்னேற்றம், இல்லாவிடில் நொடித்துப் போன தொழில்களின் புனர்வாழ்வு என சூழலுக்கு ஏற்ப அரசு கொள்கைகளை வகுக்க, வங்கிகளின் கடன் வழங்கும் செயல்பாடு அரசின்




கொள்கையோடு ஒட்டிச் செயல்படுகிறது. 74 சதவிகிதம் அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டால், இந்த நிலை மாறிப் போகும். இந்த நேரடி முதலீடு அரசுத் துறை வங்கிகளின் செயல்பாட்டையும் நாளடைவில் பாதிக்கவே செய்யும். நிதிக் கட்டுப்பாடு, வங்கிகளில் முதலீடு செய்யும் அந்நிய முதலீட்டாளர்கள் கைக்கு மாறிவிட்டாலும் ஆச்சர்யமில்லை.

பொருளாதார நிபுணர்களாகப் போற்றப்படும் மன்மோகன் சிங், ப. சிதம்பரம் ஆகியோர் அடங்கிய அமைச்சரவையின் நிதிக் கட்டுப்பாடு ஏற்கெனவே தறிகெட்டு ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த நிதி ஆண்டின் வருவாய் பற்றாக்குறையாக காண்பிக்கப்பட்ட தொகை 76, 171 கோடி ரூபாய். முதல் ஆறு மாதங்களிலேயே இத்தொகையில் 79 சதவிகிதம் அதாவது 59, 551 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. திட்டமிட்டதைக் காட்டிலும் அரசுக்கு, வருவாய் குறைவதும் அரசு மிக அதிகமாகச் செலவழிப்பதையுமே இது உணர்த்துகிறது. இது மிகவும் ஆபத்தான போக்கு!

சீனா ஏற்கெனவே நம் நாட்டை மிகப் பெரிய நுகர்வோர் சந்தையாக அடையாளம் கண்டு, தனது உற்பத்திப் பொருள்களை இங்கே குவித்து, இச் சந்தையைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கியிருக்கிறது.

வங்கித் துறையையும் இதே போல் அந்நிய நாட்டு முதலீட்டாளர்கள் கைப்பற்றிக் கொண்டால், இந்தியப் பொருளாதாரத்தின் நிதிப் பிரிவும், உற்பத்திப் பிரிவும் ஒருங்கே அடி வாங்கும். அரசியல் சுதந்திரத்தை மட்டும் வைத்துக் கொண்டு, பொருளாதார சுதந்திரத்தைப் படிப்படியாக இழப்போம். அந்நிய முதலீடு அவசியமே. அது, உற்பத்திக்கு உதவ அடிப்படை வசதிகளைப் பெருக்கும் வகையில் எச்சரிக்கையாகப் பெறப்படவேண்டியது அதனினும் அவசியம். கண்களை விற்று சித்திரம் வாங்கக் கூடாது. ○




# பொங்கும் பங்குகள்!

கடந்த சில நாட்களாக இந்திய பங்குச் சந்தையில் குறிப்பிட்ட பங்குகளின் விலை பொங்கிப் பெருகுகிறது. அதாவது எதிர்பாராத அளவில் விலை ஏற்றம் கண்டுள்ளது.

ஆம், sensex எனப்படும் முப்பது பங்குகளின் விலை குறியீட்டு எண் 6400-ஐத் தாண்டிவிட்டது. சுமார் இரண்டு மாதங்களுக்குள் சராசரியாக பதினைந்து சதவிகிதத்துக்கு பங்குகளின் விலை உயர்ந்துள்ளது.

அதெப்படி, இரண்டு மாதங்களுக்குள் இந்தியப் பொருளாதாரம் கிடுகிடுவென முன்னேறிவிட்டதா, அல்லது இந்தியக் கம்பெனிகள் திடுமென மிகச்சிறப்பாக செயல்பட ஆரம்பித்து விட்டனவா என்று பலருக்கு எண்ணத் தோன்றும்!

ஆனால், இதற்குக் காரணம் வேறு!

வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் இந்தியப் பங்குச்சந்தையில் பெரிய அளவில் முதலீடு செய்வதுதான், இந்த பங்கு விலையேற்றத்துக்குக் காரணம்!

சென்ற நவம்பர் மாதத்தில் மட்டும் வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் 1.3 மில்லியன் டாலர், அதாவது 5000 கோடி ரூபாய் அளவுக்கு இங்கு முதலீடு செய்திருக்கின்றன!

இந்த வருடத் துவக்கத்திலிருந்து நவம்பர் மாதம் வரை, வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் இந்தியப் பங்குச் சந்தையில் செய்த முதலீடு 35,000 கோடி ரூபாய்!

இதுதான் பங்குகள் விலை ஏற காரணம். ஆனால் இதே வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள், தங்களிடம் உள்ள பங்குகளை லாப நோக்குடன் விற்கும்போது பங்குகளின் விலை இறங்குமுகம் காணும்!

ஆகவே பங்குகளை வாங்கவோ, விற்கவோ எண்ணுபவர்கள், குறிப்பிட பங்குகளின் விலை ஏற்ற இறக்கத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும்; சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் செயல்பாட்டை நன்கு ஆராய வேண்டும். அதன் பிறகே முடிவெடுக்க வேண்டும்.

இந்த ஆண்டு பிரதான மார்க்கெட்டில் வந்த பல பங்குகள் நல்ல விலை ஏற்றத்தைக் கண்டிருக்கின்றன. முக்கியமாக, சிறந்த நிர்வாகத்திறமையுடன் செயல்படும் மாருதி உத்யோக், என்.டி.வி.சி.டி.எல்.எல். ஆகிய நிறுவனங்களின் பங்குகள் விலை ஏறியிருக்கின்றன.

வரும் 2005-ம் ஆண்டு பல தனியார் மற்றும் அரசு நிறுவனங்களுமாக 65,000 கோடி ரூபாய்க்கு பிரதான மார்க்கெட்டில் பங்குகளை விற்கப் போகின்றனவாம்!

அரசு நிறுவனங்களைப் பொறுத்தவரை, ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தின் ஐந்து சதவிகித பங்குகள் விற்கப்பட இருப்பதாகத் தெரிகிறது. அப்படி நடந்தால் நிச்சயமாக அந்தப் பங்குகளை வாங்கலாம்.

மற்ற பங்குகளைப் பற்றி அடுத்த வாரம் பார்ப்போம்.

**வி.கோபாலன்**

# பொறாமை கூடாது!

**இருவருமே முன்னணி ஹீரோக்கள். ரசிகர் மன்றங்களின் எண்ணிக்கை தொடங்கி, படங்களின் பட்ஜெட், தியேட்டர் கலெக்ஷன், எதிர்பார்ப்பு வரை இருவருக்குமிடையேதான் போட்டியே! இதில் இருவரின் ரசிகர்களுக்கிடையேயான சண்டைகள்... மோதல்கள் வேறு. தமிழக இளைஞர்கள் இரு கோஷ்டியாகப் பிரிந்து அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந் நிலையில் இதற்கெல்லாம் என்ன காரணம்? என்று முதன்முதலாக மனம் திறக்கிறார் ஒரு ஹீரோ...**

***உங்களைப் பற்றி அந்த நடிகர் மிக மோசமாக விமர்சனம் பண்ணியிருக்காரே..?***

அவர் என்னைப் பற்றி மிக தரக்குறைவாகப் பேசுற தாக பலரும் சொன்னாங்க. உடனே பதிலுக்கு நீங்களும் ஏதாவது சொல்லணும்னு கேட்டாங்க. அவங்ககிட்டே எல்லாம்... 'உங்களுக்கு நல்லாத் தெரியுமா... அவர் என் பெயரைக் குறிப்பிட்டுப் பேசினாரா?'ன்னு கேட்டேன்.

'இல்லை. பொதுவாகத்தான் பேசினார். ஆனால் அது உங்கள் மீதான விமர்சனமாகத்தான் எங்களுக்குத் தோணுது' என்றார்கள். யார் என்ன பேசினாலும் என் பெயரைக் குறிப்பிட்டுப் பேசாதவரை, என்னைப் பற்றி பேசியதாக நான் எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை. இதை என் ரசிகர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

***உங்கள் ரசிகர்களுக்கும், அவர் ரசிகர்களுக்கும் இடையில் சண்டை, மோதல் என்றெல்லாம் செய்திகள் வருகின்றனவே?***

இது போன்ற ரசிகர்கள் முதலில் மனப்பக்குவம் அடைய வேண்டும். எவர் ரசிகராக இருந்தாலும், தனக்குப் பிடித்த நடிகரின் நடிப்பை ரசிப்பதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். அந்த ரசிப்புத்தன்மை இன்னொரு நடிகரின் நடிப்பை கேலி செய்யுமளவிற்கு போகக் கூடாது. என் ரசிகர்களாக இருந்தாலும் சரி, அவரின் ரசிகர்களாக இருந்தாலும் சரி இதுதான் நல்லது.

***நடிகர்களுக்குள் நட்பென்பதே சாத்தியமில்லையோ?***

சாத்தியம்தான்! நடிகர்களுக்குள் போட்டி இருக்கலாம். ஆனால் பொறாமை இருக்கக் கூடாது. அப்படி பொறாமை உண்டானால் மட்டுமே நட்பு சாத்தியமற்றுப் போகும். ஒரு நடிகரின் வளர்ச்சிக்கு இன்னொரு நடிகர் உறுதுணையாகவும், வழி காட்டலாகவும் விளங்க வேண்டும். அப்போதுதான் ஒட்டு மொத்த சினிமா இன்டஸ்ட்ரியே வளர்ச்சியடையும். இதை ஒவ்வொரு நடிகரும் புரிந்து கொள்ள வேண்டும்.



***உங்களுக்கும், அவருக்குமான நெருக்கம் எத்தகையது?***

உள்ளத்தால் நானும், அவரும் அண்ணன் தம்பி போலத்தான்! எங்கள் விருப்பங்கள், கருத்துகள் வெவ்வேறாக இருந்தாலும், அதைத் தாண்டிய உறவுநிலை எங்களுக்குள் உள்ளது. இடையில் உள்ளவர்கள்தான் எங்களுக்குள் பிரச்னை உண்டாக்க முயற்சித்துப் பார்க்கிறார்கள்.

இப்படி மனம் திறக்கும் அந்த ஹீரோ... அஜித்? விஜய்? சிம்பு? தனுஷ்? புரட்டுங்கள் பக்கம் 83.

# நாங்க ஜடைக்ஸ்!

செமஸ்டருக்காகப் பாடங்களை எல்லாம் மெனக்கெட்டு தலைகீழாக உருட்டிக் கொண்டிருந்தார்கள் குரோம்பேட்டை எஸ்டிஎன்பி வைஷ்ணவா கல்லூரி மாணவிகள். 'படிச்சது போதும்... அப்படியே நாட்டு நடப்பைப் பற்றியும் ஏதாவது பேசுவோம்' என்று அழைத்தால், அத்தனை பெண்களும் நிமிர்ந்து ஒரு சைலண்ட் லுக் விட்டு விட்டு, மறுபடி படிக்கத் தொடங்கி விட்டார்கள். ''அது சரி... தனுஷுக்கு கல்யாணமாகிடிச்சேங்கிற கவலையிலே உங்களுக்கு எல்லாம் பேச்சே வராதது நியாயம்தான்'' என்று ஒரு பிட்டைப் போட...



எகனாமிக்ஸ் ஃபைனல் இயர் படிக்கிற ஆர். விஜயலட்சுமி கோபலட்சுமியாகவே மாறி விட்டார். (தைரிய லட்சுமி?) ''சினிமா நடிகைகளைப் பார்த்து கனவு கண்டு கோவில் கட்டுறதெல்லாம் ஆம்பளைங்க அகராதியிலேதான் சார்! பொண்ணுங்க எப்பவுமே சமர்த்தோ சமர்த்து. தனுஷும், ஐஸ்வர்யாவும் பொருத்தமான ஜோடி. இதிலே நாங்க ஏன் கவலையும், பொறாமையும் படப் போறோம்?'' என்றார்.

எஸ். பாரதி ஃபைனல் இயர் கார்பரேட் படிக்கிறார். தஞ்சாவூர் பெயிண்டிங், டிராயிங் என்று வரிசையாகச் சொல்லிக் கொண்டே வெகு அழகாக விரல்களை மடக்குகிற பாரதி, பியூட்டிஷியன் கோர்ஸும் படித்திருக்கிறாராம்.

''வானத்துக்குக் கீழே இருக்கிற அத்தனையையும் முடிஞ்சளவிற்குக் கத்துக்கணும்னு நினைக்கிற மனுஷி நான். ஆனா... இன்னும் இருக்கு சார் நீண்ட தூரம்!'' என்கிறார் கவிதையான தன்னடக்கத்துடன்!

தருமி நாகேஷ் பாணியில், ''அழகு என்பது?'' என்று ஒரு கேள்வியை வீசினோம். யோசிக்கவே யோசிக்காமல் அசால்டாக ''அழகு என்பது அழகானது'' என்றார். (அடங்கொப்புரானே!)

திடீரென்று, ''கிஸ்பான்னா என்னன்னு தெரியுமா?'' என்று கேட்டார் அழகுப் பெண் ஆர்த்தி. ஏதோ அஜால் குஜால் மேட்டரோ என்கிற நப்பாசையுடன்.

''அடச்சே... அதில்லை. நாங்க கலைச்செல்வி, இந்துமதி, ஷீலா, சந்தியா, பொன்லதா, ஆர்த்தி எல்லாம் படுபயங்கர திக் பிரெண்ட்ஸ். இதை உலகத்துக்கு எடுத்துக் காட்டுற விதமாக, எங்க பேர்லே வருகிற ஆங்கில முதலெழுத்தை எல்லாம் பொறுக்கிப் போட்டு பொதுவான ஒரு பேர் வைச்சிருக்கோம், அதுதான் கிஸ்பா!

'கிஸ்பா டீமோட ரகளைக் கச்சேரி ஏதாவது இருக்கா?' என்றதும்... ''ம்! இருக்கே'' என்று ஆரம்பித்தார் அர்ஷியா.

''ஒரு தடவை வழக்கம் போல காலேஜுக்குக் கட்டடிச்சிட்டு சினிமாவுக்குக் கிளம்பிட்டோம். பாட்டும், கூத்துமா எக்மோர்ல போய் இறங்கினா, டி.டி.ஆர். அங்கிள் பிடிச்சிட்டாரு. டிக்கெட்டை எடுத்துக் காட்டினோம். பார்த்தால் இரண்டு எக்மோர் டிக்கெட்டாகவும், மீதி இரண்டு சேத்துப்பட்டு டிக்கெட்டாகவும் இருக்கு.

குரோம்பேட்டை ஸ்டேஷன்லே தவறுதலாக் கொடுத்திருக்காங்க. நாங்களும் கவனிக்காமல் வாங்கியாந்திருக்கோம். டிடிஆர் படுஸ்ட்ரிக்ட்! ஆனா அழுது, அழுதே அழகா எஸ்கேப் ஆகிட்டோம். சுத்திட்டு தியேட்டர் வாசலுக்குப் போனா அதே டிடிஆர் அங்கே நின்னுக்கிட்டிருக்காரு. அவரைப் பார்த்ததும் நாங்க மறுபடி அழுகிற எஃபெக்ட்டுக்குப் போக... அந்த நல்ல மனுஷனும் சிரிச்சிக்கிட்டே 'பொம்பளைப் புள்ளைகளும் பொய் சொல்லத் தொடங்கிடுச்சி'ன்னுகிட்டே போயிட்டார். எனிவே, எங்கே இருந்தாலும் வாழ்க அந்த நல் இதயம்'' என்றார் அர்ஷியா.

சௌந்தர்யா, மாலதி, ரமணிபாய் மற்றும்



வி. மைதிலி கோஷ்டியினருக்கு தமிழ் சினிமாவின் மீது ஏகப்பட்ட கோபமிருக்கிறது. கேள்விப்பட்டதும் ஏன்? ஏன்? என்று அலறி விட்டோம்.

''இப்போ எல்லாம் என்ன சினிமா எடுக்கிறாங்க? முழுக்கப் பெண்களை எக்ஸ்போஸ் பண்றது, அரையும், குறையுமாக ஆட விடுறது, பத்து வயசுப் பையனும், எட்டு வயசுப் பொண்ணும் காதலிக்கிற மாதிரி காட்டுறது இதைத்தானே சார் எடுக்கிறாங்க? குடும்பத்தோட போய் எந்தப் படத்தை யாவது பார்க்க முடியுதா?'' என்றார்கள் கோரஸ் குரலில்!

(பின்னணியில் பயங்கர அப்ளாஸ்!)

''இவதான் எங்க டீமோட சின்னக் குயில்'' என்று இந்துமதியைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். கையில் கருமமே கண்ணாக கம்ப்யூட்டர் சயின்ஸ் புக்!

''ஏன் குயில்னு சொல்றீங்க... இவங்க அவ்வளவு கறுப்பாக இல்லையே?'' என்று அப்பாவிக் களையாய் முகத்தை வைத்துக் கொண்டு நாம் சொல்ல... சட்டெனக் கோபமான இந்துமதி, ''இப்படியெல்லாம் வெறுப்பேத்தினா நான் ஒரு பாட்டுப் பாடிடுவேன்'' என்றார். ''ஐயையோ வேணாம் தாயே'' என்று அலறிய அவரின் நண்பிகள், ''சார்... வெறுப்பேத்தாமல இந்து சொல்ற கடிஜோக்கைக் கேளுங்க சார்'' என்றனர் பரிதாப + பயந்து போன குரலில்!

''அந்த டாக்டர் தன்னுடைய கிளினிக்லே ஏன் கிரைண்டர் வைச்சிருக்கார் தெரியுமா?''

''தெரியலையே!''

''அடிபட்டு வர்ற நோயாளிக்கு மாவுக் கட்டு போடுறதுக்காகவாம்!''

(ஆ! இதுக்கு நீங்க பாடியே இருக்கலாம் இந்துமதி)

**நா**ம் அப்படியொரு கஷ்டமான கேள்வியைக் கேட்போம் என்று யாரும் எதிர்பார்க்கவே இல்லை. கேள்வி கேட்ட உடனே, ஸ்டாப் பிளாக்கில் அத்தனை பெண்களும் எஸ்கேப்!

''உங்களில் எத்தனை பேருக்கு சேலை கட்டத் தெரியும்?'' இதுதான் நாம் கேட்ட கேள்வி. 'இன்னொரு கேள்வி' என்று நாம் கேட்க வாயெடுத்ததும், இந்துமதி பாட ஆரம்பிக்க... ஸ்டாப் பிளாக்கில் இம்முறை நாம் எஸ்கேப்!

**- பாலமுருகன்**

படங்கள் : **யுகந்த்**



# மகா நடிகன்

முழு நீள அரசியல் நையாண்டிப் படமெடுப்பதில் ஆபத்தும் உண்டு, அனுகூலமும் உண்டு. நையாண்டியின் அளவுகோல் உயர்ந்துவிடும் பட்சத்தில், அவதூறுப் பிரசாரமாகி விடுவது ஆபத்து. குறைந்த பட்ச வெற்றிக்கு உத்திரவாதம் இருப்பது அனுகூலம்.

மகாநடிகனில் சம கால அரசியல் நிகழ்வுகளை காட்சிகளாக்கியிருக்கும் இயக்குனர், எல்லை மீறாமல் கட்டுப்பாடு காத்திருக்கிறார். ஆனால் எம்.ஜி.ஆர், கலைஞர், ஜெயலலிதா, வைகோ, ராமதாஸ் என்று யாரையும் விட்டு வைக்கவில்லை.

இதை விடப் பெரிய துணிச்சல், சொந்த வீட்டுக்குள் கல்லெறிகிறோம் என்ற குற்ற உணர்வைத் தூக்கி குப்பையில் போட்டுவிட்டு, சூப்பர் இமேஜ் நடிகர்களின் ஹீரோயிசத்தையும், அவர்களது அரசியல் ஆசைகளையும் நையாண்டி செய்திருக்கும் விதம், முனியாண்டி விலாஸ் மிளகு சூப் மாதிரி செம சுள்ள்ள்....

நாம் அறிமுக ஹீரோவாக நடித்திருக்கும் படத்தை - ஈக்கள் கூட பார்க்க வரவில்லை எனத் தெரிந்ததும், படத்தின் நாயகி தன்னை விழுந்து விழுந்து காதலித்து, இறுதியில் தற்கொலைக்கு முயன்றார் என செய்தி பரப்பி, படத்தை வெற்றி பெறச் செய்வதில் தொடங்கி, தில்லுமுல்லு மகா நடிகராக பட்டையைக் கிளப்பியிருக்கிறார் சத்தியராஜ்.

ஒரு கட்டத்தில் மகா நடிகனாகி முதல்வர் பதவி கைக்கு வரும்போது, அதை என்ன செய்கிறார் என்பதில் கதை முடிந்தாலும், நிஜத்திலும் அது முற்போக்கான கற்பனை மட்டும்தான்.

"பெரிய ஹீரோக்கள், அரசியலுக்கு வரப் போறேன்னு, அடிக்கடி ஏன் அறிக்கை விடுறாங்க தெரியுமா? அப்போதான், நம்ம தலைவர் முதல்வராயிட்டா, வட்டம், மாவட்டம், எம்.எல்.ஏ, மந்திரின்னு பதவி கிடைக்கும், அதை வெச்சு பணம் பண்ணிடலாம்ன்னு ரசிகர்கள் துடிப்பா இருப்பானுங்க. கட்-அவுட்டுக்கு, பாலாபிஷேகம் பண்ணி, படத்தை பத்துத் தடவை பார்த்து ஹிட் பண்ணுவானுங்க. இப்படி உதார் விடுற எந்த நடிகனும் கடைசி வரைக்கும் அரசியலுக்கு வர மாட்டான். அவனுக்கு இந்த மாதிரி சொல்லி, படத்தை ஓட்டினாப் போதும்" ரசிகர்கள் புடைசூழ தியேட்டர் வாசலில் சத்தியராஜ் பேசும்போது, ஸ்டார் கட்டி புண்பட்ட முதல் பெஞ்ச் ரசிகர்கள் விசிலடித்து கை தட்டுகிறார்கள்.

பத்து வருடங்களுக்கு முன்பு வெளியாகி பெரிய பரபரப்பை உண்டு பண்ணியிருக்க வேண்டிய மகா நடிகனை, இப்போது துறுதுறுப்பான நகைச்சுவை நடிகனாக மட்டும் ரசித்துவிட்டு வரலாம்.

**- விஷுவல்தாசன்**

- அபவ் ஆவரெஜ்

‘மகாநடிகன்’
பட இயக்குநருடன்
ஒரு சுறுசுறு
பேட்டி...

**இத்தனை துணிச்சலாக, எல்லாத் தரப்புத் தலைவர்களையும் விமர்சித்து உங்களால் எப்படி கதை எழுத முடிந்தது?**

செய்தித் தாள்களுக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும். எம்.ஜி.ஆர். ஒரு வெற்றிகரமான நடிகராக இருந்து முதல்வரான ஒரே நடிகர். அவருக்குப் பிறகு இப்போது பல நடிகர்கள் அரசியலுக்கு வரப்போவதாக, அடிக்கடி பேசுகிறார்கள். ஆனால் அரசியலில் இறங்கினமாதிரி தெரியவில்லை. இதுவே மீடியாக்களுக்கு பெரிய தீனியாக இருக்கிறது. ஒரு வாசகனாக இந்தச் செய்திகள் என்னை



# மிரட்டல் வர ஆசைப்படுகிறேன்!

– ஷக்தி சிதம்பரம்

வெகுவாக பாதித்தன. செய்தித் தாள்களிலிருந்து கதை தேடப் போய் இப்படியொரு கதைக்கான கருவுக்கு பொறி கிடைத்தது. கொஞ்சம் மிகைப்படுத்திக் காட்டுவது தான் கமர்ஷியல் சினிமா. நிஜத்தை யதார்த்தமாகக் காட்டினால் அது கலை சினிமா. நான் எடுத்திருப்பது கமர்ஷியல் சினிமா. இதற்கு புத்திசாலித்தனம் போதும், துணிச்சல் இரண்டாம் பட்சம்.

**சர்ச்சைகளோடு படமெடுத்தால்தான் விரைவாகவும், மலிவாகவும் கவனத்தை ஈர்க்கமுடியும் என்று நினைத்தீர்களா?**

நான் வைத்திருப்பதெல்லாம் ஒரு சர்ச்சையா? ‘பாரத் பந்த்’ என்ற படத்தில் இந்திய வரைபடத்தை ஒரு கேக்காக உருவாக்கி, அதில் தமிழ்நாட்டை மட்டும் தனியே வெட்டித் தருவார் ஒரு அரசியல்வாதி. இதுபோல் இல்லாமல் நாட்டில் நடக்கிற, பேசப்படுகிற விஷயங்களை நான் நையாண்டி செய்திருக்கிறேன். இவை ஒருபோதும் சர்ச்சைகளை

உருவாக்காது என்று நம்பினேன். நான் எதிர்பார்த்தது போலவே, படம் பார்க்கிறவர்கள் சிரித்துக் கொண்டே தியேட்டரை விட்டு வெளியே வருகிறார்கள்.

***ஜெ.வை இமிடேட் செய்தது போல ஒரு பாத்திரத்தைக் காட்டும்போது அதை நளினமாகக் கையாண்டு இருக்கிறீர்கள். ஆனால் கலைஞர் நள்ளிரவில் கைது செய்யப்பட்டபோது அவரது "அய்யோ கொல்றாங்களே" என்ற அலறலைப் போலவே, ஓர் அரசியல்வாதி பாத்திரம் கைது செய்யப்படும்போது கத்துகிறது. ஏன் இந்த பாரபட்சம்?***

உங்கள் பார்வை அப்படி! முடிந்தால் இன்னொரு முறை படத்தை பாருங்கள்.



***அரசில் - சினிமா உலகம் இரு தரப்பிலிருந்தும் உங்களுக்கு மிரட்டல்கள் வந்ததா?***

நானும் ஒரு மிரட்டலாவது வராதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறேன். ஆனால் பாராட்டுகள்தான் வந்த வண்ணம் இருக்கின்றன.

***இனி அரசியலுக்கு வரப்போவதில்லை என்று ரஜினி உறுதியான முடிவெடுத்துவிட்டதாக செய்திகள் வெளியாகி வரும் நேரத்தில், அவரது அரசியல் பிரவேசத்தை நக்கலடித்திருப்பது, காக்கை உட்கார பனம் பழம் விழுந்த கதையா?***

இல்லவே இல்லை! பல நடிகர்கள் அரசியலுக்கு வரப்போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ரஜினியை மட்டும் நீங்கள் கார்னர் பண்ண முடியாது. ரஜினியைத்தான் மறைமுகமாக விமர்சிக்கிறீர்கள் என்று நீங்கள் அடம்பிடித்தால், சம்பந்தப்பட்ட காட்சியை புதுவையில் நான்கு மாதங்களுக்கு முன் படம் பிடித்தோம். அப்போது ரஜினி பற்றி நீங்கள் சொல்வது போல் எந்தச் செய்தியும் வெளிவரவில்லை.

***நடிகர்கள் முதல்வராக வரத் தகுதியில்லாதவர்கள் என்பதைத் தானே படத்தின் க்ளைமாக்ஸ் மூலம் நெத்தியடியாகச் சொல்லியிருக்கிறீர்கள்?***

தவறு. நான் ஹீரோவாக சித்திரித்திருக்கும் சத்யா என்ற நடிகன், தில்லு முல்லுகளே வாழ்க்கை என்று ஆரம்பித்தவன். அப்படிப்பட்ட ஒரு தப்பான பாத்திரம் முதல்வராகக் கூடாது என்று தான் சொல்லியிருக்கிறேன்.

***படத்தில் படித்த இளைஞர்களை அமைச்சர்களாக ஆக்குவதன் மூலம், அரசில்வாதிகளுக்கு ஒட்டுமொத்தமாக பெயில் மார்க் போட்டிருக்கிறீர்களே?***

இதை வேண்டுமானால் ஒரு இயக்குனரின் பார்வை என்று ஒப்புக்கொள்கிறேன்.

***மகாநடிகன் என்று தலைப்பு வைத்து, ஹீரோவை தரக்குறைவான ஆளாகக் காட்டுவதன் மூலம் தலைப்பிலேயே நக்கல் ஒளிந்திருக்கிறதுதானே?***

அரசியல்வாதிகளும், சினிமாக்காரர்களும் என்னை விரோதியாக சித்திரித்துவிடுவது என்ற முடிவோடு வந்திருக்கிறீர்களா? (சிரிக்கிறார்)

**- ஜெய்**

# ரீமிக்ஸ் கலக்கல்!




"இந்த இசை சீஸனுக்கு சக்கைப் போடு போடும் உங்க கம்பெனியின் ஆடியோ கேஸட், சிடி எது?" என்று காஸ்மிக் மியூஸிக் நிறுவன விற்பனை மேலாளர் முத்துக்குமாரைக் கேட்டோம்:

"எல்லா கர்நாடக இசை ஒலி நாடாக்களும் நன்கு விற்கின்றன. திரை இசைப் பாடல் மார்க்கெட் இறங்கு முகத்தில்தான் இருக்கிறது.

'நவரச நவராக தில்லானா' என்கிற ஒலிநாடா நன்றாக விற்பனையாகிறது. இதில் குன்னக்குடி வைத்தியநாதன் ஒன்பது ராகங்களில் அவராகவே தில்லானாவை வாசித்திருக்கிறார். கதிரியின் 'ட்வின் ஜர்னி' என்கிற சாக்ஸஃபோன் ஒலிநாடாவில், முதல் இரு வால்யூம்களும் சூப்பர் ஹிட். இப்போது நாங்கள் வெளியிட்டிருக்கும் மூன்றாவது வால்யூம்கூட நன்றாகப் போகிறது. ராஜேஷ் வைத்யாவின் ஃப்யூஷன் (பஞ்சரத்ன கீர்த்தனை உட்பட) நன்கு விற்பனையாகிறது. இதில் பாடல்களை அதிகமாக மரபு மாறாமலும், பின்னணி இசையை மேல்நாட்டு இசைக் கருவிகளைப் பயன்படுத்தியும் தந்திருக்கிறோம்.

ஆனால், கர்நாடக இசையின் புனிதத்தை இதுபோன்ற முயற்சிகள் கெடுப்பதாகச் சிலர் கூறுகிறார்கள். ஆனால், இந்த வியாபாரத்தில் பலவித சோதனை முயற்சிகளை மேற்கொண்டுதான் தாக்குப்பிடிக்க வேண்டியிருக்கிறது. இதுபோன்ற முயற்சிகளுக்கு நல்ல வரவேற்பும், நிறைய விற்பனையும் இருப்பதால்தான் இவற்றைத் தொடர்கிறோம். சொல்லப் போனால், ஃப்யூஷன் என்கிற வார்த்தை புழக்கத்திற்கு வருவதற்கு முன்பே, 'உலவும் தென்றல்' என்ற ஒலிநாடாவை வெளியிட்டோம். 'உலவும் தென்றல் காற்றினிலே', 'உன் அழகைக் கன்னியர்கள் சொன்னதினாலே', 'ஆடைகட்டி வந்த நிலவோ' போன்ற பாடல்களை மேலை நாட்டு இசைப் பாணியில் மாற்றிக் கொடுத்திருக்கிறோம். பின்னணியில் வரும் தபேலா, கஞ்சிரா போன்றவற்றுக்குப் பதிலாக ரிதம் பாக்ஸ்.



• முத்துக்குமார்

எல்.வி.கணேஷ் இசையமைப்பில் நித்யஸ்ரீ, ஓ.எஸ்.அருண், காயத்ரி கிரீஷ், எஸ்.பி.பி., உன்னிகிருஷ்ணன் போன்றோர் பாடிய 'எக்ஸ்ப்ளோஷன்' எனும் எங்களது ஃப்யூஷன் முயற்சிக்கும் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. இதே சூட்டோடு ஹரிதாஸ் பஜனைப் பாடல்களை குன்னக்குடி வைத்தியநாதனின் (பாடுபவர் குரல், ஒரு வரி முடிந்ததும் அதை எதிரொலிக்கும் கூட்டுக் குரல் ஆகிய இரண்டுக்குமாகச் சேர்த்து) வயலின் இசையில் வெளியிட உள்ளோம்."

- ஜி.எஸ்.எஸ்.

# கல்யாணி

யார் போறாத வேளையோ, என் மனைவி கல்யாணிக்குக் கச்சேரி பண்ண வேண்டும் என்கிற ஆசை அவளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. ஒரு நவராத்திரியில்தான் இதற்கான விதை தூவப் பட்டது. இரண்டு வீட்டு கொலுவில் கல்யாணி பாடி னாள். ''சிவகாமியும், வெங்கடேசன் மனைவி ரமாவும், 'மாமி, உங்க குரல் அசப்புல பாம்பே ஜெயஸ்ரீ குரல் மாதிரியே இருக்கு'ன்னு சொன்னாங்க'' என்று காராமணி சுண்டலைக் கொடுத்தபடியே சொன்னாள். உள்ளே தண்ணீர் கொண்டு வர அவள் போனபோது, ஒரு வாய் சுண்டலைச் சாப்பிட்டு விட்டு "நன்னாத்தான் இருக்கு" என்றேன். டம்ளரை டக்கென்று வைத்துவிட்டு, "அவா சொன்னப்புறம் தான் உங்களுக்குத் தெரியறதாக்கும்'' என்றாள். தவறான வார்த்தையைப் போட்டுவிட்டோம் என்று உணர்ந்தேன். ஆனாலும் சமாளித்து "என்ன கல் யாணி, உன்னைப் பெண் பார்க்க வந்தபோதே தெரிஞ்சதுதானே? அன்னிக்கு நீ பாடின காபி ராகத்தை இன்னும் என்னால் மறக்க முடியல'' என்று பேச்சைத் திருப்ப, அது வேறு விதமாக முடிந்தது. ''தெரிஞ்சு என்ன! இத்தனை வருஷம் ஆச்சே, ஒரு கச்சேரிக்கு ஏற்பாடு பண்ணியிருப்பேளா? நான் மட்டும் உங்களைக் கல்யா ணம் பண்ணிக்காம இருந்திருந்தா இத்தனை நேரம் ஒரு பத்து, இருபது கேசட் வந்திருக்கும்'' என்று பெருமூச்சுவிட்டு... ''ம், எல்லாரும் ரகுநாதன், மஹாதேவன் ஆயிடுவாளா?'' என்றாள். பேசா மல் இருப்பதே உத்தமம் என்று உள் மனது எச்சரிக்கவே, சுண் டலை முழுவதுமாகத் தின்றேன். சற்று இடைவெளிவிட்டு அவளே ஆரம்பித்தாள். ''இன்னிக்கு சுதாவும், நித்யஸ்ரீயும் நன்னா பாடிண்டு இருக் கான்னா, அவா வீட்டுக்காராதான் காரணம். எவ் வளவு அனுசரணை!'' என்றாள்.

எனது சிநேகிதர் ராமநாதன், S.J. பவுண்டேஷன் இந்த வருடம் புதிதாக ஒரு இசை விழா நடத்துவதா கவும், 'நான் சொல்லி சான்ஸ் வாங்கித் தருகிறேன்' என்றும் அவர் கூறினார்.

ஒரு நல்ல நாளில் காலை ராமநாதனுடன், S.J.பவுண்டேஷன் கோபாலகிருஷ்ணன் வீட்டு ஹாலில் காத்திருந்தேன் – கல்யாணியின் பயோ டேட்டா, அவள் கல்யாணத்துக்கு முன்பு பண்ணிய ஒரே ஒரு கோயில் கச்சேரியின் பிளாக் அண்ட் வொயிட் போட்டோவுடன்... உள்ளேயிருந்து வந்த கோபாலகிருஷ்ணன், ராம நாதனைப் பார்த்தவுடன், "வாருங்கோ'' என்றார்.

"சார்தான் நான் சொன்ன "கச்சேரி ஆர்டிஸ்ட்'' என்ற ராமநாதன், அவரிடம் கச் சேரியை ஸ்பான்ஸர் செய் பவரின் கடிதத்தைக் கொடுத் தார். அவர் கடிதம் பார்த்த சந்தோஷத்தில் "நீங்கள்தானா? சிட்சை யாரு?'' என்றார். நான், "மாயவரம் கமலம்'' என்றேன். ''அவா பெரிய சங்கீதம் ஆச்சே? நீங்க எப்படி



"அவாகிட்டே?" என்றார். ராமநாதன் என் அவஸ்தையைப் புரிந்துகொண்டு "ஸார் பாடலை. அவர் மனைவி கல்யாணி" என்று என் கையில் இருந்த தஸ்தாவேஜுகளைப் பிடுங்காத குறையாகப் பறித்து, அவரிடம் ஒப்படைத்தார். முதலில் போட்டோவைப் பார்த்தார். "ரொம்பச் சின்னவாளா?" என்றார் ராமநாதனிடம். "சின்ன வயதில் எடுத்தது" என்றேன் ஸ்ருதி சேராமல். "நல்ல பாடாந்திரம். என் பொண்ணு சுதா போன தடவை பிரேயர் பாடினாளே, இவாகிட்டதான் கத்துக்கறா" என்று ராமநாதன் சொன்னதும், கோபாலகிருஷ்ணன் போட்டோவையும் ராமநாதன் லெட்டரையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, "ம்... கொஞ்சம் முன்னாடி வந்திருக்கணும்" என்றார்.

"கிளம்பினோம். ஸ்கூட்டர் கொஞ்சம் படுத்திடுத்து. இல்லேன்னா அரை மணி முன்னே வந்திருப்போம்" என்றேன். கோபாலகிருஷ்ணன் என்னை ஒரு ஜந்து மாதிரி பார்த்துவிட்டு, ராமநாதனிடம் "நான் ஆகஸ்டிலேயே எல்லாம் முடிவு பண்ணிட்டேன். நீங்க அக்டோபர்ல கேக்கறேள்!" என்றவர், யோசித்து விட்டு, "நல்லவேளை, ஜெயந்தி ராஜனுக்கு போட்ட டேட் இருக்கு. அவளுக்கு டெலிவரி டயம். அந்த ஸ்லாட்டைக் கொடுத்துடறேன்" என்றார். டைரியைப் புரட்டி, "27ம் தேதி சாயந்திரம் 7.30 - 8.45. மயிலாப்பூர் ராகசுதா ஹால்" என்றார். ராமநாதன் பெருமிதத்துடன் என்னைப் பார்த்தார்.

# கச்சேரி buzz.com



பாட வாய்ப்புக் கிடைத்தது தான் தாமதம்... கல்யாணி எலக்ட்ரானிக் ஸ்ருதிப் பெட்டி வாங்கினாள். இரண்டு பட்டுப் புடவை வாங்கினாள். மேட்சிங் ப்ளவுஸ் இரண்டு தைத்து வைத்துக்கொண்டாள். உறவினர்களுக்கெல்லாம் கடிதம் எழுதி நலம் விசாரித்து விட்டு, கடைசியில் கச்சேரி பற்றி விரிவாக எழுதினாள்.

"நம்ம ஃப்ளாட்டிலேர்ந்து எல்லோரும்

ஹேமா

வரேன்னு சொல்லியிருக்கா... எல்லாரையும் கால் டாக்சியிலா அழைச்சுண்டு போக முடியும்? அவாளுக்கெல்லாம் வேன் புக் பண்ணிடுங்கோ" என்றாள் என்னிடம்.

அந்த நாளும் வந்தது. காலை வந்த பேப்பரில் பக்கம் முழுக்க இருந்த சபா, கச்சேரி பெயர்களில் கல்யாணி பெயரும் இருந்தது. "கல்யாணி... கங்கிராட்ஸ்... உம் பேர் பேப்பர்ல வந்துடுத்து" என்றேன்.

பிராக்டீஸ் செய்து கொண்டிருந்தவள் மறுபடியும் ஆலாபனைக்குத் தாவி நிறுத்தி, என்னைப் பார்க்காமலேயே "இன்னிக்கு ஆபீஸுக்கு லீவு போட்டுடுங்கோ'' என்றாள். அது நான் ஏற்கெனவே தீர்மானித்த விஷயம் என்றாலும், அவள் சொல்லிச் செய்வது போல் இருக்கட்டும் என்று "சரி" என்றேன். காபி ஆற்றும்போது பார்த்தால், அவள் பார்வையில் ஒரு வித்தியாசம் தெரிந்தது. "என்ன கல்யாணி?" என்றேன். "காலையிலே எழுந்திருக்கும்போது கழுத்து சுளுக்கிடுத்து'' என்றாள்.

மகன் அஸ்வின் டியூஷனுக்குப் போக வேண்டாமென்று முடிவானது.

மாலை வேன் வந்து விட்டது.

கல்யாணி பிளாஸ்கில் மிளகுத் தூள், மஞ்சள் பொடி போட்ட பாலைப் போட்டு அஸ்வின் லன்ச் கூடையில் எடுத்து வைத்துக் கொண்டாள். ஸ்ருதிப் பெட்டி, டவல் எல்லாமும் தயாரானது. ஃபிளாட் கூட்டம் சூழ்ந்து கொண்டது. கல்யாணி எல்லாரையும் பார்த்து வணங்கி "அவசியம் வாங்கோ" என்று விடை பெற்றாள்.



"ஹலோ, தின நியூஸ் ஆபீஸா? இரண்டு கவர் அனுப்பியிருக்கேன். முதல் கவர்ல என்னோட அறிக்கை இருக்கு... இன்னொண்ணுல 'பல்டி' அறிக்கை இருக்கு..."

– லெநா. சிவகுமார்

"நிச்சயம்" என்றார்கள்.

நானும் கல்யாணியும் அஸ்வினும் பயணித்த கால் டாக்ஸி ஆழ்வார்பேட்டைக்கு வந்துவிட்டது. இறங்கினோம். முப்பது நாற்பது பேர் இருந்தார்கள். ஆறு மணிக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. பக்கவாத்யம் மிருதங்கம் மணியும், வயலின் ராதிகாவும் வந்துவிட்டார்கள். ஆயத்தம் நடந்தது. நான் கேமராவில் செல் போட்டு பிலிம் ரோலைப் போட்டு மூடி, தயாரானேன். முன்ஜாக்கிரதையாக ஒரு போட்டோ எடுக்கலாம் என்கிற போதுதான் கேமரா ஒத்துழைக்க மறுத்தது. அஸ்வினைத் தேடி ஓடினேன். அவன் தன் மெக்கானிக் மூளையைப் பயன்படுத்தி ஒரு நொடியில் "பேட்டரி காலி" என்றான்.

"போட்டேனே."

"அப்பா இது ஃப்ளாஷுக்கு. இது பாரு" என்று கேமராவுக்குள் வேறு ஒரு இடத்தைத் திறந்து காட்ட, அந்த இடம் வெறிச்சோடி கிடந்தது!

முந்தைய கச்சேரி அம்மணி தில்லானா ஆரம்பித்து முடித்துவிட்டார். கச்சேரி முடிந்ததும் கோபாலகிருஷ்ணன் மைக்கை வாங்கி, அதை ஆன் பண்ணாமலேயே அவர்களை வாழ்த்திவிட்டு, பிறகு எலக்ட்ரீஷியன் வந்து மைக் ஆன் செய்ய, பெரிய குரலில் "கல்யாணி அவர்களின் இசை நிகழ்ச்சி தொடரும்" என்று அறிவித்தார். இந்த அறிவிப்புக்காகக் காத்திருந்தவர்கள் போல், பேரைத் தெரிந்து கொண்டு கிட்டத்தட்ட எல்லோரும் சட்டசபையில் வெளிநடப்பு செய்வது போல், எழுந்து விட்டார்கள். மேடையைச் சுற்றி இருந்தவர்களும் அந்த அம்மாளுடன் நகர, என்னையும் அஸ்வினையும் சேர்த்து மொத்தம் ஆறுபேர் மட்டுமே இருந்தோம். கல்யாணி மேடை ஏறினாள். கோபாலகிருஷ்ணனைப் பார்த்து விறைப்பாக ஒரு நமஸ்காரம் பண்ணி சிரிக்க முயன்றபோது, கழுத்து வலி அவள் முயற்சிக்கு கொஞ்சமும் ஒத்துழைப்பு தரவில்லை. அவர் முகம் மாறியது. கல்யாணி இதைக் கவனித்து, உடனே என்னைக் கூப்பிட்டு தன் கழுத்துச் சுளுக்கை அவரிடம் சொல்லச் சொன்னாள்.

கோபாலகிருஷ்ணன் என் உயரத்துக்

குக் குனிந்து ஓம் என்னும் ப்ரணவ மந்திரத்துக்கு பொருள் கேட்பது போல் கேட்டுக் கொண்டு, "யாரையும் இன்வைட் பண்ணலையா?" என்றார். "வருவார்கள்" என்றேன். மைக்கை வாங்கி கழுத்துச் சுளுக்குக்கு நடுவிலும் கச்சேரி பண்ண வந்த கல்யாணியைப் பாராட்டினார். ஸ்ருதி சேர்ந்தது. ஹால் கடிகாரம் ஏழரை மணியைக் காட்டியதும் கோபாலகிருஷ்ணன் கண் அசைக்க, கல்யாணி கண்ணை மூடிக்கொண்டு இசை வெள்ளத்தில் மூழ்கினாள்.

ஹம்ஸத்வனி முடிந்தபோது நான் இரண்டு போட்டோ எடுத்து முடித்திருந்தேன். புதிதாக இரண்டு பேர் வந்து, வாசலுக்கு அருகிலேயே உட்கார்ந்து கொண்டார்கள். முன்வரிசையிலிருந்த வயதான பெரியவர் எழுந்து விட்டார். இதற்கு மேல் தாமதமாகப் போனால், மருமகன் சாப்பாடு போடமாட்டானோ என்னவோ! மூன்றாவது பாட்டு, 'எப்ப வருவாரோ?' பாடினாள். என்னைப் பார்த்து 'ஃபிளாட் மக்கள் எப்ப வருவாரோ' என்று கண்பார்வையில் கேட்டாள். நான் வாசலைப் பார்த்தேன்.

ஒரு வழியாக வேன் கூட்டம் வந்து சபையை நிறைத்தது. ராமநாதன் பிரதோஷம் கூட்டம்தான் தாமதத்திற்கான காரணம் என்று என்னிடம் விளக்கினார். எல்லோரும் ஆர்வமாகப் பாட்டு கேட்க ஆரம்பிக்க, கல்யாணி ஹோம் பிட்சில் விளையாடும் கிரிக்கெட் வீரர்போல, ரொம்ப நேர்த்தியாக 'காண கண்கோடி வேண்டும்' பாடினாள். மணி எட்டு பத்தை நெருங்க, ஃபிளாட் கூட்டம் தவிர இருந்த மூன்று பேரும் மெதுவாக எழுந்து போக ஆரம்பித்தனர். ஃபிளாட் குழந்தை ஒன்று, நாற்காலிக்கிடையில் மாட்டிக் கொண்டு ஓவென்று கத்த, கல்யாணி கண் திறந்தாள். கடிகாரத்தைக் காட்டினேன். தெரியுமென்று தலை அசைத்து ஆலாபனையைப் பாதியில் விட்டுவிட்டு, வயலினுக்கு சான்ஸ் இல்லாது, சுரத்து இல்லாமல் பாடி முடித்தாள். கோபாலகிருஷ்ணன் "ரொம்ப நன்னாயிருந்ததாக்கும்! அடுத்த வருஷம் நல்ல கூட்டம் வரும்'' என்று மூன்று கவர்களைக் கொடுத்துவிட்டு, நாளைய ஏற்பாடுகளை கவனிக்க புறப்பட்டு விட்டார்.

ஃபிளாட் ஜனங்கள் ஓடிவந்து கல்யாணிக்குக் கைகொடுத்து கீழே இறங்கினார்கள். கல்யாணி மீதியிருந்த பாலைக் குடித்தாள்.

அஸ்வின் மாஸா குடித்துக்கொண்டே "கால் டாக்ஸி வந்துடுத்து" என்றான். வழியில் என்னிடம் "கச்சேரி எப்படி?" என்றாள் கல்யாணி. "நன்றாக இருந்தது" என்றேன்.

வேனுக்குப் பணம் கொடுத்துவிட்டு, கால் டாக்ஸியை அனுப்பிவிட்டு வந்தேன். கல்யாணி வழக்கமான புடைவையில் வந்து, அஸ்வின் வாக்மேனில் ஸ்பீக்கர் அருகில் வைத்து ரிகார்ட் செய்த கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருந்தாள். சாப்பிட்டுவிட்டு படுக்கும்போது மணி பதினொன்று.

ஒரு வாரம் கழித்து மயிலாப்பூர் டைம்ஸில் S.J.பவுண்டேஷன் இசைவிழா பற்றி ஒரு கால் பக்கம் நியூஸ் வந்திருந்தது. அதில் துவக்க விழா பேச்சுக்களை பற்றி விரிவாக எழுதி, கோபாலகிருஷ்ணன் மேடையில் மாலை போடும் போட்டோவைப் போட்டு, கடைசியில் ராம் சுந்தர், லலிதா, கல்யாணியின் கச்சேரி நடந்தது என்று எழுதியிருந்தது. படித்து முடித்தவுடன் கல்யாணியைப் பார்த்து, அவள் ஏமாற்றத்தை எதிர்கொள்ளும் சக்தி எனக்கு இல்லாததால், கழுத்து சுளுக்கியவன் போல் ''ஆபீஸ் கிளம்பறேன்'' என்று ஆபீஸ் புறப்படத் தயாரானேன் நான். ○



''நூறு மீட்டர் ரேஸ் ஓடறவரை கிரிக்கெட் ஆடவிட்டது தப்பா, ஏன்?''
''ரன் எடுக்கற ஒவ்வொரு முறையும், பவுண்டரி லைனைத் தாண்டி ஓடிடறாரே!''

- வெ.சீதாராமன்




வழங்கும்

# இயர் பிளானர் 2005 இலவசம்

# சுழல் கோப்பை யாருக்கு?

– கவர் ஸ்டோரி




வண்ண காலண்டர் 2005

# சினிமா எடுக்கும் பாம்பு!

– சிரிப்புக் கதை

## 1000/– ரூபாய் பரிசுப் போட்டி

# கோகுலம்

ஜனவரி 2005

ரூ.6/– மட்டுமே

# நடக்குமென்பார்; நடக்கும்!

## டிசம்பர் 22 முதல் 28 வரை

## அக்னிசர்மா பக்கம்



ரிஷப ராசிக்காரரான டைரக்டர் சரண் எடுத்த காரியம் எல்லாவற்றிலும் வெற்றி அடைவாராம்!

**மேஷம்:** மானிட்டர் நல்லா இருந்தாத்தாங்க எந்த புரோக்ராமையுமே பார்க்க முடியும். ஆரோக்கியமிருந்தாத்தான் ஓடியாடி வாழ்க்கையில போராட முடியும். அதனால ஹெல்த்தை கவனமா பாத்துக்கோங்க. காரியங்களெல்லாம் அனுகூல மாவே நடக்கும்னாலும், பண விஷயத்திலேயும், பயணங்கள்லேயும் ஜாக்கிரதையா இருங்க. ஆபீஸ்ல கூடுதல் பொறுப்புகள் வந்து சேரும். தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு முன்னேற்ற மான நேரம்தான். குடும்பத்தில் குருபலன் காரணமா சுபச் செலவுகள் ஏற்படும். பெண்களுக்குப் புதிய பொருள் சேர்க்கையால மகிழ்ச்சி ஏற்படும்.

**ரிஷபம்:** உங்க துணிவும் தன்னம்பிக்கையும் கூடி எல்லாக் காரியங்களையும் சாதிக்கிற நேரங்க இது. எதிர்க்கணும்னு நினைக்கிறவங்க அட்ரஸ் இல்லாமப் போயிடுவாங்க. எதிர்லேயே இருந்தாலும் அடக்கித்தான் வாசிப்பாங்க. அதனால உங்க ரூட் கிளியராயிருக்கு. ஆபீஸ்ல உங்களுக்கு மேலே இருக்கிறவங்க உங்களுக்கு அனுகூலமா நடப்பாங்க. தொழில், வியாபாரம்னு உள்ளவங்க எதிர்பார்த்த உதவிகள் கிடைச்சுடும். குடும்பத்தில் மகிழ்ச்சி, சுப காரியம், பூர்வீகச் சொத்து சேருதல்னு மகிழ்ச்சி கரமா இருக்கும். பெண்களுக்கு உடன் பிறந்தவர் களால சில நன்மைகள் கிடைக்கும்.

**மிதுனம்:** அறிவும் துணிவும் ஒண்ணாச் சேர்ந்தா ஆகாத காரியம் எதுவும் உண்டா சொல்லுங்க! இப்ப உங்களால ஆகாதது ஒண்ணுமேயில்லீங்க. புது அறிமுகம் சில கிடைக்கும். ஆபீஸ்ல நீங்க கேட்டபடி இடமாற்றம், பதவி உயர்வு எல்லாம் ரெடியாயிட்டிருக்கு. தொழில், வியாபாரத்தில் அளவான முன்னேற்றம்தான். குடும்பத்தில வீணான வாக்குவாதம், கடுமை யான பேச்சு ரெண்டையும் குறைச்சிக்கறது நல்லது. பெண் கள் ஆரோக்கியத்தில் கவனமா இருக்க வேண்டிய நேரம்.

**கடகம்:** நின்னு போயிருந்த உங்க முக்கிய காரியங்களெல் லாம் நகர ஆரம்பிச்சு வேகம் பிடிக்கும். அதுக்குன்னு அவ சரப்பட்டுடாதீங்க. நிதானமா முன்னேறுங்க. பொருளாதாரம் பெட்ரோல் விலை மாதிரி ஏறி ஏறி இறங்கும். புதியவர்கள் கிட்ட பழக நேர்ந்தால் அள வோட பழகுங்க. தொழில்

வியாபாரம்னு இருக்கறவங்களுக்கு எதிர்பார்த்த கடனும், வரவேண்டிய பணமும் வந்து சேரும். குடும்பத்திலயும் எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேர்ந்து மகிழ்ச்சி தரும். பெண்களுக்கு எண்ணம் போல எல்லாம் நடக்கும்.

**சிம்மம்:** சந்தர்ப்பம்தான் மனுஷனை உருவாக்குதுன்னு ஒரு பழமொழி இருக்கு. உங்க திறமைகளை வளர்த்து முன்னேறக்கூடிய சந்தர்ப்பம் வரக்கூடிய நேரங்க இது. சரியா பயன்படுத்துங்க. ஆபீஸ்லேயும் உங்க திறமை பாராட்டைத் தேடித் தரும். புது முயற்சிகள் வெற்றி பெறும். தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு ஏற்றமான நேரம். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.

**கன்னி:** நிர்வாகத் துறையில இருக்கிறவங்களுக்கு மதிப்பும், அந்தஸ்தும் கூடுற நேரம் இது. கல்வி, விஞ்ஞானத் துறைகள்ல இருக்கிறவங்க முன்னேறு வாங்க. ஆபீஸ்ல அனுகூலமான சூழ்நிலை நிலவும்னாலும் சுமுகமாப் பழகி நிலைமையைத் தக்க வைச்சுக்கறது நல்லது. தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு சாதாரணப் பலன்களும், கொஞ்சம் செலவுகளும் கூடும். குடும்பத்தில் ஒற்றுமை கூடும். பெண்கள் ஆரோக்கியத்தில் கவனமா இருக்கணும்.

**துலாம்:** உங்க நிதானத்துக்கு சோதனையான நேரங்க இது. சிறு பிரச்னைகள் நச் நச்சுன்னு தொல்லை கொடுக்கும். நிதானமா செயல்பட்டா பிரச்னைகளைத் தீர்க்கறது சுலபம். உங்க திறமையும் உழைப்பும் வீண் போகாம பாத்துக் கோங்க. ஆபீஸ்லேயும் கூடுதல் பொறுப்பு, இடமாற்றம்னு ஏற்படலாம். தொழில்

## இது நல்ல வாரம்

| கிழமை | தேதி | நட்சத்திரம் | திதி | மற்றவை |
|---|---|---|---|---|
| புதன் | டிசம். 22 மார்க.7 | பரணி | ஏகாதசி | வைகுண்ட ஏகாதசி |
| வியாழன் | டிசம். 23 மார்க.8 | கார்த்திகை | துவாதசி | பிரதோஷம் |
| வெள்ளி | டிசம். 24 மார்க.9 | கார்த்திகை | திரயோதசி | - |
| சனி | டிசம். 25 மார்க.10 | ரோகிணி | சதுர்த்தசி | தத்தாத்ரேய ஜயந்தி |
| ஞாயிறு | டிசம். 26 மார்க.11 | மிருக சீரிஷம் | பௌர்ணமி | - |
| திங்கள் | டிசம். 27 மார்க.12 | திருநாதிரை | பிரதமை | ஆருத்ரா தரிசனம் |
| செவ்வாய் | டிசம். 28 மார்க.13 | புனர்பூசம் | திருதியை | - |

**பரிகாரம்:** சில சமயங்களில் தெரிந்தோ, தெரியாமலோ தவறு செய்துட்டு, அதன் பலனை அனுபவிக்கும்போது ரொம்ப வேதனைப்படுவோம். எப்படி இதைத் தீர்க்கறதுன்னு வழி தெரியாம, அதிலேயே சிக்கி மீள முடியாம அவதிப்படுவோம். அகங்காரத்தால வறுமை, இல்லாமைன்னு அவதிப்பட்ட பிரம் மனுக்கே சாபம் நீக்கின இடம் இது. எல்லோர் தலை யெழுத்தையும் எழுதுகிற பிரம்மன், தன் தலையெழுத்தைத் திருத்திக்க இங்கேதான் வந்தாராம். எங்கே? மதுரைக்குத்தான். மதுரை மீனாட்சியை மட்டும் வணங்கிட்டுப் போகாம, தெற்கு மாசி வீதியில இருக்கிற காமாட்சியையும் வந்து வணங்குங்க. மீனாட்சி வாழ்வையும், வளத்தையும் தருவான்னா, இந்த காமாட்சி சாபத்தையும், துயரத்தையும் போக்கிடுவா.

- வி



வியாபாரத்தில் திருப்பங்கள் காத்திருக்கு. குடும்பத்தில் சில பிரச்னைகள் வந்து போகலாம். கவனமா இருங்க. பெண் களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய வாரம்.

**விருச்சிகம்:** கதவைத் தட்டற சத்தம் கேக்குதா பாருங்க. அதிர்ஷ்ட தேவதை தாங்க அது, விடாதீங்க. வி.ஐ.பிக்கள் ஆதரவும், தேவைப்பட்ட பண உதவியும் கிடைக்கும். ஆபீஸ்ல எல்லா வகையிலும் அனுகூலமான சூழ்நிலை நிலவும். தொழில், வியாபாரம்னு இருக்கறவங் களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். இதுவரை இருந்த நெருக்கடி தீரும். குடும்பத்தில் சுபகாரிய முயற்சிகள் வெற்றி பெறும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.

**தனுசு:** ஒண்ணு நினைச்சா வேற ஒண்ணு வந்து நிக்கும். நினைக்காததும் கூட வந்து நிக்கும். தெய்வ பலத்தை கூட்டிக்கிட்டா எல்லாத்தையுமே உங்களுக்கு வெற்றியா மாத்திக்கலாம். துணிவும் தன்னம்பிக்கையும் உங்களுக்கு பக்கபலமா இருக்கட்டும். ஆபீஸ்ல நிதானம் தவறாம சகஜமாப் பழகறது நல்லது. தொழில், வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் வரும்போது நிதானமா செயல்படுங்க. குடும்பத்தில் உடன்பிறந்தவர்களால சில பிரச்னைகள் வரலாம். பெண்களுக்குச் சாதாரண வாரம்.

**மகரம்:** அறிவும் திறமையும் சேரும் போது சாதிக்க முடியாதது ஏதாவது இருக்கா என்ன? மத்தவங்களுக்கு அப்படியேதும் இருக்கலாம். உங்களுக்கு இல்லை. வெற்றி தேவதை உங்க கையைப் பற்றிக்கொள்ற நேரம் இது. எதிர்ப்புகள் ஏதும் இருந்தா நமத்துப் போன பட்டாசா போயிடும். சூழ்நிலை மாறி உற்சாகம் கூடும். தொழிலும் வியாபாரமும் மேன்மை அடையும். புதுசா எதையாவது தொடங்கலாம், குடும்பத்திலயும் சுபிட்சம் நிலவும். பெண்களுக்குத் திருமணம், குழந் தைப் பேறு போன்ற சந்தோஷம் கூடும்.

**கும்பம்:** திட்டம் போட்டு வட்டம் போட்டா கச்சிதமா எல்லாத்தையும் நிறை வேற்றலாம். புது அறிமுகங்கள் சில கிடைக்கும். நிர்வாகம் தொடர்பான பணிகள் சிறப்புப் பெறும். தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு சின்னச் சின்னப் பிரச்னைகள் ஏற்பட்டு உடனே நிவாரணம் கிடைக்கும். குடும்பத்தில் எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்து நிம்மதியான சூழ்நிலை நிலவும். பெண்களுக்குக் குழந்தைகளால் மகிழ்ச்சி கிட்டும்.

**மீனம்:** எல்லாக் காரியங்களுமே அனுகூலமா நடக்கும்னாலும், பயணம் போகும்போது எச்சரிக்கையா இருக்கிறது நல்லது. பெரியவங்களோட ஆசியும், ஆதரவும் கூட இருக்கறது நல்லது. ஆபீஸ்ல விரும்பிய மாற்றம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நெருக்கடிகள் தீரும். பழைய கடன்கள் தீர்ந்து நிம்மதி கிட்டும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். சுப மங்கள முயற்சிகள் கூடி வரும். எதிர்பார்த்த செய்தி வந்து சேர்ந்து பெண்களுக்கு மகிழ்ச்சி சேரும்.

"ஷபானா ஆஸ்மி வெகுஜன சினிமாவின் மூலமாக பிரபலமானவர் மட்டுமில்லை; ஆர்ட் ஃபிலிம்களில் யதார்த்தத்தை நடிப்பில் காட்டும் திறமைசாலி என்று எனக்குத் தெரியும். ஆனால், ஒரு கதாபாத்திரத்தை ஏற்றுக் கொண்டால், இத்தனை சிரமப்பட்டு, அதற்கு



* 'மார்னிங் ராகா'- படத்தில்

# ஆங்கிலத்தில் ஒரு பூபாளம்

உயிரூட்டுவார் என்று கிட்டே இருந்து பார்த்தபோது ஆச்சரியப்பட்டுப் போனேன்" என்கிறார் இயக்குனர், கேமராமேன் ராஜீவ்மேனன்.

இவர் குறிப்பிடும் கதாபாத்திரம் ஸ்வர்ணலதா என்கிற கர்நாடக இசைப் பாடகியின் கதாபாத்திரம். சில வாரங்களுக்கு முன் வெளியான 'மார்னிங் ராகா' என்ற ஆங்கிலப் படத்தின் பிரதான கதாபாத்திரம் அது.

"ஸ்வர்ணலதா என்கிற சிறந்த கர்நாடக இசைப் பாடகி, கச்சேரி செய்வதற்காக தமது கிராமத்திலிருந்து, ஒரு பாலத்தைத் தாண்டி, வேறு ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறார். அப்போது பாலத்தில் எதிர்பாராதவிதமாக ஒரு விபத்து ஏற்படுகிறது. அதில் தமது ஒரே குழந்தையை ஸ்வர்ணலதா பறிகொடுக்கும்படி ஆகிறது. கூட வந்த வயலின் கலைஞரும் இறந்து விடுகிறார். அந்த விபத்துக்கு தான்தான் காரணம் எனக் கருதும் ஸ்வர்ணலதா, அந்த கிராமத்தையே தமது சிறை போல நினைத்துக் கொண்டு வாழ்கிறார். இசைத் திறமை மிகுந்த,



இளைஞன் ஒருவன் அந்த கிராமத்துக்கு வருகிறான். அவன் இன்னொரு இளம் பெண்ணுடன் சேர்ந்து இசைக் குழு ஒன்றை ஆரம்பிக்கிறான். தங்கள் குழுவில் பாட ஸ்வர்ணலதாவை அழைக்கிறார்கள். அவர் மறுக்கிறார். அவரை எப்படி சம்மதிக்க வைத்து, நிகழ்ச்சியில் பாடச் செய்கிறார்கள் என்பதுதான் கதை."

"இந்தக் கதையை என்னிடம் சொல்லி, நான் ஒளிப்பதிவாளராகப் பணியாற்ற வேண்டும் என்று, மகேஷ் தத்தானி கேட்டார். நானும் மூன்று நான்கு வருடங்களாக விளம்பரங்களில் பிஸி என்பதால், சினிமா டைரக்ஷனோ, ஒளிப்பதிவோ செய்யவில்லை. எனக்கு இயக்குவதற்குப் பிடித்த மாதிரி, கதையும் ஒன்றும் அமையவில்லை. எனவே, ஒளிப்பதிவாளராகப் பணியாற்ற சம்மதித்தேன். உண்மையிலேயே எனக்கு இது ஒரு வித்தியாசமான அனுபவம்தான். நான் கர்நாடக இசை பயின்றவன். ஷூட்டிங்கின்போது, கர்நாடக இசைதான் ஒலித்துக் கொண்டே இருக்கும். மிகவும் ரசித்து, ஒளிப்பதிவு செய்த படம் இது.




• ஷபானா ஆஸ்மி

"ஷபானா ஆஸ்மி, கர்நாடக இசைப் பாடகியாக அற்புதமாய் நடிப்பார் என்று தான் நான் எதிர்பார்த்தேன். ஆனால் அவரோ, கர்நாடக இசையின் வரலாற்றில் ஆரம்பித்து, ராகங்கள், சங்கீத மும்மூர்த்திகள் என்று பல விஷயங்களையும் தெரிந்து கொண்டதுடன், படத்தில் இடம் பெற்றுள்ள கீர்த்தனைகள் அனைத்தையும் நன்றாகப் பாடிப் பயிற்சி செய்து ஈடுபாட்டுடன் நடித்தார்" என்று பாராட்டு மழை பொழிகிறார் ராஜீவ்மேனன்.

இந்த ஆங்கிலப் படத்துக்கு இசை அமைத்திருப்பவர் மணி சர்மா. 'யூத்', 'ஏழுமலை', 'ஷாஜகான்' போன்ற படங்களின் இசையமைப்பாளர். "மகா கணபதே, தாயே யசோதா, என்று சில கீர்த்தனைகளைத் தேர்ந்தெடுத்து, படத்தில் அவை இடம் பெறும் சூழ்நிலைகளையும் விளக்கினார். கர்நாடக இசை மரபையும் விட்டு விடாமல், அதே நேரத்தில் மாடர்ன் டச்சுடன் (உதாரணமாய், 'மகா கணபதே' கீர்த்தனைக்கு இடையில், மும்பையில் பிரபலமான 'கணபதி பப்பா மோரியா...' வரிகள் நெய்யப்பட்டுள்ளன) இசை சேர்ந்திருக்கிறேன். குறிப்பாக கிளைமாக்ஸ் காட்சிக்கு 'தாயே யசோதா' பாடலை அமைத்தது பெரிய சவால்தான்" என்கிறார் இசையமைப்பாளர் மணி சர்மா.



• மணிசர்மா



• ராஜீவ்மேனன்

- எஸ். சந்திரமௌலி



'எப்படிப் போய் பேசுவது? என்ன பேசுவது? அப்படியே பேசினாலும் என்ன நினைத்துக் கொள்வாளோ?' என்றெல்லாம் குழம்பிப் போய் தங்களது லஜ்ஜாவதிகளோடு பேசாமலேயே பெருமூச்சு விட்டுக் கொண்டு பலர் ஒதுங்கி இருந்து விடுவார்கள். அவர்களுக்காக சில சுலபமான டிப்ஸ். வீட்டிலிருந்து கொண்டே இவற்றைச் செய்து பார்க்கலாம். பக்க விளைவுகளுக்கும் ''பக்காவான'' விளைவுகளுக்கும் நாங்கள் பொறுப்பல்ல.


# நீங்கள் பேச நினைப்பதெல்லாம்!

● பொதுவாக அனைவரும் பயன்படுத்தும் ஓர் உபாயம் 'உங்கள இதுக்கு முன்னாடி ஹிக்கின்பாதம்ஸ்ல பார்த்திருக்கேனே' என்பதுதான். இதற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. எதிரணியிலிருந்து 'ஆமாம்' என்றோ, 'ம்ஹூம்' என்றோ பதில் வரும் என்று நிச்சயமாக நம்பலாம். தேவைக்கேற்ப ஹிக்கின்பாதம்ஸிற்கு பதில் காபி டே, குழாயடி, ரேஷன் ஷாப் என்று இடத்தை மாற்றியமைத்துக் கொள்வது சிறந்தது.




● உங்களுடைய விசேஷ நபர் ஸ்கூட்டியில் போய்க்கொண்டிருந்தால், பின்னாலேயே ஓடிச் சென்று "மேடம், உங்க துப்பட்டா சக்கரத்துல மாட்டிக்கப் போகுது. பத்திரமா போங்க'' என்று சொல்லாம். ஒரு வேளை பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தால், "அடுத்த ஸ்டாப்புல நாலு இன்ச்சுல ஒரு பள்ளம் வரப் போறது. பத்திரமா கம்பியைப் பிடிச்சுங்கோ'' என்று சொல்லலாம். குறைந்தது எமோஷனலாக உங்களைப் பார்த்து ஒரு லுக்காவது விடுவார். அதற்காக மூன்றாம் பிறை கமல் மாதிரி சட்டையை எல்லாம் கிழித்துக் கொண்டு ஓடக் கூடாது.

● நாற்பது பக்க ருல்ட் நோட்டை எடுத்துக் கொண்டு தைரியமாக அந்தப் பெண்ணை அணுகவும். "கான்பூர்ல ஒரு குட்டி ஆட்டுக்குட்டிக்கு காது கேட்காமப் போயிடுச்சு. பாவங்க, குட்டிக் காது. எனக்கு அனிமல்ஸ்னா ரொம்ப இஷ்டம்.




உங்களால முடிஞ்சத செய்யலாமே?'' என்று அப்பாவித்தனமாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்கலாம். ஆட்டுக் குட்டிக்கு பதிலாக டால்ஃபின், டெடி பேர், டார்டாயிஸ்கூட ஓகேதான். 'அட, இந்தக் காலத்துல இப்படி ஒரு பையனா' என்று அவள் ஆச்சரியப்படுவதைப் பார்த்து நீங்களும் ஆச்சரியப்பட்டுக் கொள்ளலாம். கூடவே பாக்கெட் மணியும் கொஞ்சூண்டு கிடைக்கும்.

● உங்கள் லஜ்ஜாவதி ஒருவேளை ரெகுலராக பஸ்ஸில் வருபவராக இருந்தால், அவரிடம் உங்கள் புத்தகங்கள், பேக், செல்ஃபோன், ஃபவுண்டன் பென், க்ரெடிட் கார்டு, ரேஷன் கார்டு எல்லாவற்றையும் ''இறங்கும்பொழுது வாங்கிக்கிறேன் ப்ளீஸ்'' என்று சொல்லி கொடுத்து விடுங்கள். இத்தனை பொருள்களைக் கொடுத்ததால் டென்ஷனாக உங்களைத் திரும்பித் திரும்பி அவர் பார்த்துக் கொண்டே இருப்பார். உங்கள் ஸ்டாப்பிங் வந்ததும் மறக்காமல் ஏதாவது ஒன்றை மறந்து அவரிடமே விட்டு விட வேண்டும். அடுத்தநாள் காலை நீங்களே சென்று ''என்னோட க்ரெடிட் கார்டு உங்ககிட்ட இருக்கா. அது இல்லாததால என்னோட ஜப்பான் டிரிப் கேன்ஸலாயிடுச்சி. இட்ஸ் ஓகே'' என்று நம்பும்படி சொல்லலாம். கண்களை விரித்து உங்களை அவள் பார்ப்பாள்.

● அவள் ஒருவேளை உங்களது வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தால், தைரியமாக உள்ளே நுழைந்து விடவும். பின்பு, ''அமெரிக்கத் தூதரகத்துக்கு டைப்பிஸ்ட் வேலைக்கு அப்ளை பண்ணியிருந்தேன். என் வீட்டு நம்பர் 112. தெரியாம 121ன்னு உங்க நம்பரப் போட்டுட்டேன். சப்போஸ் எனக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வந்ததுன்னா, கொஞ்சம் இன்ஃபார்ம் பண்றீங்களா?'' என்று மோட்டு வளையைப் பார்த்துச் சொல்ல வேண்டும். பிறகு உங்கள் செல் நம்பரைக் கொடுத்து விடுங்கள். அதற்குப் பிறகு எங்கு பார்த்தாலும் ''வந்துச்சா வந்துச்சா?'' என்று ஆட்டோகிராஃப் சேரன் போல டான்ஸ் ஆடிக்கொண்டே கேட்கலாம். லெட்டர் வருகிறதோ இல்லையோ, காதலாவது வரும் என்று எதிர்பார்க்கலாம்.

**- மருதன்**

# பால சந்திர கணபதி!

**யா**னை முகம், பெரிய காதுகள், தும்பிக்கை, கொழு கொழுவென்று நல்ல புஷ்டியான உடம்பு. பானை வயிறு. இப்படி ஒரு குழந்தை குடுகுடுவென்று ஓடி வந்தால், ரசித்து ஆனந்தப்படத்தானே தோன்றும்? எல்லோருக்கும் அப்படித்தான் தோன்றியது, ஒருத்தனைத் தவிர. அவனுக்கு தான் ரொம்ப அழகானவன், எல்லாக் கவிகளும் பாடுகிறார்கள், அழகான பெண்ணின் முகத்துக்கு தம்மை உவமை சொல்கிறார்கள் என்ற அகம்பாவம்.



• அற்புத விநாயகர்



• ஸ்ரீ சொற்கேட்ட விநாயகர்

யானை முகத்துக் குழந்தை ஓடியாடிக் களித்து, அப்பமும், மோதகமும் அள்ளி முகமெங்கும் பூசிக் கொண்டு தின்கிறபோது "என்ன அநாகரிகமான, அசிங்கமான குழந்தை இது?" என்று கேலி செய்து சிரித்தான் அதிரூபனான சந்திரன். சந்திரனின் ரூபமும் நிறமும்தான் அகம்பாவத்துக்குக் காரணமென்பது புரிந்தது பிள்ளையாருக்கு. "சந்திரனே, உனக்கிருப்பதே இரவல் வெளிச்சம். அதில் மின்னுகிறாய் நீ. இந்த இரவல் வெளிச்சத்தையும் இழந்தால்தான் உனக்கு புத்தி வரும். உன் ஜொலிப்பு அழிந்து போகட்டும் போ" என்று சாபம் கொடுத்து விட்டார்.



யார் யாரிடமோ சென்று சாபவிமோசனத்துக்கு வழி கேட்டான் சந்திரன். எல்லோருமே சொன்ன ஒரே பதில். "இது பரமேஸ்வரனாலும் தீர்க்க முடியாத சாபம். பிள்ளையாரையே சரணடைந்து கேள். அவரே தான் நிவர்த்தி செய்ய வேண்டும்". வேறு வழியில்லாமல் உரிய பூஜைகளையும் வேண்டுதலையும் செய்தான். மனம் திருந்தி மன்னிப்

பும் கேட்டான். அகங்காரம் அழிய வேண்டுமென்பதுதானே ஆனை முகனின் நோக்கம்... மன்னித்தார். சந்திரன் இதை மறக்காமலிருக்கும்படியான நிபந்தனையும் விதித்தார். "நான் ஆவிர்ப்பவித்த சுக்லபட்ச சதுர்த்தியில் சந்திர தரிசனம், காண்போருக்கு சந்திரனைக் குள்ளது போல களங்கத்தை ஏற்படுத்தட்டும். கிருஷ்ணபட்ச சதுர்த்தியில் காணும் சந்திர தரிசனம் களங்கத்தை நீக்கட்டும்" என்று சாபவிமோசனம் கொடுத்தது மட்டுமின்றி, பிறைச்சந்திரனை எடுத்து தம் நெற்றியில் சூட்டிக் கொண்டு பால சந்திர கணபதியும் ஆனார். கிருஷ்ண பரமாத்மாவுக்கு ஓர் அபவாதம் நேர்ந்தபோது நாரதர் சொன்ன புராணம் இது. (பாலசந்திர விநாயகருக்கு தமிழகத்தில் தனிக் கோயிலோ சந்நிதியோ இருக்கிறதா என்பது தெரியவில்லை)

- வி

### வீணை விநாயகர்

கலைமகளிடம் வீணை இருப்பது தெரியும். பெரியார் மாவட்டம் பவானி என்னும் ஊரில் விநாயகர் கையில் வீணையுடன் காட்சி தருகிறார்.

### கிரானைடு பிள்ளையார்


மகாபலிபுரத்தில் கலை வேலைப்பாட்டுடனான நர்த்தன கணபதி சிலை உள்ளது. இது கிரானைடு கல்லால் ஆனது. இச் சிலையின் உயரம் ஒன்பது அடி!


### விக்கினேசானுக்கிரக மூர்த்தி

சோமாஸ்கந்தர் போல், சுவாமிக்கும் அம்பிகைக்கும் நடுவில் விநாயகர் திருச்செங்காட்டான் குடியில் வீற்றிருக்கிறார். இங்கு இவருக்கு 'விக்கினேசானுக்கிரக மூர்த்தி' என்று பெயர்.

### நின்ற நிலையில் பிள்ளையார்

பொதுவாக கோவில்





• சந்தி பிள்ளையார் கோவில்

களில் விநாயகர் சிலைகள் அமர்ந்த நிலையில் காணப்படுவதே வழக்கம். ஆனால் மதுரை திருமங்கலத்திலிருந்து பேரையூர் செல்லும் வழியில் அமைந்துள்ள மாத்தங்கரை கிராமத்தில், அபூர்வமாக நின்ற கோலத்தில் விநாயகர் காட்சி தருகிறார். புளிய மரங்கள் சூழ்ந்த பகுதியில் காணப்படும் இவர், வலக்கரத்தில் கோடரியுடன் காணப்படுகிறார். வினைகள் தீர்த்து வைக்கும் இவரை


Geethanjali

சூப்பர் ஆடியோ நிறுவனத்தினர் வழங்கும் 'ஓம் கணபதி ஓம்' ஆன்மிகம் மணக்கும் ஆடியோ சிடி பரிசு

பெறுபவர்: எஸ். விஜயலக்ஷ்மி


வணங்கினால், புத்திர பாக்கியம் கிட்டும் எனும் நம்பிக்கை பக்தர்களிடம் நிலவுகிறது.

**பெண்கள் வழிபடாத பிள்ளையார்**

திருகம்பகம் எனும் இடத்தில் கணபதி கவுபீனதாரியாக காட்சி தருகிறார். இவரைக் காண பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை! 'மிருத்யுஞ்ச ஸ்தோத்திரம்' இவரைப் பற்றியது என கூறப்படுகிறது.

- எஸ். விஜயலக்ஷ்மி, சென்னை - 88

**ஸ்ரீ சொற்கேட்ட விநாயகர்**

எங்கள் ஊரான கோட்டையூருக்கும் வேலங்குடிக்கும் நடுவில் ஸ்ரீ சொற்கேட்ட விநாயகர் கோவில் அமைந்துள்ளது. இந்த விநாயகப் பெருமானை ஸ்ரீ முனீஸ்வரர் வடிவில் வணங்குகின்றனர்.

பக்தர்கள் குறைகளைச் சொல்ல, தன் செவியேற்றுக் கேட்டு, உடனுக்குடன் வரம் அளிக்கின்ற வள்ளல் என்பதால் 'சொல் கேட்ட விநாயகர்' என அழைக்கப்படுகிறார். பின்னர் நாளடைவில் சொக்கட்டான் என மருவியுள்ளது.

பழைமைச் சிறப்புடைய இவ் விநாயகர், முனீஸ்வர அம்சம் என்பதால், காவல் தெய்வத்துக்கே உரிய வகையில் (விமானம் அமைத்து கோபுரம் கட்ட தடைகள் செய்து)தாம் வெட்டவெளியில் இருக்கவே விருப்பம் தெரிவித்தாராம். அதனால் மேற்கூரை மட்டும் வேயப்பட்டிருக்கிறது.

பெரும்பாலும் அம்மன் கோவில்களில்தான் பூச்சொரிதல் விழா நடைபெறும். ஆனால் இங்கு பங்குனி மாத முதல் வெள்ளிக்கிழமை, மக்கள் பூச் சொரிதல் விழாவை மிகவும் சிறப்பாக நடத்தி, விநாயகரை வணங்குகின்றனர்.

விநாயகரின் இடதுபுறம் மேதா தக்ஷிணாமூர்த்தியின் சந்நிதி உள்ளது. விநாயகரிடம் முனீஸ்வரரின் காவல் இயல்பின் கடுமையும் கலந்திருப்பதால், ஞான வடிவினரான மேதாதக்ஷிணாமூர்த்தி அருகிலிருந்தால் அருள்ஞானம் சுரக்கும், கடுமை குறையும் என்று மகான் ஒருவர் சொல்லியதற்கிணங்க, அருகில் மேதாதக்ஷிணாமூர்த்தியை எழுந்தருளச் செய்துள்ளனர்.

ஸ்ரீ விநாயகருக்கு சந்தனக்காப்பு அலங்காரம் (படத்தில் உள்ளபடி) அடிக்கடி செய்யப்படும். வெள்ளி அங்கி, தங்க அங்கியும் இருக்கின்றன. அதற்குரிய கட்டணங்களைச் செலுத்தி, சொற்கேட்ட விநாயகரை வணங்கினால் எல்லா நலன்களும் பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழலாம் என்பது கண் கண்ட உண்மை.

- கே.வி.எஸ். அழகப்பன், கோட்டையூர்

புத்தாண்டின் புதுவரவு!

நீண்ட இடைவெளிக்குப் பிறகு புத்தகப் பிரியர்களின் எதிர்பார்ப்புக்கு ஒரு நல்விருந்து!

எழுத்துவேந்தர் **ஜெயகாந்தன்** எழுதி வழங்கும் புதிய படைப்பு!

**நடந்தது, நடப்பது, நடக்கவேண்டியது, நடவாதது, நடக்க முடியாதது, நடக்கக் கூடாதது எல்லாவற்றையும் பிரதிபலிப்பதே கற்பனை... கற்பனை பொய்யல்ல...**



ஜெயகாந்தனின் **ஹர ஹர சங்கர...** முற்றும் புதிய நாவல்

❑ 64 பக்கங்கள் (டெமி சைஸ்) ❑ விலை: ரூ. 15.00 ❑ அழகிய முகப்போவியம்

❑ அத்தியாயத்திற்கு அத்தியாயம் அழகிய ஓவியங்கள். ❑

தமிழகமெங்கும் 2005 ஜனவரி முதல் தேதி அன்றே எல்லா கடைகளிலும் கிடைக்கும். அனைத்து ஊர்களின் விற்பனை ஏஜெண்டுகளும் தங்களுக்குத் தேவையான பிரதிகளுக்குத் தொடர்பு கொள்ளவும்.


மேலும் விவரங்களுக்கு

# கவிதா பப்ளிகேஷன்

8, மாசிலாமணி தெரு, பாண்டிபஜார், தியாகராய நகர், சென்னை—600 017.
தொலைபேசி: 24364243 24322177 டெலிஃபேக்ஸ் 044—24364243
ஈ—மெயில் : kavitha_publication@yahoo.com

**ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரின்**
**112-வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு**

**"எப்படி - வாழ - வேண்டும்" (How to Live Series)**
**என்ற தொகுப்பில் ஆன்மீக நூல்கள் வெளியீடு**




* வெற்றிக்கு வழி காண்பது எப்படி ?
* கவன சக்தியை ஒருமுகப்படுத்துதல் மூலம் வெற்றி.
* இறைவனின் எல்லையில்லா சக்தியினால் குணப்படுத்துதல்.
* உடல், மனம் மற்றும் ஆன்மீக குணப்படுத்தும் முறைகளை இணக்கம் ஆக்குதல்.
* குரு—சிஷ்ய உறவு.
* ஆன்மீக நாட்குறிப்பு.
* கவலை உணர்வை களைதல்.
* மற்றவர்களை மாற்றுவது எப்படி?

நாள்: ஜனவரி 4, 2005 (செவ்வாய்) நேரம்: மாலை 6 மணி
இடம்: **"மாஸ்டர் மஹால்"**
முடக்கு சாலை, தேனி மெயின் ரோடு, மதுரை - 625 016.

**ஆன்மீக அன்பர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்**
**யோகதா சத்சங்க தியான மண்டலி**
Plot No. 23, Doak Nagar 3rd Cross, Kochadai, Madurai - 625 016. Ph: (0452) 2384805

Information about Paramahansa Yogananda's life and teachings are available at the address given below.
**Yogoda Satsanga Sakha Math, Paramahansa Yogananda Path, RANCHI - 834 001. Jharkhand, Tel (0651) 2460071, 2460074, 2461578.**
**www.yssofindia.org**



- ஆர்.கே.இராமநாதன்

# அடையாளம்

படிக்கவென
பட்டணம் புகுந்து
வேலைக்கென
வெளிநாடு நகர்ந்து
குடியுரிமை பெற
வெள்ளைக்காரியை மணந்து
குழந்தைக்கு முடியிறக்கும்
வேர் ஞாபகமாய்
ஊர்வந்ததில் தெரிந்தது
ஆண்டாண்டுக் காலமாய்
ஆற்றுவயலோரம்
அரிவாள்தூக்கி விழிஜொலிக்க
அப்படியே நிற்கிறார்
எம்குலசாமி முனீஸ்வரர்.

# மல்லிகைக் கேள்விகள்

– நேசிகா



படகின் ஓர மணலில்
புதைந்தபடி கிடக்கிறது
ஒரு முழ மல்லிகைச் சரம்.
சூடிக் கொண்டு வந்தவள்
காதலியா? மனைவியா?
வாடகைக் காதலியா?
கூடலில் விழுந்ததா?
கோபத்தால் விழுந்ததா?
சாப்பிட்டிருந்திருப்பாளா?
பசியோடிருந்திருப்பாளா?
கிளிஞ்சலை கையில் ஏந்தியபடி
நடந்த சிறுவன்
அதட்டப்படுகிறான்
''கடற்கரைக்கு வந்தால்
கடலைப் பார்
கண்டதையும்
கையிலெடுக்காதே.''


## வலை பாயுதே



# கேக்கு கேட்கும் நாக்கு!

**வி**தவிதமா, வகைவகையா, தினுசு தினுசா எத்தனை காலண்டர் கிடைச்சாலும் வேண்டாம்னு சொல்லாம வாங்கி வைச்சுக்குவோம். எல்லாருக்கும் காலண்டர் மேல அவ்ளோ கிரேஸ். அதுக்காகவே காத்துக்கிட்டிருக்கிற தளம் calendarzone.com அஸ்ட்ராலஜி, அஸ்ட்ரானமி, ரிலீஜியஸ், சீசன், கோஸ்ட், டிராகன், சைனீஸ் இப்படி பல விதங்களில் காலண்டர்கள் இங்கே படபடக்கின்றன. முடிஞ்சா 'டாலர்' கொடுத்து வாங்கிக்கோங்க. இல்லைனா, desktop-ல சேவ் பண்ணி பாத்துக்கோங்க! ஒவ்வொரு நாட்டிலுமுள்ள விடுமுறை தினங்களை ஈஸியா தெரிஞ்சிக்கணுமா... அதுக்கு earthcalendar.net உதவும்.

(இந்த மாதிரி வெப்சைட்ஸை எமகண்டத்துல பாக்கலாமான்னு கேட்காதீங்க!)



**கொ**ழும்பு ஷோவில் குண்டு வெடிப்பு, முந்தைய படமான 'வீர்-சாரா' இந்தியாவில் மட்டுமின்றி பாகிஸ்தானிலும் செம ஹிட். (இந்தியக் காதலன், பாக்.காதலி - இதுதான் கதை). 'லகான்' மேக்கர் அசுதோஷ் கெளவரிகரின் அடுத்த படமான 'சுவதேஷ்' நல்ல ஓப்பனிங்... என 'செம' ஹாட்டாக இருப்பவர் ஷாருக்கான். ஷாருக்கான் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார். அவரைப் பற்றிய லேட்டஸ்ட் மேட்டர் என்ன என்று ஷாருக் A-Z தெரிந்து கொள்ள, டக்குன்னு போங்க vluvshahrukh.com க்கு. இது அவரது ரசிகர்களின் வலைத் தளம். அவரைப் பற்றி கவிதை கூட பாடியிருக்கிறார்கள்.

('இந்த 'தேவ்தாஸை' ஜொள்ளு விடும் 'பார்வதிகள்' எக்கச்சக்கம் என்று வலைத்தளத்தை பார்த்தாலே தெரிகிறது.)

**கி**றிஸ்துமஸ் வந்தாச்சு! உங்க நாக்கும் தானா கேக்கை கேட்கும்! கேக்கை 'நேக்'கா 'பேக்' பண்ண நீங்க பார்க்க வேண்டிய தளம் www.101lifestyle.com/cooking/cakemaking/ எதை எதைக் கலக்கணும், ஊறணும், ஊத்தணும், குலுக்கணும்னு சுலபமா டிப்ஸ் கிடைக்குது. அந்தப் பக்கமே 'செர்ரி' மணத்தோட இருக்குதுன்னா பாத்துக்கோங்க!

(நீங்க விடுற ஜொள்ளுல கீபோர்டு நனையாம பாதுகாத்துக்கோங்க).


- **ப்ரெளஸர்**

# அருள்வாக்கு

**ஸ**ங்கீதக் கலை என்பது கொஞ்சங்கூடக் கஷ்டமில்லாமல் மோக்ஷத்தையே வாங்கிக் கொடுக்கக் கூடியது. வீணா வாத்யம் ஒன்றை வைத்துக் கொண்டு ஸ்வரசுத்தியோடு கலந்து வாசித்து ஆனந்தமயமாக இருக்கக் கற்றுக் கொண்டுவிட்டால், யோகம் பண்ண வேண்டாம், தபஸ் பண்ண வேண்டாம், ஸுலபமாக மோக்ஷத்தையே அடைந்து விடலாம். அதோடு யோகி யோகம் செய்தால், தபஸ்வி தபஸ் செய்தால் அவர்களுக்கு மட்டுமே ஆத்மானந்தம் உண்டாகிறது. ஸங்கீதம் ஒன்றில்தான்,அதை அப்யஸிக்கிறவர் மட்டுமின்றி, கேட்கிற எல்லோருக்குமே அதே அளவு ஆத்மானந்தம் உண்டாகிறது.




வாய்ப்பாட்டு வீணை மாதிரி ஸ்வரங்களோடு சேர்ந்த ஸங்கீதம் தானென்பதில்லை; மிருதங்கம், ஜால்ராவில்கூட நல்ல லயசுத்தத்தோடு ஸுநாதம் கலந்து வந்துவிட்டால், அது தெய்வீக ஆனந்தத்தில் நம்மைச் சொருகி விடுகிறது.



- ஜகத்குரு
காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி
சங்கராச்சார்ய
சுவாமிகள்

"மூச்சை இறுக்கிப் பிடிச்சுக்க வேண்டாம்... சும்மா இலேசா, அப்படி நிறுத்திக்கோங்க... முக ஷேவிங் பண்ணிக்கறப்போ ஒரு செகண்ட் நிறுத்தி மூச்சு விடறாப்பல... ஆங் அவ்வளவுதான்... போதும் போதும்..."



# இயல்

சீதா ரவி


வாசுதேவாச்சார் கார்த்திகேயனைத் தமது கண்ணசைவால் கீழ்ப்படிய வைத்துக் கொண்டிருந்தார். வினோதினி அதிசயத்துடன் பார்த்தாள்.

"ஷேவ் பண்ணியே பத்து நாளாகியிருக்கும் போலிருக்கே கார்த்திகேயன்... அதான் நாங்க சொல்றது புரிய மாட்டேங்கறது... நாளைக்கு கிளாஸ் ஆரம்பிக்கறதுக்கு முன்னாடி நல்லா, நீட்டா ஷேவ் பண்ணியிருக்கணும்... சரியா..?"

வாசுதேவாச்சார் அப்படித்தான் தோற்றமளித்தார். யோகா நிவாரணாலயாவின் ஆச்சார்யர் என்பதற்கான தாடி, அடர் தலைமுடி அடையாளங்கள் ஏதுமின்றி, சராசரி போலீஸ் கிராப்புத் தலையும், நன்கு மழிக்கப்பட்ட முகத்தில் மையமான மீசையுமாகக் காணப்பட்டார். வினோதினி யெல்லோ பேஜஸுக்கு நூற்றியெட்டாவது முறையாக மானசீக நன்றி கூறினாள்.

கார்த்திகேயனின் பிரச்னைக்கு உதவி கோரி, சென்னையின் பிரபலமான யோகப் பயிற்சி மையங்களுக்குப் போனால் உடனே அது பரபரப்புச் செய்தியாகிவிடும். ஏற்கெனவே தொட்டாற்சுருங்கியாய் வாடும் இயல்பில் இருப்பவனுக்கு, விசாரிப்புகளும் புதுப்புது அறிவுரைகளும் மழையாகப் பொழிந்து மேலும் ஹிம்சையே ஏற்படுத்தும். காதும் காதும் வைத்தாற்போல் காரியம் முடிய வேண்டும். இந்த நோக்கில் யெல்லோ பேஜஸைப் புரட்டி அவன் தேர்வு செய்ததுதான் நிவாரணாலயா.

## மினியிசைத் தொடர் - 3



# தோட்டம்

வாசுதேவாச்சாருக்கு அவளுடைய மனோநிலையும் நிபந்தனையும் விவரிக்கப் படாமலே புரிந்தன.

"கவலைப்படாதீங்கம்மா... கார்த்திகேயனைப் பார்க்காம, கொஞ்சமாவது பாட வைச்சுக்கேக்காம எந்த உத்தரவாதமும் தர முடியாது. ஆனா, நீங்க உதவி கேட்டு வந்த விஷயம் வெளில பரவாதுன்னு நாம உத்தரவாதம் தரலாம். கடவுள் கிருபையிலயும், எங்க முயற்சியிலயும் கார்த்திகேயன் குணமடைஞ்சா, அதை வெற்றியாக்கி விளம்பரம் தேடறதில்லேன்னு டபுள் உத்தரவாதம் தரலாம்... போதுமா...?"

"நான் அதுக்குச் சொல்லலை..." என்று தடுமாறிய வினோதினியை இடைமறித்தார்.

"நீங்க சொல்லலைன்னாலும் நமக்குத் தெரியும் அம்மா... அடுத்தவர் கஷ்டத்தைத் தீர்த்தா, அதைக் கூட விளம்பரமாக்குகிற காலமல்லவோ இது...? நமக்கு அதிலே நம்பிக்கை இல்லை.... யோகமும் ஔஷதமும் தனியொருவர் சொத்து இல்லையே... யாவருக்கும் பொது சொந்தமன்றோ!" என்று ராகமாகப் பாடிவிட்டுச் சிரித்துக் கொண்டே தொடர்ந்தார். "தெரிந்ததைச் சொல்வோம். அறிந்ததைச் செய்வோம். கார்த்திகேயன் பாட்டு கேட்டு நாமும் கண் கசிந்ததுண்டுதானே? அது மீண்டால் உலகத்துக்கொரு சொத்து மீளும்தானே...?"

நெக்குருகிப் போனாள் வினோதினி. உலகில் எத்தனை நல்லவர்கள் இருக்கிறார்கள் என்று உணர்த்தவே, வாழ்க்கை கார்த்திகேயனுக்கு இப்படியொரு சோதனையை ஏற்படுத்தியதோ...?

இந்தச் சிந்தனையை மெள்ள மெள்ள விவரித்துத்தான் கார்த்திகேயனைப் பக்குவப்படுத்த முடிந்தது.

"கார்த்தி! கமலி எத்தனை அக்கறையோடு பேசினார். அவரைப் பற்றி அப்படியொரு வார்த்தை உங்கள்ட்டேருந்து வரலாமா...? 'கார்த்திகேயன், பாடாம இருக்கறதால எங்க பாட்டுக்கெல்லாம் கூட அர்த்தமில்லாம இருக்கு'ன்னு சொன்னார்... கமலி மாதிரி உயர்ந்த கலைஞர் வாயாலே நம்மை நோக்கி அப்படி ஒரு சொல் வரதுன்னா, அது எப்பேர்ப்பட்ட விஷயம்..?"

சூப்பர் மார்க்கெட்டிலிருந்து திரும்பிய தினத்தில் வினோதினி பேசியதைக் கேட்டுச் சற்றே தணிந்தான் கார்த்திகேயன்.

"இந்த சங்கீதம் எத்தனை அற்புதமான சாதனம் பார்த்தேளா...?" அவன் கோபத்தையோ அது தணிந்த நிலையையோ சற்றும் கவனியாதது போல் அவள் தொடர்ந்தாள்: "எவ்வளவு நல்ல எண்ணங்களை, உயர்ந்த சிந்தனைகளைத் தோற்றுவிக்கறது பாருங்கோ..."

கார்த்திகேயனின் அடங்கிய மனத்தில் சௌந்தர்யம் மிகுந்த பிம்பமொன்று உருக்கொண்டது. உலகின் மிகத் தேர்ந்த

நல்லொலிகளும், உயர்பண்புகளும், உன்னத உணர்வுகளும் கொண்டு குழைத்துத் தீட்டிய பேரன்புச் சித்திரமாக, சங்கீத தேவதை அவன் இதய சிம்மாசனத்தில் வந்து அமர்ந்தாள்.

"ம்... பாடு!" என்று அவள் தன்னை நோக்கிக் கனிவோடு கட்டளையிடுவதாக அவனுக்குத் தோன்றியது. "உன்னால் முடியும்... பாடு!" என்றாள்.

உடல் முழுவதும் ஒரு புத்துணர்வு அலை பரவ, வினோதினியைப் பார்த்துச் சொன்னான் கார்த்திகேயன்:

"வினோதினி, எனக்குப் பாடணும்... தம்பூராவைக் கொண்டுவா!... உடனே கொண்டு வா."

அவனுடைய கிளர்ச்சியைக் கண்டு திகைத்தாலும், அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் பாயை விரித்துத் தம்பூராவை எடுத்து வைத்தாள் வினோதினி. புடைவைத் தலைப்பால் துடைத்து ஒரு மீட்டு... சுருதி கலைந்திருந்தது. சேர்க்க முயன்றவளைத் தடுத்து, தானே மடியில் இருத்திச் சுருதி சேர்த்தான் கார்த்திகேயன்.

தாள முடியாத இறுக்கத்துடன் வினோதினி காத்திருக்க, கார்த்திகேயன் கனைத்துக் கொண்டு பாட ஆரம்பித்தான்.



"7G ரெயின்போ காலனி'யின் இரண்டாம் பாகம் எடுத்தா என்னங்க பேர் வைப்பாங்க?"

"புதிய எண் 26, (பழைய எண் 7G) ரெயின்போ காலனி'ன்னு தான்!"

- நாமக்கல் பாலு

"நாததனும் அனிசம் சங்கரம்..."

ஸ்வரஸ்தானங்கள் அவன் தொண்டையை ஏய்த்து விட்டுத் துல்லியமாக தங்கள் இடத்தில் நிற்க, கார்த்திகேயனின் குரல் அவற்றோடு சங்கமிக்க மறுத்து, சண்டி செய்தது.

மீண்டும் முயன்றான் கார்த்திகேயன்:

"நாத தனும் அனிசம் சங்கரம்
நமாமி மே மனஸா சிரஸா..."

ம்ஹூம்! தொண்டையின் தோல்வியைச் செவிகள் மூளைக்கு உணர்த்த உணர்த்த, அவன் முயற்சி அப்படியே வேதனையாக மாறியது. கண்களில் நீர் பொங்கியது.

ஒலியெழுப்பாமல் வினோதினி கண்ணீர் விட்டாள்.

'கார்த்திகேயா! உன்னால முடியும்...' அவன் அகச் செவியில் மீண்டும் அந்த சௌந்தர்யவதி பேசினாள்... "என்ன?... உன் மாயக் காதலி ஜாலம் காட்டறாளா...? இத்தனை நாளா உன் தொண்டையிலே தவம் கிடந்தா இல்லியா?... கூப்பிட்ட சேவகத்துக்கு ஓடி வந்தா இல்லியா?... அவளை ஆண்டு அனுபவிச்சுண்டேயிருக்கறச்சே, திடீர்னு காணாமப் போயிட்டாளா...? எங்கயும் போகல அவ. தேடற இடத்துல தேடு... கிடைப்பா!" புருவங்கள் உத்தரவாதத்தில் உயர்ந்து, தாழ, கண்கள் பளிச்சிட அந்த மன பிம்பம் பேசியது.

"எங்க... எங்க போனா அவ... நான் எங்க தேடறது...?" தம்பூராவைக் கீழே வைத்துவிட்டு, கைகளால் முகத்தை மூடிக் கொண்டு கேவியவனை திகைத்துப் பார்த்தாள் வினோதினி.

"யாரைத் தேடணும் கார்த்தி...?" - மிக மெதுவாகக் கேட்டாள்.

கார்த்திகேயன் மௌனமாகத் தலை கவிழ்ந்து இருந்தான்.

குமிழ் குமிழாகக் கேள்விகளும் சந்தேகங்களும், வினோதினியின் மனத்தில் தோன்றி வெடித்துச் சிதறின.

"கார்த்தி!" மெள்ள அவன் தலையை நிமிர்த்த, கள்ளமில்லாமல் அழுதான்.

"அலைக்கழிக்கிறா என்னை... எப்படி எப்படியெல்லாம் அவளைக் கட்டிக் காப்பாத்தினேன்.... பொத்தி வைச்ச பொக்கிஷமா நேசிச்சேன்.... விட்டுட்டுப் போயிடுத்து...." அஃறிணையில் செல்ல

மாய் வைதபடி தொண்டையைச் கட்டிக் காட்டிச் சொன்னவனின் கண்களில் தெரிந்த வேதனையை வினோதினியால் சகிக்க முடியவில்லை.

அதே கணத்தில், அவன் வைத்த நேசத்தின் அபத்தத் தன்மை முகத்தில் அறைந்தது அவளுக்கு. 'கலைஞனின் கர்வம் கலையை வெற்றி கொள்வதில் இல்லை. அதனிடம் பணிவதில்தான் இருக்கிறது கார்த்தி... உன் குரல் தேன் தான், மதுரம்தான்... ஆனால் அது வெறும் கருவி... கருவியை மரியாதையுடன் பயன் படுத்தி கலைக்குத் தலைவணங்கு... உன் காதலி மீண்டு விடுவாள்!...' - புதிரவிழ்ந்து, விடைதெளிந்தது. வினோதினி அந்த பதிலை பத்திரமாக மனத்தில் பூட்டி வைத்துக் கொண்டாள். இப்போது கார்த்திகேயனிடம் இதைப் பேசினால் எடுபடாது. இதற்கு வேறு அணுகுமுறை தேவை.

**கோ**வையில் இருந்த அம்மாவைத் தொடர்பு கொண்டாள் வினோதினி.

''ஏன்மா? என்ன சொல்றார் மாப்பிள்ளை...?''

"இரண்டு மாசம் டயம் கொடும்மா... அவர் சொல்றதைவிட உலகம் அவரைப் பத்திச் சொல்லும்... திரும்பவும் அவர் பாடுவார். நீயும் அப்பாவும் முதல் வரிசைல உட்கார்ந்து கேட்பேள். அது வரைக்கும் நந்துவை நீ அழைச்சுண்டு போய்ப் பார்த்துக்கணும்... எனக்கு கார்த்தியோட முழுநேரமும் இருக்கணும், கவனிக்கணும்."

**ந**ந்தினி கோவைக்குப் போனாள். அழாமல் அப்பாவைக் கட்டியணைத்து முத்தமிட்டு, ''சீக்கிரம் வந்துடுவேன்'' என்று மிரட்டிவிட்டுப் போனாள். வினோதினி யெல்லோ பேஜஸில் வாசுதேவாச்சாரைக் கண்டு பிடித்தாள். சிறப்புச் சலுகையாக, அவர் வீட்டுக்கே வந்து வகுப்பெடுத்தார்.

கார்த்திகேயன் குழந்தையைப் போல் அவருக்குக் கீழ்ப்படிகிறான்.

''மூச்சை இங்கே காது கிட்டே நிறுத்திக்கோங்கோ... இப்போ மெள்ள மூச்சை விட்டுப் பாடுங்கோ... சப்தம் வேண்டாம்... வால்யூம் வேண்டாம்...



''உன் காதலர் ரொம்ப முன் ஜாக்கிரதையானவரா?''
''ஆமாம்.... காதலிக்கவே ஜாதகம் கேட்கிறார்...''
- எஸ். மோகன்

நமக்குக் கேட்டா போதும்... ஆங், அதே அப்படி.... இப்போ சுருதியை மீட்டுங்கோ...'' வினோதினியைப் பார்த்து அவர் சைகை காட்ட, அவள் மெள்ள நடுங்கும் விரல்களுடன் தம்பூராவை மீட்ட,

"ஸ..." துல்லியமாய் சுருதி சேர்ந்து ஒலிக்கிறது சட்ஜமம். பரபரத்து மேல் ஸ்தாயிக்கு விரைந்து "ஸ..." என்று அவன் பிடிக்க முயற்சி செய்ய, ஸ்தானத்திலிருந்து குரல் விலகி, செம்மைப்பட்ட அவன் செவிகளுக்கு அவன் குரலே பழையபடி நாராசமாய்க் கேட்கிறது.

"வேண்டாம்... போதும்..." அலுத்துக் கொள்பவனுக்கு ஆறுதல் சொல்கிறார் வாசுதேவாச்சார்.

''அவசரம், வேண்டாமே கார்த்தி கேயன். நமக்கொண்ணும் நாளைக்குக் கச்சேரி இல்லியே... மெள்ள படிப்படியா போவோம், சரியா...?''

பொறுமையிழந்த கார்த்திகேயனின் பார்வை வினோதினியை பயமுறுத்து கிறது.

"அம்பிகே...!'' வாய்விட்டு அழைத்து மனதாரப் பிரார்த்தித்தாள் வினோதினி.

(தொடரும்)

# கண்ட



• காயத்ரி ஜெயராம்

பெண்களிடம் எந்த வயதிலும் வயதைப் பற்றி கேட்கக் கூடாது போலும்! அலமேலு அம்மாளிடம் 'உங்களுக்கு இப்போ என்ன வயசு பாட்டி...?' என்று கேட்டால்... "அது எதுக்கு ராசா இப்போ?" என்று இன்னமும் வெட்கம் படர பதிலளிக்கிறார். சுற்றியிருப்பவர்கள்தான் பெருமையுடன் "பாட்டிக்கு நூறு வயசுக்கு மேலே... அது எத்தனையோ மாமாங்கங்களைப் பார்த்திருச்சி" என்கிறார்கள். ஏரியாவில் இவருக்கு பெயரே நூறு வயசு பாட்டிதானாம். (ஆனா... அப்படித் தெரியலை பாட்டி!) நூற்றாண்டு அனுபவம் கொண்ட அலமேலு அம்மாளிடம் சில சினிமா நட்சத்திரங்களின் போட்டோக்களைக் காட்டி, "இந்தக் காலத்துப் பெண்களின் ஆடைகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டோம்.

"துணிமணின்னா எந்தக் காலத்திலேயும் பொம்பளைக்கு உசிருதான்யா! ஆடைங்க அழகுக்கு மட்டுமல்லாம, மானத்தைக் காக்குற கவசமும் கூட இல்லியா? அது என்னவோ இந்த கண்டாங்கிச் சேலை இருக்கே... அதைக் கட்டுனா மட்டும் பொண்டுகளுக்கு அப்படியொரு வனப்பு வந்திரும்.

அலை, அலையா கிடக்கிற கூந்தலை அடக்கமா பின்னிப் போட்டு, நெத்திப் பொட்டு, இலேசா திருநீறுன்னு அப்படியே புடைவை கட்டி வந்து நின்னா, தாயேன்னு கும்பிடத்தான் தோணும். வெட்கம், கம்பீரம், அழகு, வாசனைன்னு

புடைவை தர்ற
வார்த்தைகளிலே
கட்டிதான் அந்த
'சின்னச் சின்ன
வரும் சித்திரக் கை
'வண்ண வண்ணச்
சேலைங்க' வரைக்கு
இன்னிக்கு முச்சூடும்
ஒவ்வொரு பொண்ணுக்கு
கட்டின தேவதை இருப்பா
சிதனமாக் கொடுக்கிறவனு
கிராமங்களிலே உண்டு.
பாடினதாத்தான் இருக்கணு



• ப்ரியங்கா சோப்ரா

# ங்கிதான் ழகு!

்வுகளிருக்கே... அதை
ல முடியாது. புடைவை
த்தை உணரனும்.
ழ பின்னிப் பின்னி
சேலை' தொடங்கி
லங்க... வசதியான
சேலையைப் பத்தி
ட்டே இருக்கலாம்.
யும் ஒரு புடைவை
வதான் வெட்கத்தை
அப்புறப் பாட்டு
ந்து ரசிச்சவ



• கௌசல்யா

ஒரு காலத்திலே ரவிக்கையே போடாம சேலை முந்தானையை மட்டுமே சுத்திக்கிற பழக்கமிருந்தது. ஆனா அப்போ கூட துளி ஆபாசமோ, அபத்தமோ இருக்காது. பிறகு தான் ரவிக்கை, மத்த உள்ளாடைங்க எல்லாம் அணிகிற பழக்கம் வந்தது. ஆனா இப்போ என் பேத்திங்க எல்லாம் "சேலையா...? அது அசிங்கம் அப்பத்தா"ங்குதுங்க!

அப்போவே படங்கள்லே கதாநாயகி எல்லாம் பாவாடை, சட்டை எல்லாம் போட்டிருப்பாங்க. இப்போ இருக்கிற சுடிதார் மாதிரி அப்போ ஒண்ணு இருந்தது. அஞ்சலி தேவி மாதிரியான கதாநாயகிகள் அதைப் போட்டுக்கிட்டு 'அழைக்காதே... அவைதனிலே என் ராசா'ன்னு டான்ஸ்




• ரம்யா

படம் : கதிர்ஜி

ஆடுறப்போ, அவ்வளவு அற்புதமா இருக்கும். ஆனா அதை நாம போட்டுக்கணும்னு நாங்க ஒரு நாளும் நினைச்சது கிடையாது'' என்றவர், போட்டோக்களை உற்றுப் பார்த்துவிட்டு ஒவ்வொன்றுக்குமாக அளித்த கமெண்ட்:

''இந்த பொண்ணுக்கு (ப்ரியங்கா சோப்ரா) நல்ல எடுப்பான, குடும்பப் பாங்கான முகம். இத்தனை நகைங்க, நல்ல துணிமணிங்க போட்டும் நெற்றியிலே ஒரு பொட்டு வைச்சிக்காததுதான் பெருங்குறை. இது மாதிரிதான் பல படிச்ச பொண்ணுங்க பொட்டு வைச்சிக்கிறதை நாகரிகக் குறைவாக நினைக்கிதுங்க. ம்... என்னத்தைச் சொல்றது?

இந்தப் பொண்ணுகூட (காயத்ரி ஜெயராம்) பொட்டு வைச்சிக்கலை. அதுமாதிரி கண்றாவியா கறுப்பு கலர்லே பேண்ட், சட்டை போட்டிருக்கு. கறுப்புன்னா அபசகுனம்ங்கிற நம்பிக்கை இப்பவும் எங்க கிராமங்கள்லே இருக்கு. இது தவிர, அந்த காலத்திலே ஆண்களே பேண்ட், சட்டை போட்டுக்கிறதுன்னா, அப்படி கூச்சப்படுவாங்க. ஆனா இந்தக் காலத்திலே ஆம்பளைங்களுக்கே போதாத அளவுக்கு பொண்ணுங்க எல்லாம் பேண்ட் துணி எடுத்திடுதுங்க. கேட்டா இதுதான் எங்களுக்கு வசதின்னு சொல்லுதுங்க'' எனறவர் 'குத்து ரம்யா' போட்டோவை பார்த்து இடுக்கிட்டு,



• அலமேலு அம்மாள்

''இதென்ன... இந்தப் பொண்ணு இப்படி பாதி கிழிஞ்சி போன சட்டையைப் போட்டிருக்கு?'' என்றவரிடம் ''சட்டையே இவ்வளவுதான் பாட்டி'' என்றார், அருகில் நின்றிருந்த இளவட்டம்.

''ஆள்பாதி, ஆடை பாதின்னு சொல்வாங்க. இந்தப் பொண்ணு என்னனா ஆளும் பாதியா இருக்கு, ஆடையும் பாதியா இல்லே இருக்கு!'' என்று நச் கமெண்ட் அடித்தார்.

கடைசியாக நடிகை, கௌசல்யாவின் போட்டோ!

''என் கண்ணுக்குத் தெரிஞ்சி இந்த நூற்றாண்டிலே ஏற்பட்ட முன்னேற்றம் பெண்களோட ஆடைகளிலே ஏற்பட்ட மாற்றம்தான். வெளிநாட்டு பாதிப்பும், மோகமும் நம்ம பொண்ணுங்ககிட்டே பரவிடிச்சு. நல்லதுக்கும், கெட்டதுக்கும் நூல் அளவு வித்தியாசம்தான். அது சரியா தெரியலைன்னா, எவ்வளவு நெய்தாலும் துணி தப்பாதான் வரும்.

பொண்ணுங்களுக்கு அழகு புன்னகை, குறைவான நகை, கண்களை உறுத்தாத பாந்தமான ஆடை... இதெல்லாம் இருந்தா பளிச்சின்னு ஒரு கம்பீரம் கிடைச்சிடும். கண்டாங்கி, மடிசார்னு சேலைகள் ஒவ்வொண்ணும் ஒரு ரகம். அதிலே இருக்கிற அழகும், நறுவிசும் வேற எதுக்கும் வராது'' என்கிறார் அழுத்தமாக!

- சோமாஸ்



'' 'மெட்டி ஒலி' டைரக்டர் வயசானவங்களுக்காக ஒரு சீரியல் எடுத்தா என்ன பேரு வைப்பாரு...?''

''முட்டி வலி...''

- சீனிவாசன்



17ம் பக்க
விடை

மாறாக, பிரச்னையின் மூலாதாரத்தை உணர்ந்து, அதைத் தீர்ப்பதற்கு பரஸ்பரம் முயற்சித்தார்கள். அதற்கான ஒரு சான்றுதான் 'பொம்மை'யில் வெளியான எம்.ஜி.ஆரின் இந்தப் பேட்டி. மேலும் அந்தப் பேட்டியிலிருந்து...

''இப்போது சிவாஜி ரசிகர் மனறத் தலைவராக இருக்கும் சின்ன அண்ணாமலை சில வருஷங்களுக்கு முன் என்னிடம் வந்தார். 'சிவாஜி வரலாற்றை நான் படமாக்கப் போகிறேன். நீங்கள்தான் இதிலே சிவாஜியாக நடிக்கணும்' என்றழைத்தார். நான் இதற்கு மறுத்து விட்டேன்.

பின்னர் டைரக்டர் ராமண்ணா, அவர் தயாரிக்கும் சிவாஜி வரலாற்றுப் படத்தில், நான் நடிக்க வேண்டும் என்றழைத்தார். 'சிவாஜிங்கிற பட்டம் ஏற்கெனவே தம்பி கணேசனுக்கு இருக்கிறது. ஆகவே சிவாஜியின் வரலாற்றிலே, நான் அந்தப் பாத்திரத்திலே நடிக்கிறதுக்கு என் மனசாட்சி இடம் தரவில்லை' என்று சொல்லிவிட்டேன். இது விஷயமாக ராமண்ணா, அண்ணாவைப் பார்க்கப் போகிறார் என்று தெரிந்ததும், அவரை நானே முந்திக்கொண்டு, அண்ணாவிடம் போனேன், அப்போது அண்ணா சொன்னார்...

'ஏற்கெனவே சிவாஜிங்கிற பட்டத்தை தம்பி கணேசனுக்குக் கொடுத்தது நமது கட்சி. அந்தப் பட்டம் அவருக்கு நிலைச்சி இருந்தால்தான், நாம் கொடுத்த பட்டத்திற்கும் கௌரவம் இருக்கும்' என்று சொல்லிவிட்டு... 'நீங்க செய்த முடிவு சரியான முடிவு' என்றார்.

இதுபோல இன்னொருவரிடம் இருக்கும் கலையையும், திறமையையும் நாம் ஆதரிக்க வேண்டும் என்கிற தெளிவு கொண்டவர்கள் என் ரசிகர்கள். அதனால் அவர்கள் சிவாஜி படங்களையும் விரும்பிப் பார்க்கிறார்கள். ஆனால் என்னை இழிவுபடுத்தும் வார்த்தைகளோ, எனது கொள்கைகளை இழிவுபடுத்துவதாகவோ இருந்தால், அந்த மாதிரிப் படங்களுக்குப் போக மாட்டார்கள்.''

**அட!**

எம்.ஜி.ஆர்தான் அந்த ஹீரோ. 1960களில் எம்.ஜி.ஆருக்கும், சிவாஜிக்கும் இடையில் கடுமையான போட்டி நிலவிய கால கட்டம். ஆனால் ஒருவரையொருவர் திட்டி பேட்டியளிக்கவில்லை. சினிமாக்களில் 'பஞ்ச்' டயலாக் பேசவில்லை.

தொகுப்பு: **பாலா**

# அந்த நாள் ஞாபகம் – 8
# திரையுலக நினைவுகள்

கமலஹாசனின் நடிப்பின் மீது போடப்பட்ட முதல் வெளிச்சம் அதுதான். போட்டவர் என் தந்தை.

"நாளைக்கு இந்தப் பையனை அழைத்துக் கொண்டு போய் டைரக்டரிடமும், ஜெமினி கணேசனிடமும் காட்டு" என்றார்.

"எந்த ரோலுக்கு அப்பச்சி?" என்று கேட்டேன்.

"அதாம்பா... நாம டெய்ஸி ராணியை 'புக்' பண்ணியிருக்கோமே, அந்த ரோலுக்குத்தான்."

'களத்தூர் கண்ணம்மா' படத்தில் அறிமுகமான சுட்டிப் பையன் கமல்ஹாசன், இன்று கலைஞானியாக உயர்ந்திருக்கிறார்.

" 'யார் பையன்'லே ஆக்ட் பண்ணி நல்ல பேர் இருக்கு டெய்ஸி ராணிக்கு. இப்ப ஹிந்தியில் அந்தக் குழந்தை பாப்புலராக இருக்கு. நாம அவளை ஏற்கெனவே இந்தப் படத்தில் நடிக்கச் சொல்லி, பத்தாயிரம் ரூபா சம்பளம் பேசி அட்வான்ஸ் கூட ஆயிரம் ரூபா கொடுத்தாச்சே..."

"எனக்கென்னமோ அவளை விட இந்தப் பையன் ஃப்ரெஷ்ஷா, பிரைட்டா இருக்கான்னு தோணுது... இவனைப் போட்டா பெட்டரா இருக்கும்னு நினைக்கிறேன்..."

அப்பச்சி ஒரு முடிவுக்கு வந்து விட்டது புரிந்தது.

டைரக்டர் பிரகாஷ் ராவ், ஜெமினி கணேசன், சாவித்திரி மூன்று பேருக்குமே கமல்ஹாசன் என்ற அந்தச் சிறுவனைப் பார்த்ததும் பிடித்துப் போயிற்று.

மேக்-அப் டெஸ்ட் எல்லாம் எடுத்து ஓ.கே. ஆகிவிட்டது. படப்பிடிப்பு அரங்கத்திற்கு கமல்ஹாஸனைக் கூட்டிப் போனேன். 'கண்களின் வார்த்தைகள் புரியாதோ' என்ற பாடல் காட்சிதான் கமல் பார்த்த முதல் ஷூட்டிங்.

படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. அது ஒரு மாமரத்தடி ஸீன். பச்சைப் பேப்பர் கட்டிய டூப்ளிகேட் மாங்காய்களைக் கொண்டு 'செட்' அமைத்திருந்தோம்.

'எனக்கு அந்த மாங்காய் வேணும் அங்கிள்' என்று ஆர்வமாய், உடன் நடித்த ஜெமினி கணேசனிடம் கேட்டான் சிறுவன் கமல்.

குறும்புக்கார ஜெமினியோ, சீரியஸாய் மரக்கிளையில் ஏறி, அங்கு தொங்க விடப்பட்டிருந்த மாங்காய் போன்ற டூப்பை பறித்துத் தந்தார்.

• 'களத்தூர் கண்ணம்மா'- படத்தில் சாவித்திரி, கமல்




அதை வாயில் வைத்ததும் புரிந்து கொண்டவனாய் 'ஐயையே... டூப் மாங்காய்' என்று சிணுங்கிக் கொண்டே தூக்கி எறிந்தான் கமல்.

வீடு போன்று அமைந்திருந்த செட்டில் படப்பிடிப்பு தொடர்ந்தது. முதலில் உண்மையான வீடு என்று நினைத்த கமல், விஷயம் தெரிந்ததும் 'ஐயையே... டூப் வீடு' என்று ஏமாற்றத்தில் கத்தியதை அங்கு எல்லோரும் ரசித்தோம்.

சாவித்திரி கமலுக்கு உப்புமா ஊட்டி விடுகிற ஸீன்.

கமல் வாயில் உப்புமாவை ஊட்டினார் சாவித்திரி. ஷாட் முடிகிற வரை அந்த உப்புமாவைத் தன் வாயில் அடக்கி வைத்துக் கொண்டிருந்து விட்டு, ஷாட் முடிந்ததும் 'ஐயே... டூப் உப்புமா' என்று சொல்லிக் கொண்டே, கோபத்துடன் அதை கமல்ஹாஸன் கீழே துப்பியதைப் பார்க்க வேண்டுமே!

ஏற்கெனவே மாங்காய், வீடு இதெல்லாம் 'டூப்' என்று உணர்ந்திருந்த அந்தச் சிறுவனுக்கு, உண்மையான உப்புமா அது என்பதை நம்ப முடியவில்லை.




அந்தக் காட்சியில் பயன்படுத்திய உப்புமாவை அப்போது உதவி டைரக்டராக இருந்த எஸ்.பி. முத்துராமன் அவர்களைச் சாப்பிடச் சொல்லி, விழுங்க வைத்து 'அது டூப் உப்புமா இல்லை' என்று விளக்கிய பிறகுதான் கமலின் கோபம் அடங்கி சமாதானமாயிற்று.

# விஸ்வரூபம்!

அந்தக் கமல்ஹாசன் இன்று எடுத்திருக்கும் விசுவரூபம் கண்டு நான் வியந்து மகிழ்கிறேன்.

**க**ளத்தூர் கண்ணம்மா படம் எட்டாயிரம் அடிவரை வளர்ந்திருந்த போது போட்டுப் பார்த்தோம். என் தந்தைக்குப் பல காட்சிகளில் திருப்தியில்லை. 'அம்மாவும் நீயே, அப்பாவும் நீயே' பாடல் காட்சி ஒன்றரை நிமிடம் வந்திருந்தது. அதை 'மூணு நிமிஷத்துக்கு நீட்டுங்கப்பா. அப்பதான் பையன் எஸ்டாப்ளிஷ் ஆவான்' என்றார் அப்பச்சி. டைரக்டர் பிரகாஷ் ராவ் ரொம்பவும் அப்-செட் ஆகி விட்டார். மறுபடியும் எடுப்பதில் அவருக்கு உடன்பாடில்லை.

அந்தச் சமயத்தில் பிரகாஷ்ராவ் வீடு கட்டி முடித்து, இன்னும் சில நாட்களில் 'கிரஹப் பிரவேசம்' வைத்திருந்தார். என் தந்தையிடம் "நான் உங்க படத்துக்குச் சம்பளமா நாற்பதாயிரம் பேசி, இருபதாயிரம் அட்வான்ஸ் வாங்கியிருக்கேன். நான் ரெண்டு மூணு நாள்ல 'கிரஹப் பிரவேசம்' வச்சிருக்கேன். அது முடிஞ்சி புது வீட்டுக்குப் போனதும் நான் உங்க படத்திலிருந்து வெளியே போனா, 'புது வீட்டுக்குப் போனதும் இப்படியாச்சி. வீடு ராசியில்லேன்னு பலரும் சொல்றாப்பல ஆயிடும். அதனால என்னோட வேலை

ஏவி.எம்.சரவணன்





• ஜெமினி கணேசன்

உங்களுக்குத் திருப்தியில்லாதபோது, ரிலீவ் பண்ணிடுங்க. நீங்க கம்ப்பெல் பண்ணா நான் வொர்க் பண்றேன்' என்று சொல்லியிருக்கிறார்.

அப்பச்சி இதைச் சொல்லி ''என்ன சொல்றீங்க?'' என்று எங்களைக் கேட்டார்.



• எஸ்.பி. முத்துராமன்

''கம்ப்பெல் பண்ணா, வொர்க் பண்றேன்னு அவர் தான் சொல்றாரே?'

"இதோ பாரப்பா. ஒரு அட்டெண்டர் பையன் போறேன்னு சொன்னாக் கூட, நாம கம்ப்பெல் பண்ணி அவனை வச்சிக்கக் கூடாது. பின்னால் ஏதாவது பிரச்னை வந்தா, 'நான் அப்பவே போறேன்னு சொன்னேன். அவங்கதான் கட்டாயப்படுத்தி இருக்கச் சொன்னாங்க'ன்னு சொல்ற மாதிரி எதுக்கு? இவரோ டைரக்டர். கேப்டன் ஆஃப் ஷிப். எப்ப அவர் மனசில் ஒத்துவராதுன்னு விழுந்திடுத்தோ 'இன்ஸிஸ்ட்' பண்ணாதீங்க. ரிலீவ் ஹிம்'' என்றார்.

நாங்களே விரும்பி வெளியிலிருந்து அழைத்து வந்த டைரக்டர் பிரகாஷ்ராவை வைத்து படத்தை முடிக்க முடியாமல் போனது, எனக்கு வருத்தமாக இருந்தாலும், வேறு வழியில்லை. அதன் பிறகு பீம்சிங் அவர்களை வைத்து 'களத்தூர் கண்ணம்மா'வை எடுத்து முடித்தோம்.

இந்தப் படத்தின் வெற்றிக்கு கவியரசு கண்ணதாசன் அவர்களின் பாடல் வரிகளும் பெரிய காரணமாக அமைந்தன. அருவி போல அவர் வரிகளைக் கொட்டியதைப் பார்த்து, நாங்கள் வியந்து நின்றோம்.

பிரகாஷ்ராவ் நல்ல டைரக்டர்தான் என்றாலும், தமிழில் அவ்வளவு புலமை இல்லாததால் கண்ணதாசனின் வரிகளில் இருந்த அர்த்தங்களை அவரால் சட்டென்று புரிந்து கொள்ள முடியவில்லை. 'இன்னொரு பல்லவி... இன்னொரு பல்லவி' என்று கவிஞரை பிரகாஷ்ராவ் குடைந்து கொண்டேயிருந்தார்.

'அருகில் வந்தாள்... உருகி நின்றாள்' என்ற பாட்டுக்கு, சொன்னால் நம்புவது கூட கடினமாக இருக்கும்... ஒன்றல்ல இரண்டல்ல... ஐம்பத்தெட்டு பல்லவிகளை எழுதிக் கொடுத்துவிட்டு, 'எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று எழுந்து போய் விட்டார். எல்லாமே லட்டு லட்டான பல்லவிகள். எதை எடுப்பது, எதை விடுவது என்று குழம்பிப் போய், பிறகு அந்த ஐம்பத்தெட்டிலிருந்து எட்டு பல்லவிகளை எடுத்து அதையே முழுப் பாட்டாக அமைத்துக் கொண்டோம்.

இன்னொரு உண்மையையும் நான் இங்கே சொல்லியாக வேண்டும். அந்தப் படத்தில் பாடல்கள் எல்லாம் மிகவும் பிரபலமானதற்கு, என் சகோதரர் குமரன் முக்கியமான காரணம். அப்போதெல்லாம் எங்கள் படங்களில் பாடல்களை ஓ.கே. செய்யும் பொறுப்பு அவருடையதுதான். திருப்தியாக வரும் வரை விடமாட்டார். ட்யூன்களை மாற்றி மாற்றிப் போடச் சொல்வார். இசையில் அவருக்கு அதிக ஆர்வமுண்டு. 'இந்த இடத்தில் இந்த இசைக் கருவியைப் பயன்படுத்தலாமே... இந்த 'பிட்' இங்கே பொருத்தமாக இருக்குமே' என்றெல்லாம் யோசனை சொல்லக் கூடிய அளவுக்கு அவருக்குத் தெரியும். எங்கள் படங்களில் மியூஸிக்கைப் பார்த்துக் கொள்வது அவரது டிபார்ட்மெண்ட்டாக இருந்தது.

'அம்மாவும் நீயே' பாடலும், அந்தப் பாடல் காட்சியும், கமலின் அருமையான நடிப்பும், ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. 'களத்தூர் கண்ணம்மா' சிறந்த முறையில் தயாராகிக் கொண்டிருந்த சமயம், அதே கதையை, வேறொரு நிறுவனம் படமெடுப்பதாகத் தகவல் வந்தது.

(இன்னும் சொல்வேன்)

# 'குறுந்'தொகை

## கையெழுத்தின் வளர்ச்சி


'கலைஞன்' என்ற பெயரில் ஒரு கையெழுத்துப் பத்திரிகை வந்தது. எட்டாண்டுகள் வெளிவந்த மாத இதழ். 32 பக்கங்கள். 50களின் இறுதியில் 60களின் தொடக்கத்தில் நடத்தப்பட்டது. திரை விமர்சனங்கள், நகரத்தார் பற்றிய கட்டுரைகள், சினா குறித்த ஆய்வுகள் என அச்சிதழ் எதற்கும் குறையாத தரத்தில் அமைந்திருந்தது. அதை நடத்தியவர்கள், பின் ஓர் இலக்கிய அமைப்பையும் தொடங்கினார்கள். நானூறு மாதங்களுக்கும் மேலாக ஒவ்வொரு மாத கடைசி சனிக்கிழமையும் சிறுகதை விமர்சனக் கூட்டத்தை அந்த அமைப்பு இப்போதும் நடத்துகிறது. அதன் அமைப்பாளர்கள் மந்திய அமைச்சர் ப. சிதம்பரம், அவரது சகோதரர் ப. லட்சுமணன், மற்றும் ஆர்.ஏ.கே. பாரதி. அமைப்பு: இலக்கியச் சிந்தனை

## அத்யந்தகாமம்


பல்லவ மன்னன் ராஜசிம்மனின் இன்னொரு பெயர் அத்யந்தகாமன். அவன் எழுப்பிய குகைக் கோயிலே தர்மராஜா ரதம் எனப்படும் மாமல்லபுரக் கலைப் படைப்பான அத்யந்தகாமம். அண்மையில் தர்மராஜா ரதம் பற்றி மட்டுமே ஆய்வு செய்து, அழகிய தமிழ் நடையில் ஒரு நூல் வந்துள்ளது. தலைப்பு: 'அத்யந்தகாமம்'. நூலாசிரியர்கள் மு. நளினி, இரா. கலைக்கோவன். கோயில்கலை ஆய்வுத்துறை, தொ.மு.சி. ரகுநாதனின் சகோதரர் பாஸ்கரமார்த்தாண்டன், கல்கியின் புதல்வி ஆனந்தி ராமசந்திரன், நாராயணஸ்வாமி போன்ற சிலரால் வளர்ந்தது. ஆன்மிக நோக்கிலும் சிற்ப நோக்கிலும் இத்தகைய நூல்கள் எழுதத் தனித் திறன் தேவை. கோயில் ஆய்வுத் துறையில் சீரான பார்வையுடன் தொடர்ந்து சாதனை படைத்து வரும் மிகச் சிலரில் ஒருவரான திருச்சி இரா. கலைக்கோவன், கண் மருத்துவர். பழந்தமிழறிஞர் இராசமாணிக்கனாரின் புதல்வர். இலக்கியம், வரலாறு, மருத்துவம் எனப் பல துறைகளில் நூல் எழுதுபவர்.

## காதலிக்குக் கல்யாணம்!

திரைப் பாடலாசிரியர், பட்டிமன்றப் பேச்சாளர், சொற்பொழிவாளர் எனப் பன்முகம் கொண்டவர் வைகைச் செல்வன். அனைத்திந்திய எழுத்தாளர் சங்கம் நடத்திய கவிதைப் போட்டியில் தொடர்ந்து நான்குமுறை முதல் பரிசு பெற்றவர். நாவல், கவிதை, சிறுகதை


• சாவி


• பாரதி


• ப. லட்சுமணன்


• கலைக்கோவன்


• வைகைச் செல்வன்

எனப் பல நூல்களின் ஆசிரியர். தமிழில் எம்ஏ முடித்த இவர், இப்போது முனைவர் பட்டத்துக்குப் பதிவு செய்து கொண்டிருக்கிறார். தலைப்பு: 'தமிழ் இணைய இதழ்கள் - ஓர் ஆய்வு'. விரைவில் வெளி வரவிருக்கும் கவிதைத் தொகுப்பின் தலைப்பு 'என் காதலியின் கல்யாணப் பத்திரிகைகள்'.

## என் கேள்விக்கென்ன பதில்?

'சுருக்கமாக உங்களால் பதில் சொல்ல முடியமா?' என்று கேள்வி பதில் பகுதியில் ஒரு வாசகர் கேட்ட கேள்விக்கு சாவி சொன்ன பதில்: 'ம்!'

- திருப்பூர் கிருஷ்ணன்



## அமரர் கல்கி

# அரியாசனத்தில்

"இராஜ போகத்தினாலும் இராஜ்யாதிகாரத்தினாலும் மனங் கலங்காத மனிதர் இவர். எத்தகைய செல்வங்களும் சம்பத்துக்களும் இவருடைய வைராக்கியத்தைக் குலைக்க முடியாது. மகா லக்ஷ்மியை மகளாகப் பெற்றாலும், இவருடைய உள்ளத் தூய்மைக்குப் பங்கம் நேராது!'' என்று முடிவு செய்து, ஸ்ரீதேவியானவள் மிதிலாபுரியில் ஜனக மகாராஜருடைய திருப்புதல்வியாக அவதரித்தாள். சீதை என்றும், மைதிலி என்றும், ஜானகி என்றும் பெயர் பெற்றாள்.

அந்த நாள் முதல் இன்று வரையில் பெருஞ் செல்வத்தினிடையே திட வைராக்கியத்துடன் வாழக்கூடிய மகான்களுக்கு, ஜனகமகாராஜரை உதாரணமாகச் சொல்வது பாரத நாட்டில் வழக்கமாயிருந்து வருகிறது.

புண்ணிய பாரத பூமியில் இன்றைய தினம் நம்மிடையே ஒரு ஜனகமகாராஜர் இருக்கிறார். பாரத நாட்டின் தென் பகுதியில் தெய்வத் தமிழகத்தில் பிறந்த புண்ணியர் அவர். அரண்மனை வாழ்வையும், ஆசிரமக் குடிசையையும் ஒன்றாகக் கருதுகிறவர். சுகத்தையும் துக்கத்தையும் சமமாக எண்ணுகிறவர். போற்றுதலினால் பூரிப்பதில்லை; வசை மொழிகளினால் ஆயாசமடைவதுமில்லை. பதவியையும் அதிகாரத்தையும் அவர் தேடிச் செல்வதில்லை; அவை தேடி வரும் போது பயந்து ஒதுங்குவதுமில்லை. தாமரை இலைமீதுள்ள பனித்துளியைப் போல், எந்தவிதப் பதவியையும் வகிக்கக் கூடியவர். வகித்து நடத்திய பதவி தம்மை விட்டுப் போனால் சிறிதும் சஞ்சலம் அடையாதவர்.

நண்பருக்கு நண்பர் அவர்; எதிரிகளுக்கும் அவர் நண்பர்! நம் காலத்தில் 'அஜாத சத்ரு' என்று சொல்லக் கூடிய சாத்வீக புருஷர். அவரைச் சிலர் தங்களுக்கு எதிரி என்றும், விரோதி என்றும் எண்ணுதல் கூடும். ஆனால் அவர் இந்தப் பூவுலகில் பிறந்த யாரையும் தன் எதிரியாகவோ, விரோதியாகவோ எண்ணுவது கிடையாது.

**"நிலையிற்றிரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது"**

என்று தமிழ் மறை தந்த பொய்யா மொழிப் புலவர் வாக்கை இன்று நம் கண் எதிரே மெய்யாக்கி வருகிறவர். அவர் யார் என்று சொல்லவும் வேண்டுமா? நம் அருமைத் தலைவர் ராஜாஜி அவர்கள்தான்.

இந்திய தேசமே பார்த்து வியக்கும் வண்ணம் ராஜாஜி சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாக இரண்டு வருஷம் பதவி வகித்தார். பதவியைத் துறக்க வேண்டிய காலம் வந்தது. "பதவியைத்தான் விடப்போகிறோமே? எது எப்படிப் போனால் என்ன?" என்று கைக்கு வந்திருந்த ஆபீஸ் 'பைல்'களையெல்லாம் அப்படியே கட்டோடு திருப்பி அனுப்பி விட்டாரா? கிடையாது. இரவும்

**டிசம்பர் 25 - ராஜாஜி நினைவுநாள்**

# ஜனக மகாராஜா

பகலும் தினம் இருபது மணி நேரம் வீதம், நாலு நாள் இடைவிடாத வேலை செய்தார்; கையில் இருந்த 'பைல்'களையெல்லாம் பைசல் செய்தார். பைசல் செய்த பைல்களைச் சர்க்கார் வாங்கிக் கொடுத்திருந்த காரில் ஏற்றி, வில்லைச் சேவகனையும், ராஜீனாமாவையும் கூட அனுப்பினார்.



அனுப்பிய அடுத்த நிமிஷம் என்ன செய்தார் என்று நினைக்கிறீர்கள்?

தமிழ் அகராதியை எடுத்து வைத்துக் கொண்டு, ஆங்கிலத்திலுள்ள விஞ்ஞானச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல் கண்டு பிடிக்கும் வேலையில் ஈடுபட்டார்!

பதவியை ராஜீனாமா செய்ததற்கும், சிறை புகுந்ததற்கும் இடையில், மூன்று தினங்கள் இருந்தன. இந்த மூன்று தினங்களிலும் எத்தனை எத்தனையோ பேர் அவரைப் பார்க்க வந்தார்கள். என்னென்னவோ சொன்னார்கள். சிலர் உபசார மொழி புகன்றார்கள்; சிலர் ஆறுதல் கூறினார்கள்; சிலர் அவரைப் போற்றிப் பாராட்டினார்கள்.

அதையெல்லாம் ராஜாஜி ஒரு காதால் வாங்கி இன்னொரு காதால் விட்டுக் கொண்டிருந்தார். வந்தவர்கள் போனவுடனே மறுபடியும் தமிழ் அகராதியைப் புரட்டத் தொடங்கினார்! அவருடைய உள்ளம் நிம்மதியும் சாந்தமும் பெற்றுச் சம நிலையில் நின்றது.

ராஜாஜி பிரதம மந்திரி பதவி வகித்ததால் பிரதம மந்திரி பதவி உயர்வு பெற்றது. அம்மாதிரியே அவர் கவர்னர் உத்தியோகம் பார்த்த காரணத்தினால் கவர்னர் பதவியும் உயர்வு அடைந்தது!

சென்ற 1947ம் வருஷம் ஆகஸ்டு 15ம் தேதி இந்தியா பூரண சுதந்திர ஆட்சி அடைந்த போது, ராஜாஜி மேற்கு வங்காளத்தின் கவர்னர் பதவியை ஏற்கும்படி நேர்ந்தது.

அதற்கு ஒரு வருஷத்திற்கு முன்னால்

## ராஜாஜி ஜெயந்தி

உருவினையே கண்டெள்ளி ஓய்ந்தேன் பின்னர்
உலகத்தின் அச்சாணி நீ யென் றோர்ந்தேன்.
பொருளையெனத் தெளிந்த மனம், அடி ஆழத்தில்
பொன்னியென வண்டலிடும் சிந்தை, ஊன்றித்

துருவியெந்தச் சிக்கலையும் அவிழ்க்கும் ஆற்றல்,
தூங்காத பேரறிவு, இலட்சியத்தை
மருவியதன் வயமாகித் தன்னை முற்றும்
மறக்கின்ற உறுதி, இவை நீயே கண்டேன்.

அரசியல் - தேர்க்குதிரைகளாய் சத்தியத்தை
அஹிம்சையினை முதன்முதலாய்ப் பூட்டி நின்ற
பெரியவரும் காந்திமகான் தானும் 'என்றென்
பேறாகும் மனச் சாட்சி இவனே' என்னும்

பெருமைகொளும் படி உயர்ந்தாய். சுதந்திரத்தைப்
பெற எழுந்த அறப்போரில் உனைக் கரைத்தாய்
தருமத்தின் வேலியென நிமிர்ந்தாய். நாட்டின்
தனிப்பெரிய தவமாக வளர்ந்தாய், ஐய.

**- பேராசிரியர் அ.சீ.ரா. எழுதிய இந்தக் கவிதை இதுவரை வெளிவராதது! இதை நமக்கு அனுப்பியனர் மு. ஸ்ரீனிவாசன்**

1946 ஆகஸ்டில், கல்கத்தா நகரிலேதான் சமூகத் துவேஷப் படுகொலைப் பேய் தன்னுடைய கோர பயங்கரத் தாண்டவத்தை முதன் முதலாக ஆரம்பித்தது.

எனவே 1947 ஆகஸ்டு 15ல் கல்கத்தாவில் என்ன நேரிடுமோ என்று அனைவரும் கலக்கமுற்றார்கள்.

ராஜாஜி கல்கத்தாவுக்குச் சென்ற வேளை நல்ல வேளை; பலர் எதிர்பார்த்தபடி அங்கு சமூக பயங்கரக் கலகங்கள் நடைபெறவில்லை. யாரும் எதிர்பாராத முறையில், ஹிந்து - முஸ்லிம் சகோதர பாவம் தோன்றி வளர்ந்து வந்தது.

ராஜாஜி கல்கத்தாவுக்கு வந்த மறுதினமே "ராஜாஜி வேண்டாம்" என்ற கோஷத்துக்குப் பதில், "ராஜாஜிக்கு ஜே!" என்ற கோஷம் கிளம்பிற்று. அந்த கோஷம் நாளுக்கு நாள் வளர்ந்து வலுப்பெற்று வந்தது.

சென்ற வருஷம் ஆகஸ்ட் 15 வரையில் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் பதவி மிகப் பொல்லாத பதவியாயிருந்தது.

இந்திய தேசத்தின் முப்பத்தெட்டு கோடி மக்களுடைய வாழ்வை நிர்ணயிக்கும் யதேச்சாதிகாரம் கவர்னர் ஜெனரலுக்கு இருந்தது. வாரன் ஹேஸ்டிங்ஸ் காலம் முதல் ஜெனரல் வேவல் காலம் வரையில், அவர்கள் கையாண்ட அடக்கு முறைகளின் பயங்கரக் கொடுமைகளை நாமே நேரில் பார்த்திருக்கிறோம்; அனுபவித்துமிருக்கிறோம்.

அத்தகைய கவர்னர் - ஜெனரல் பதவிக்கு ராஜாஜி வரப்போகிறார். உலகத்திலேயே மிகப் பெரிய அரண்மனைகளில் ஒன்றில் வசிக்கப் போகிறார்.

"நெருப்பு அணைக்கும்போது சில சமயம் புகை உண்டாகுமல்லவா? அணைந்து போன பிரிட்டிஷ் ஆட்சி விட்டுச் செல்லும் புகைதான் இப்போதைய கவர்னர் ஜெனரல் பதவி!" என்று ராஜாஜியே சொல்லியிருக்கிறார். ஆயினும் புகை சில சமயம் ராட்சஸ வடிவம் அடைவதுண்டு. பதவி கர்வம், அதிகார ஆசை என்னும் இரண்டும் இராவண கும்பகர்ணர்களாக உருவெடுப்பதுண்டு. சுகபோக மோகம் என்னும் மோகினியாகவும் அது உருவெடுத்து விடும்.

இதை முன்னிட்டுத்தான் நம் அரும்பெரும் வட நாட்டுத் தலைவர்கள் தீர்க்காலோசனை செய்து, அரியாசனத்தில் ஜனக மகாராஜர் வீற்றிருந்தது போல், கவர்னர் ஜெனரல் பதவியை வகிக்கக் கூடிய வைராக்கிய சீலரை அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்கள் செய்துள்ள முடிவை நாம் போற்றிப் பாராட்டுகிறோம். ○

# புக் பேங்க்





**கல்வி முறையில் காந்தியப் பரிசோதனை - இரா. தண்டபாணி**

பாதிச் சொத்தை எழுதிக் கொடுத்து கான்வென்ட்டில் எல்.கே.ஜி அட்மிஷன் வாங்கி, குழந்தை 'ரெயின் ரெயின் கோ அவே' சொன்னதும், ரிடையராகி ஸ்டேட்ஸில் செட்டிலாகக் கனவு காணும் பெற்றோர்களும், அந்தக் குழந்தைகளும் வாழ்க்கையில் இழக்கப் போவது எவையென்பது 'சேவாலயா' வுக்கு வந்தால் புரியும். மகாத்மா சொன்னபடி 'தூய்மை, உண்மையே கல்விக்கு அஸ்திவாரம்' என்ற கொள்கையில் ஒழுக்கம், கட்டுப்பாடு, பண்பு பிரதானமாக இருக்க, தொழிற்கல்வியை இன்னும் முக்கியமானதாக வைத்து நடத்தும் சேவாலயா பள்ளியின் நோக்கம், செயல்பாடு, உருவான விதம் அனைத்தையும் விளக்கும் நூல்.

**தாயரம், நடுத்தெரு, வெளியனூர் போஸ்ட், மயிலம் வழி, திண்டிவனம் 604 304, விலை. ரூ. 30/-**

**சதுரங்கச் சிப்பாய்கள் - முத்துராமன்**




தற்போது வருகிற நூல்களுக்கும் தலைப்புகளுக்கும் ஏழாம் பொருத்தம்தான் பெரும்பாலும். ஆனால் இதில், வாழ்வின் ஏக்கங்களும், தாக்கங்களும், நோக்கங்களும் கூறுகிற விதத்தில், நாம் பகடைக்காய்கள்தான் என்பது வெகுவாகவே பொருந்துகிறது. ஆட்டி வைப்பது தெய்வமோ, விதியோ, ஆடும் ஆட்டத்தில் தோற்றுத் தோற்று ஜெயிப்பதை அலங்காரமோ, அபரிமிதமோ இன்றி, வெகு இயல்பாகச் சொல்லும் சிறுகதைகளின் தொகுப்பு.

**கிழக்கு பதிப்பகம், 16, கற்பகாம்பாள் நகர், மயிலை, சென்னை 600 005, விலை ரூ. 35/-**

**ஞாபக யாத்திரை - கண்ணுகுடி சுப்பு**




மரபுக்குக் கீழே, உரைக் கவிதைக்கு மேலே, தமிழின் ஒயிலான நடையழகையும், ஒசிந்த இடையழகையும் காட்டும் வசன கவிதைகளில், எல்லாரையும் போல் இயற்கையையும், காதலையும், யதார்த்தத்தையும் வர்ணிக்கும் கரும்புத் துண்டுகள். சோகமும், கோபமும், ரசனையும் இயல்பாக வெளிப்படுத்துகிற, ரசிக்க வைக்கும் கவித் தொகுப்பு.

**எம்.எஸ். பீரியாடிகல்ஸ், பப்ளிகேஷன்ஸ், 54. ராஜாபாதர் தெரு, தி.நகர், சென்னை - 17, விலை ரூ.35/-**

**- விஷ்வக்**

# 22 வேழனுக்குச் சோதனை

விஷ்வக்ஸேனன்

"ராகுலன்" - பகதத்தன் உச்சரித்த அந்தப் பெயர் அவனுக்கும், பராந்தகனுக்கும் சித்தத்தில் உஷ்ணத்தை ஏற்படுத்தியிருப்பதைக் கவனித்த கூபக முதியவரின் முகத்தில் சந்தேகச் சாயை படர்ந்தது. அவர் விழிகளில் தெரிந்த கேள்விக்குறியைக் கண்ட பகதத்தன்,

"தலைவரே, இந்த ராஷ்டிரகூட ராகுலன்தான் படைத் தலைவரை உறையூரில் கொல்ல முயன்றவன். வெள்ளலூரில் நம் இந்தள தேவரைக் கொன்றவன். மேலமங்கலத்தில் தாக்க முயன்று தப்பி ஓடியவன். வில்லவனுடன் தற்போது சேர்ந்திருக்கிறான். எல்லையைக் கடக்க முடியாத வில்லவனிடம் கொற்கையில் களவாடிய முத்துக்களும் இருக்க வேண்டும்" என்றான்.

வேழனுக்கும், முதியவருக்கும், மற்ற கூபக வீரர்களுக்கும் வேகம் பிறக்க, இந்த விளக்கம் போதுமானதாயிருந்தது. அயில் வேல்களையும், வாட்களையும், தட்டைக் கருவிகளையும் கூபக வீரர்கள் குவிக்க ஆரம்பித்தனர். ஆயுதங்களைத் தேர்வு செய்து கொண்டு அணிவகுக்கவும் செய்தனர்.

வேழன் முதியவர் முன்பாக மண்டியிட்டான். "தந்தையே, அனுமதி அளியுங்கள். அந்த ராகுலனையும், நம் ஜென்ம விரோதி வில்லவனையும் அழித்து, முத்துக்களை மீட்டு வருகிறேன்."

"மகனே, இது உனக்களிக்கும் முதல் பொறுப்பு. இதில், நீ வெற்றியடைந்தால், மன்னருக்கு ஓலையெழுதி, அடுத்து உன்னைத் தலைவனாக நியமித்து பட்டயம் அளிக்க வேண்டுவேன். நீ தலைமையேற்று நடத்து. நானும் உடன் வருகிறேன். புறப்படு" என்றார் முதியவர்.

பராந்தகன் வேழனைக் கையமர்த்தினான். "வேழனே, அந்த ராகுலன் பெரும் தந்திரசாலி. எந்த தர்மத்தையும் மதிக்காதவன். தவிர, வில்லவன் கவர்ந்து வந்த முத்துக்களும் அங்குதான் எங்கோ இருக்க வேண்டும். அதையும் நாம் கண்டறிந்து மீட்க வேண்டும். புரிந்ததா?"

வேழனின் பதில் தெளிவாக வந்தது. "தலைவரே, முத்துகளை வில்லவன் எங்கே பதுக்கியிருக்கக் கூடும் என்பதை நான் யூகித்து விட்டேன்."

"எங்கே...எங்கே மறைத்து வைத்திருக்கிறான்?" முதியவரின் குரலில் ஆர்வம் தொனித்தது.

"தந்தையே, நம் தென் எல்லையில் வள்ளியாறு ஓடுகிறது. அந்தக் காட்டாறு வெள்ளம் பெருக்கெடுக்கும்போது பாதை மாற்றிக் கொள்ளுமல்லவா?"

"ஆம்."

"நம் எல்லைக்கல்லான குத்துப் பாறைக்குக் கீழே * சிவகிரி ஆலயம் இருக்கிறது. வெள்ளம் வந்தால் ஆலயம் மூழ்கி விடுவது வழக்கமல்லவா? இப்போது வள்ளியாற்றில் வெள்ளம் ஓடுகிறது. வில்லவனுக்கும் இது தெரியும். முத்துக்களை நீருக்கடியில் ஆலயத்தில் கொண்டு மறைத்து வைத்திருக்க வேண்டும் அவன். அதனால்தான் நேற்றிரவு அவனும், அவன் வீரர்களும் நனைந்

---

* வள்ளியாற்றில் வெள்ளம் பெருக்கெடுக்கும் காலங்களில் மூழ்கி விடும் சிவகிரி ஆலயத்தைப் பற்றிய குறிப்பு. தி. இராசமாணிக்கனாரின் தென்னக குடைவரைக் கோயில்கள் நூல் - பக். 91ல் உள்ளது.

---

மதுட



தபடி ஓடியிருக்கிறார்கள்.''

''என்ன? நீருக்கடியில் ஆலயமா? பீமன் நாகலோகத்தில் பார்த்தது போலவா?'' பகதத்தன் குரலில் வியப்பு

# வைரம்

வழிந்தது.

''ஆம். உண்மைதான் தலைவரே, இது ஆண்டு தோறும் நிகழ்வதுதான். வெள்ளம் வடிந்தபின்பே

"பட்டிமன்றத் தலைப்பு என்ன?"

"வீரப்பனைப் பிடிப்பதற்கு ஆன செலவு அதிகமா? அல்லது வீரப்பனைக் கொன்ற பிறகு ஆகிற செலவு அதிகமா?"

- நா. பாரதி

மீண்டும் அங்கு வழிபாடுகள் நடக்கும்" என்றார் முதியவர்.

வேழனின் தலைமையில் கூபகர் படை அப்போதே புறப்பட்டது.

உச்சிப் பொழுது கடந்ததும் வீரன் கூறிய மூங்கிற்காடு நெருங்கியது. இடதுபுறம் புலப்பட்ட மரக்கூட்டங்களையடுத்து ஆற்றின் மணல்வெளியும், ஆற்றை ஒட்டி உயர்ந்த செங்குத்துப் பாறையொன்றும் தெரிந்தது.

"தலைவரே, அதுதான் குத்துப் பாறை. எமது எல்லைக் கல்" என்றான் வேழன்.

"அந்தப் பாறைக்குக் கீழே ஆற்று வெள்ளம் திரும்பி ஓடுகிறது. நீருக்கடியில்தான் அந்த இடத்தில் ஆலயம் இருக்கிறது" என்றார் முதியவர்.'

பராந்தகன் நேர் எதிரில் தென்பட்ட செடி கொடிகளும் புதர்களுமான பகுதியையும், வலதுபுறம் நீண்ட ஆற்றின் மணல் வெளியையும் கவனித்தான். புதர்களுக்கு நடுவில் அவ்வப்போது, வாட்கள் பளிச்சிடுவதையும், மனித நடமாட்டமிருப்பதையும் கவனித்தவன், வலதுபுறம் மணல் வெளியைத் தாண்டி மரக் கூட்டங்கள் தொடங்கிய இடத்திலும், கறுத்த உடலுடனும், கரங்களில் தாங்கிய ஈட்டிகளுடன் பலர் பதுங்கிப் பதுங்கி நடமாடுவதையும் கவனித்தான். ராகுலனும் வில்லவனும் தம் வீரர்களுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்பது புரிந்தது அவனுக்கு.

'வேழனே, நமது வீரர்களை இரண்டாகப் பிரித்துவிடு. ஒரு பிரிவுடன் நீ நேர் வடக்காகச் சென்று பாறைக்கு நேர் எதிரில் திரும்பி மணல்வெளியை அடைந்துவிடு. நான் மீதி வீரர்களுடன் நேர் தெற்கே சென்று அந்தப் புதர்க் காட்டுக்குள் நுழைந்து விடுவேன். இரண்டு பக்கமும் நெருக்கப்பட்டால் அவர்கள் தப்புவது அரிதாகி விடும். புரிந்ததா" என்றான் பராந்தகன்.

வேழன் அதீத மகிழ்ச்சியுடன் தன்னுடன் பாதி வீரர்களை அழைத்துக் கொண்டு, சற்றுப் பின்வாங்கி வலப்புறமாக அணி வகுத்துச் சென்றான். சரியாக ஒரு நாழிகை கழித்து கூபக வீரர்களை நிதானமாகவே நடத்திய பராந்தகன், முதல் நான்கு வரிசைகளில் அயில்வேல்களைத் தாங்கிய வீரர்களை நிறுத்தி, தாக்க வேண்டிய முறையை சுருக்கமாக விளக்கினான். தூரத்து மணல்மேட்டில் வேழனின் தலை தெரிந்ததும், தாக்குதலைத் தொடங்க உத்தரவிட்டான்.

முதல் வரிசையிலிருந்து ஜிவ்ஜிவ்வென்று காற்றைக் கிழித்துக் கொண்டு உயரே கிளம்பிய அயில்வேல்கள் புதர்களிலும், அடுத்து ஊடே தெரிந்த பாறைகளின் மறைவுகளிலும் இறங்கின. உள்ளிருந்து வில்லவனும் அவன் வீரர்களும், மறைவிடங்களை விட்டு கூச்சலிட்டபடி வாட்களுடன் பராந்தகனை நோக்கி ஓடி வந்தனர்.

அரை வட்டமாக அணிவகுத்து, நான்கு வரிசைகளில் நின்ற கூபக வீரர்களின் முன் வரிசை விற்களுடன் மண்டியிட்டு அமர்ந்தது. அடுத்த வரிசையிலிருந்து ஏக காலத்தில் அயில்வேல்கள் பறந்தன. மூன்றாவது நான்காவது வரிசைகள் தொடர்ந்து வேல்களை வீசி முடித்ததும், முன்னாலிருந்து அம்புகள் பறக்கத் தொடங்கின.

அதுவரை அணிவகுப்பு முறைகளையோ, வியூகம் வகுத்துத் தாக்குவதையோ அதிகம் அறிந்திராத கூபகர்கள், தேர்ந்த படைவீரர்களைப் போல் அர்த்த சந்திர வியூகம் வகுத்து சரமாறியாகத் தாக்குவதைக் கண்ட வில்லவன், அந்த முதல் தாக்குதலிலேயே தன் வீரர்கள் பாதிக்கும் மேலே மடிந்துவிட்டதைக் கண்டு



திகைத்தான். எஞ்சிய தன் வீரர்கள் கூபகர் படைக்குள் வாட்களை வீசியபடி கலந்த பின்னும், அணிவகுப்புக் கலையாமல் திடமான சுவர் போல நின்று அவர்கள் போரிடுவதையும், பராந்தகனின் வாள் செய்த சமிக்ஞைகளுக்கேற்ப பக்கவாட்டிலும், முன்னும் பின்னுமாக நகர்வதையும் கண்டு, இனி கூபகர்களை வெல்ல தன் வீரர்களால் இயலாது என்பதைப் புரிந்து கொண்டான். அந்த சோழ நாட்டு வாலிபனாகத் தெரிந்தவனை, எப்படியும் தீர்த்து விடுவது என்ற ஆவேசத்துடன் முன்னேறியவனை, பட்டையான கனத்த வாள் ஒன்று தடுத்தது. சற்று பருமனான உடலுடன், உருண்ட விழிகளுடன், விஷமச் சிரிப்புடன் வில்லவனை வழிமறித்தான் அந்த சோழ வாலிபனுடன் வந்தவன்.

அதேசமயத்தில் மணல்வெளியைக் கடந்து பாறையை நெருங்கிய வேழனின் நிலை வேறாக இருந்தது. ராஷ்டிரகூடத்தின் அந்த தேர்ந்த வீரர்கள், கூபகர்களின் அதீத பலமும் வேகமும் சேர்ந்த தாக்குதலில் சற்றுத் தடுமாறினாலும், தாக்குதலை ராஷ்டிர கூடர் போர் முறைக்கு மாற்றிக் கொண்டு எதிர்க்கத் தொடங்கினார்கள். வாள் வெட்டுக்களை சர்வ அலட்சியமாகத் தாங்கிய கூபகர்களின் உடல் வலிவும் நெஞ்சுரமும், உறுதியாகத் தாக்கிய விதமும், ராகுலனின் வீரர்களை அசர அடித்தன.

நெற்றியில் நீண்ட தழும்புடன் இருப்பவன் தான் ராகுலன் என்பதை அறிந்திருந்த வேழன், மற்றவர்களை விலக்கி, நேராக வாளை வீசியபடி முன்னேறினான். ராகுலனை நெருங்கித் தாக்கத் தொடங்கிய பின்பே, வேழனுக்கு பராந்தகன் அவனைப் பற்றிக் கூறியவை எத்தனை உண்மை என்பது புலப்பட்டது. பக்கங்களில் பாய்வது போல் வந்த ராகுலனின் வாள், திசைமாறி நேராகப் பாய்ந்து வேழனின் கழுத்திலும் தோள்களிலும் பதிந்து காயப்படுத்தியது.

தன்னை நிதானப்படுத்திக் கொண்ட வேழன், ராகுலனின் விழிகளை கவனிக்கவும், பராந்தகன் கற்பித்த முறையில் வாளின் சுழற்சியை மாற்றிக் கொள்ளவும் ஆரம்பித்தான். அதன் பிறகு அதி வேகமாகச் சுழன்று சுழன்று, சம்மட்டி கொண்டு அடிப்பது போன்ற வேகத்துடன் இறங்கிய வேழனின் வாள், ராகுலனை தடுமாற வைக்கத் தொடங்கியது.

ராகுலனின் விழிகளில் குரூரம் படர்ந்தது. மெல்லப் பின் வாங்கியவன் போரிட்டபடியே அந்தக் குத்துப் பாறையின் மீது ஏறினான். தொடர்ந்து அனாயாசமாகப் பாறையின்மீது



தாவிய வேழன், ராகுலனை உச்சியை நோக்கி விரட்டியபடி தொடர்ந்து வாளைச் சுழற்றினான்.

வில்லவனையும் அவன் வீரர்களையும் முற்றிலுமாக வீழ்த்திவிட்டு, பகதத்தனுடன் பாறையை நோக்கி ஓடி வந்த பராந்தகன், வேழனுக்கு உதவ, தானும் பாறைமீது ஏற முயன்றான்.

முதியவரின் கரம் நீண்டு பராந்தகனைத் தடுத்தது.

''பராந்தகரே, வேழனுக்கு உதவச் செல்ல வேண்டாம். தனிப்பட இருவர் போரில் ஈடுபடும்போது, குறுக்கிடுவது கூபகர் வழக்கமல்ல'' என்றார் அவர்.

''அபிமன்யுவுக்கு உதவாமல் அர்ச்சுனனைத் தடுத்த கதையாகவல்லவா இருக்கிறது'' என்றான் பகதத்தன்.

''முதியவரே, நீங்கள் கூறுவது யுத்த தர்மத்தை மதித்து நேரிடையாகப் போரிடும்

''தலைவர் தனியாவே நடைப்பயணம் கிளம்பிட்டாரே...ஏன்?''

''கூட வர்றவங்க சாப்பாடு, டிபன் தவிர கிலோ மீட்டருக்கு இவ்வளவுன்னு கூலி வேற கேட்டாங்களாம்!''

- அம்பை தேவா



# சுக்ர தசை?

**கோ**லிவுட்டின் லேட்டஸ்ட் நியூஸ், விஜய்யின் தந்தை எஸ்.ஏ. சந்திரசேகரன் மீண்டும் இயக்க வந்திருப்பது, படம் சுக்ரன். ஆனால் ஹீரோ விஜய் அல்ல. 7G ரெயின்போ காலனி படத்தின் கரடுமுரடான அறிமுக ஹீரோ ரவிகிருஷ்ணா. 'சட்டம் ஒரு இருட்டறை' பாணியில் காவல் நிலையம், நீதிமன்றம் இல்லாமல் படமெடுக்கத் தயங்கும் எஸ்.ஏ.சி சுக்ரனில் என்ன புதுமை செய்யப் போகிறார்? இளமை வேகம் சிறைச்சாலையில் கொண்டு போய் நிறுத்தும் என்பதாகக் கதை எழுதியிருக்கிறாராம். என்றாலும் படம் நல்லபடியாக போணியாக வேண்டாமா? இதற்காக சுக்ரனில் சிறப்பு வேடத்தில் நடிக்கிறார் விஜய். இவர் ஏற்கும் பாத்திரம் படத்தில் திருப்பு முனையை ஏற்படுத்துமாம். எஸ்.ஏ.சியின் இயக்கத்தில் நடித்தால் நமக்கு சுக்ரதசை என்று நம்புகிறார் ரவி கிருஷ்ணா. படம் வந்தால் திசை தெரிந்து விடும்.

- ஸ்ரீ

வீரர்களுக்குச் சரி, இந்த ராகுலன் எந்த தர்மத்தையும் மதிப்பவனல்ல" என்றான் பராந்தகன் உஷ்ணமாக.

பகதத்தனின் உருண்ட விழிகள் சிவந்து கிடந்தன. "முதியவரே, சற்று நிமிர்ந்து மேலே பாருங்கள்; எத்தனை விதமாகப் போக்குக் காட்டி அந்த ராகுலன் வாளை வீசுகிறான் என்பதை. வேழனின் உடல் முழுதும் காயங்களாகிக் கிடக்கிறது. குருதி வெளியேறிக் கொண்டேயிருந்தால் அவன் பலவீனப் பட்டு விடுவான். வேழனை விலக்கிவிட்டு நான் சென்று ராகுலனைப் பார்த்துக் கொள்கிறேன்" பகதத்தன் குரலில் சினம் பொங்கி வழிந்தது.

முதியவர் அசரவில்லை. "பகதத்தரே, மற்ற கூபக வீரர்களை கவனியுங்கள். அயில்வேலையோ, அம்பையோ எறிந்து இங்கிருந்தே அந்த ராகுலனைக் கொன்று விட முடியும். ஆனால் அவர்கள் எவரும் நகரவில்லை என்பதைப் பாருங்கள். இது வேழனுக்குச் சோதனை. இதில் வெற்றியுடன் ராகுலனைக் கொன்று அவன் மீண்டால், அடுத்த கூபகர் தலைவன் அவன்தான். ஒருவேளை மடிந்தாலும் நான் வருந்தமாட்டேன். பொறுத்துப் பாருங்கள். வேழனின் உறுதி குலையவில்லை. அவன் போரிடுவதைப் பாருங்கள்."

கூபகர் எல்லைக்கல்லான அந்தப் பெரும் குத்துப்பாறையின் மீது, வெகு உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது வாட்போர். எத்தனை காயங்கள் பட்ட போதிலும் வேழனின் வேகம் குறைந்ததாகத் தெரியவில்லை. பல போர்க் களங்களையும், வான் வீரர்களையும் கண்டிருந்த ராகுலனின் வீச்சிலும் வேகம் கூடிக் கொண்டிருந்தது. இருவரும் பாறையின் உச்சியை நெருங்கி விட்டிருந்தனர்.

பக்கவாட்டில் சுழன்று சுழன்று இறங்கிய வேழனின் வாளைத் தடுத்துச் சுழன்று, எதிர்ப்பக்கமாக விலக்கிய ராகுலன், வேழன் பாறையின் விளிம்பை அடுத்து கால்களைப் பதித்து நிற்பதைக் கவனித்தான். நேர்ப்பின்புறமாக இரண்டடி எடுத்து வைத்தவன், சட்டென்று முன்னே பாய்ந்தான். இரு கரங்களையும் சேர்த்து வேழனின் வாளை நேர் வீச்சில் தடுத்து, அவன் வாளின் பிடிக்கருகில் தன் வாளைப் பதித்து, எதிர்ப்புறமாகச் சுழற்றினான்.

வேழனின் கைவாள் அவன் கரத்தை விட்டுப் பறந்து, நேர் கீழே சுழித்துச் சுழித்து ஓடிய ஆற்று வெள்ளத்தில் சென்று விழுந்தது.

(தொடரும்)




# ஜெயின் சாம்பார்!

‘‘போன வாரம் நானும் மாமாவும் ட்ரிப்ளிகேன் போனோம். (என் வீடு நங்கநல்லூர்ல இருக்கு தெரியுமோல்யோ!) ஸாரதியை சேவிச்சுட்டு, வெளில வந்ததுதான் தாமதம், வயிறு பசியில நச்சரிக்க ஆரம்பித்திருச்சு. உடனே மாமா என்னை ‘ரத்னா கேப்’ ஹோட்டலுக்குக் கூட்டிண்டு போயி, “தி ஃபேமஸ் இட்லி - சாம்பார்” ஒரு பிளேட் வாங்கித் தந்துட்டார். அதை முழுசா சாப்பிட்டப்புறம் தான் பசியே நின்னுது. ஆஹா - என்னமா இருந்துச்சு தெரியுமோ! அப்படி சொக்கிப் போற அளவுக்கு அந்த சாம்பார்ல என்னதான் கலக்கறான்னு தெரிஞ்சுண்டு வந்துடலாம்னு, நேரா உள்ள போயி சீஃப் குக்கிடம் விசாரிச்சேன். நல்லா விளக்கமாவே சொன்னார் அந்தப் புண்ணியவான். அத இப்போ உங்களுக்காக சொல்றேன். முதல்ல என்னென்ன எடுத்துக்கணும்னு சொல்லிடறேன். கவனமா கேட்டுக்கோங்கோ.

துவரம் பருப்பையும், பாசிப் பருப்பையும் கலந்து 100 கிராம் எடுத்துக்கோங்கோ. கடுகு 1 டீஸ்பூன், சின்ன வெங்காயம் 100 கிராம், தக்காளி 200 கிராம், பச்சைமிளகாய் 4, எல்லாத்தையும் எடுத்து வச்சிக்கோங்கோ. அதோட கறிவேப்பிலை கொத்தமல்லியையும் சேர்த்துக்கணும்.

முக்கியமான விஷயம், அதுல ஸ்பெஷலா சேர்க்க வேண்டிய சாம்பார்



மைக்ரோவேவ் மாமி

பொடியை எப்படி தயார் பண்றதுன்னு சொல்லிடறேன். தனியா 1 டீஸ்பூன், மிளகாய் வற்றல் 4, வெந்தயம் அரை டீஸ்பூன், கடலைப் பருப்பு 1 டீஸ்புன் எல்லாத்தையும் வறுத்து, பொடி பண்ணி வச்சிக்கணும். இதை மட்டும் யாரிடமும் மூச்சு விட்டுடாதீங்கன்னு சீஃப் குக் சொன்னார்.

அடுத்து தக்காளி, வெங்காயத்தை பொடிப்பொடியா நறுக்கி வச்சிக் கோங்கோ.

முதல்ல பருப்பை கொஞ்சுண்டு மஞ்சள்தூள் சேர்த்து வேக வைச்சுக் கோங்க. நன்னா குழையற வரைக்கும் வேக வைக்கணும். ஓ.கே.வா

அடுத்து வாணலில ரெண்டு டீஸ்பூன் எண்ணெய் விட்டு நறுக்கி வெச்சிருக்கிற வெங்காயம், பச்சை மிளகாய் இலேசா வதக்கி, தக்காளியையும் சேர்த்து நல்லா வதக்கிக்கோங்கோ. ஏற்கெனவே வேக வைத்திருந்தேளோன்னா பருப்பு - அதை வதக்குன வெங்காயம், தக்காளியோட சேர்த்து தேவையான அளவு உப்பு போட்டு, அந்த ஸ்பெஷல் பொடியையும் கொஞ்சம் தூவி, கடுகு, பெருங்காயத்தை தாளிச்சு கொட்டி, நன்னா கொதிக்க விடுங்கோ.

நன்னா கொதிச்சப்றம் இறக்கி, நறுக்கி வச்சிருக்கிற கொத்தமல்லி, கறிவேப்பிலை போட்டேள்னா "தி ஃபேமஸ் ரத்னா கேப் சாம்பார்" ரெடி. ரெண்டு இட்லிய தட்டுல வச்சி, இந்த சாம்பாரை மேல ஊத்தி, நன்னா ஊறவிட்டு, ஸ்பூனால கட் பண்ணி சாப்பிட்டேள்னா, சும்மா தூளா இருக்கும் தெரியுமோ! உடனே டிரை பண்ணிப் பாருங்கோ! ஓ.கே.வா.

இன்னொண்ணையும் உங்களுக்கு சொல்லியாகணும். இப்போ ஒரு மாசமா "ஜெயின் சாம்பார்"னு ஒண்ணை இவா அறிமுகப்படுத்தியிருக்கா. இந்த ஜெயின் சாம்பார்ல, ஒன்லி தக்காளிதான் யூஸ் பண்றாளாம். இதுல ஆனியனுக்குத் தடா. இந்த சாம்பாருக்கு சென்னை மெரீனாவில் வாக்கிங் போற, வாக்கிங் போகாம வீட்லயே இழுத்து போர்த்திட்டு தூங்குற வி.ஐ.பி. வி.வி.ஐ.பினு ஏகப்பட்ட நபர்களின் நாக்குகள் அடிமையா இருக்குதாம். என்ன நாக்குல ஜலம் ஊர்றதோ!


# நவக்கிரக ஆன்மீக பயணம்

**நாள் : சென்னையில் இருந்து 7.1.05 இரவு புறப்பட்டு 10.1.05 காலை திரும்புதல்.**

**2 தினங்கள் ரூபாய் 1000/-**

வசதி : இரயிலில் படுக்கை வசதியுடன் சென்று வருதல். இரவு தங்க வசதியான அறைகள், திருத்தலங்களை சுற்றிப் பார்க்க வேன் வசதி உட்பட. (சாப்பாடு நீங்கலாக) மற்றைய தேதிகளில் சிறு சிறு குழுக்களாகவும் அழைத்துச் செல்லப்படும்.

**சென்னையில் தொடர்பு போன் : 24720885 Cell : 9444026585**

**VISWAM TOURS & TRAVELS**
**VISWAM GUEST HOUSE**

33, திருமஞ்சன வீதி, திருவிழந்தூர்,
மயிலாடுதுறை - 609 001.
போன் : (04364) 227228, 223458



# சின்னான் செய்திகள்



**நே**ரா விசுற ஒரு கம்பு, நேரா போகாம 360 டிகிரியிலயும் போயி, 36 பேரைத் தாக்கும்... கட்டை விரல் லேசா அசைஞ்சா, கட்டை அவிழ்த்துட்டு வெறியோட வர்ற காளை மாடு கதி கலங்கி நிற்கும்... "நான் பார்த்தா பசு... பாய்ஞ்சா புஷ்" இப்படி ஒரு பஞ்ச் டயலாக்... இதெல்லாம் 'சந்திரமுகி'யில கண்டிப்பா இருக்கும். ஆனா பாசிலோட 'மணிச்சித்திரத்தாழ்'ல கண்டிப்பா இருந்திருக்காது. அப்புறமென்ன, 'கதையைத் திருடிட்டாங்க, கதையைத் திருடிட்டாங்க'ன்னு 'சவுண்ட்' விட்டுக்கிட்டு வெட்டியா பஞ்சாயத்து வேற கூட்டப் போறாங்களாம்! என் ஃப்ரெண்ட் ஒருத்தன் சூப்பர் ஸ்டாரோட தீவிர ரசிகன். அவன் ஆவேசமா சொன்னதுதான் ஞாபகத்துக்கு வருது... 'தலைவா, உன் படத்துக்குக் கதையெல்லாம் தேவையா!'

**ந**டிகர், நடிகைங்க போடுற மேக்-அப்பே, ஏதோ மூஞ்சிய பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணுன லெவல்லதான் இருக்கு. ஆனா 'மிஸ். பிளாஸ்டிக் சர்ஜரி'ன்னு பிளாஸ்டிக் சர்ஜரி மூலமா செயற்கையா தங்களோட 'அழகை' அதிகரிச்சுக்கிட்ட பெண்களுக்கான போட்டி நடக்கப்போகுதாம். அதுல அறுபத்திரண்டு வயசுப் பார்ட்டி... ச்சீ... பாட்டி, பதினேழு லட்சம் ரூபாய் செலவழிச்சு தன் 'அழகை' கூட்டிக் கலந்துக்கிறாங்களாம். நம்மூர்ல இப்படி ஒரு போட்டி நடந்துச்சுன்னா போதும், அத்தனை புள்ளைகளும் ஐஸ்வர்யா ராய் ஆயிருவாங்கடோய்!

**கூ**டுவாஞ்சேரியில ஒரு புது மாப்பிள்ளை, 'மிடுக்கோட' புல்லட்ல மாமனார் வீட்டுக்கு விருந்துக்குப் போயிட்டிருந்தப்போ, ஒரு கொள்ளைக் கும்பல் வழி மறிச்சு, மூணு தங்க மோதிரம், ஒரு பிரேஸ்லெட், தங்க செயின், செல்ஃபோன், புல்லட் எல்லாத்தையும் புடுங்கிட்டு ஓடிட்டாங்களாம். மாப்பிள்ளை 'மாமனார்கிட்ட கொள்ளையடிச்சதெல்லாம், கொள்ளை போயிடுச்சே'ன்னு ஸ்பாட்லயே மயங்கிட்டாராம். எதையோ விதைச்சவன், அதையே அறுப்பானாமே, அதான் இது!

**'எம்**.பி. ஆயிட்டோம். டெல்லிக்குப் போனா அரசு தங்குறதுக்கு வீடு கொடுக்கும்னு நம்பி ஜாலியா வந்தோம். வீடு காலியா இல்லைன்னு சொல்றாங்களே'ன்னு மனசு 'வெம்பி'ப் போயிருக்காங்களாம் இருபத்தியேழு எம்.பிக்கள்! காரணம், மாஜிக்களான 'வினோத் கன்னா, திக்விஜய்சிங், மார்கரேட் ஆல்வா உட்பட பலர் எச்சரிக்கை, கட்டளை, நோட்டீஸ் எல்லாம் கொடுத்தும் 'காலி' பண்ணாம பிடிவாதம் பிடிக்கறாங்களாம். இந்தப் பிரச்னையைத் தீர்க்க 'துணை கமிட்டி'யெல்லாம் அமைச்சிருக்காங்களாம். கமிட்டியெல்லாம் எதுக்கு, நம்ம 'அம்மா'கிட்ட சொன்னா அழகா செயல்படுத்துவாங்களே! ஏன்னா அவங்கதான் 'காலி' பண்றதுல பெரிய ஆளாச்சே!

○

# அதிபத்தன் கூண்டு!

தேவநாதன்

"கருக்கல் முடியறதுக்குள்ளாற கடலுக்குள்ள போயிரனும்லே, வெசையாத் தள்ளு..."

அரையிருட்டில் கறுத்துச் சுருண்டு சிறி உயர்ந்த ஆக்ரோஷ அலைகள், அந்தப் படகைச் செங்குத்தாக நிமிர்த்தியதை அனாயாசமாகச் சமாளித்து, பழகிய லாகவத்தில் குதித்து ஏறி துடுப்பை வலித்தார்கள்.

"லேய்... அதிபத்தா... அந்தால ஸ்டியரைச் நடக்கி... நாம பாட்டுக்கு இந்தால மீனுக்குப் போறமேல... நாளக்கி தகலாறு ஆவாதா?"

"பெரிசு... சும்மாக்கெட... ஒரு வார மாச்சி சோத்தப் பாத்து. வூட்ல புள்ளயெல்லாம் சுருண்டு கெடக்கு. காய்ச்ச வேற. இவனுக வால்க ஒளிக சுத்து வானுவளே தவிர எவனும் பத்துப் பைசா தர மாட்டானுக. நீ வா, வூட்ல சொல்லிட்ட இல்ல. மூணு நாளு கணக்குதானே? வந்து பாத்துக்கலாம்."

வெளிச்சம் வருவதற்குள் கரை காணாமல் போய்விட வேண்டுமென்று வேகமாய்த் துடுப்பு வலித்து...வலித்து.

காட்டிலிருந்து எண்பது கி.மீ தொலைவில் இருந்தது அந்தச் சிக்கன நகரம். 'ஏதோ மாவத்த' என்று நெளிந்து கிடந்த கோணங்கித் தெரு வளைந்து திரும்பியதும், தூரத்தில் வேலிகளோடு இரும்புக் கதவு தெரிந்தது. வாசலில் பச்சை, காக்கி, கரு நீல யூனிபார்ம்கள். உள்ளே நுழைந்ததும் வரிசையான பச்சை லாரிகளில் வானத்தைக் குறி பார்த்த மார்ட்டர்கள், மெஷின் கன்கள். கட்டடத்தின் மேலே பெரிய கொம்பு முளைத்த ஆன்டெனா வாணல்.

அழுது வடிந்த உள் கட்டடத்தின் நடுவே வட்டமான ஹாலில் யூனிபார்ம்களில் பலர் சட்டைகளில் குத்திய மெடல்களுடன் சித்ராபவுர்ணமி பந்தி போல உட்கார்ந்திருந்தார்கள். 'தலை' ஃபிரேமில்லாத கண்ணாடி வழியே எல்லாரையும் பார்த்து நின்றிருந்தார்.

"கப்பல் எப்போது வருகிறது மேஜர்?"

"நாளை மறுநாள். ஆனால்..." இழுத்த வழுக்கை மேஜரின் முகத்தில் சதா ஒரு நமட்டுச் சிரிப்பு, நம்பத்தகாத ஆசாமி என்று லேபில் ஒட்டியது.

"ஆனால் என்ன மேஜர்?"

"ஸார், கப்பல் அகானா நாட்டுக் கப்பல். பெயர் ஸீகுயின். காப்டன் மாரியோ பெர்னாண்டஸ். இருபத்தியேழு மாலுமிகள். நம் ரகசிய அனல்மின் நிலையத்துக்கு கரியும், நம் எதிரிகளுக்கு சரக்கும் கொண்டு வருகிறார். இரண்டுமே வியாபாரம். சரக்குக்கு விலை அமெரிக்க டாலரில் வாங்கிக் கொள்கிறார்."

"சரக்கு பற்றி...?"

"யெஸ் ஸார். எல்எம்ஜி, ஏகே ரக ரைபிள்கள், டைமர் பென்சில்கள், டிடோனேட்டர்ஸ், ஜில்லட்டின், கொஞ்சம் மார்ட்டர், கிரேனேடுகள் இரண்டு லோடு நிறைய, மூன்றாவதில்..."

"மூன்றாவதில் என்ன...?"

"நமக்கு விருந்து வைக்க, நம் எதிரி நண்பர்களுக்கு மல்டி பேரல் ஆர்ட்டில்லரி ராக்கெட் சிஸ்டம், ஒரு முழு யூனிட். நின்ற இடத்திலிருந்து நாற்பது கிலோ மீட்டர் வரை கொளுத்தலாம்."

கும்பல் அசந்து போய் மௌனமாயிருந்தது. வடக்கில் நிச்சயமான தோல்வி

உயரமாக எழுந்து நிற்பது எல்லாருக்கும் தெரிந்தது.

"நேரடி சண்டை கூடாது. சமாதான நார்வேக்கார மச்சான்கள் கோவித்துக் கொள்ளுவான்கள். எப்படித் தடுப்பது? யோசியுங்கள்."

**"என்**ன செய்யப் போகிறீர்கள் மேஜர்?"

"ஸார். ஸீ குயினிலிருந்து நாளை ராத்திரிதான் சரக்கு கை மாறப் போகிறது. அதற்கு முன்பு..."

"முன்பு?"

"அதற்கு முன்பு இந்தியக் கடல் எல்லையில் பன்னிரண்டு நாட்டிகல் மைல் கடக்க வேண்டும்."

"ஸோ...?" - 'தலை'யின் மண்டைக்குள் ஃபியூஸ் போன பல்ப் எரிந்தது.

"ஸீ குயினை இந்திய கோஸ்ட்டல் செக்யூரிட்டியிடம் சிக்க வைக்கலாம். எனக்கு அதற்கு இரண்டே விஷயங்கள் தான் தேவை."

"என்ன தேவை?"

"ஒரு படகு, கொஞ்சம் வழக்கமான ராமேஸ்வர மீனவர்களுடன். ஒரு லாஞ்ச். நம் ஆட்கள்."

"எதுக்கு இந்திய மீனவர்கள்?"

"ஸீ குயினைப் பத்தி சொல்லி, அவங்க மீனவர்கள் ஆயுதம் வாங்கப் போறாங் கன்னு சொன்னாத்தான், ஆக்ஷன் எடுப் பாங்க. இல்லன்னா, தலைவலி, போவட் டும் போன்னு விட்டுடுவாங்க."

'தலை' யோசித்து "செய்யுங்கள்" என்றார்.



**வெ**ளிச்சம் வந்த போது எதிரில் பச்சை பெயிண்ட் அடித்த பெரிய லாஞ்ச் மிக நெருக் கத்தில் வந்து சேர்ந்தது.

"என்னலே அதிபத்தா... யாரு இது? வெளக்குக்கூட இல்லாம.... மொசல் தீவுக்கு எப்படித் தாண்டிப் போறது?"

"பெரிசு... சத்தம் போடாதே... இது டேஞ்சர்".

ஆபத்து, பத்துப் பதினைந்து யூனி ஃபார்ம்களில் நீட்டிய ஏ.கே 47களுடன் படகில் குதித்தது.

**"அ**திபத்தா... எல அதிபத்தா..."

"ரெண்டு நிமிசம் சும்மாருக்கா பாரு பெரிசு... என்னா?"

"நீந்தேன் கொஞ்சம் வெவரமானவன்.

இவனுக ஆரு? புரியுதாலே...?"

மற்றப் பதினாறு பேரும் நெருக்கியடித்து அதிபத்தனைப் பார்த்தார்கள்.

"சொல்லுண்ணே..."

அதிபத்தன் சுற்றிலும் ஒருமுறை பார்த்தான். காடு, காடு, காடுதான். மரமும் செடியும் நெருக்கி சதா இருட்டடிக்கும் காடு. மேலிருந்து தொங்குவது விழுதா, பாம்பா சொல்ல முடியாது. எந்நேரமும் மழை... சதசதவென்று சேறு. ஊர்ந்து போவது, பறப்பது, நெளிவது, மேலே விழுந்து பிடுங்குவது என்று விதவிதமான பூச்சி, வண்டுகள். தூண் தூணாக மூங்கில் வைத்துக் கட்டிய கூண்டு. வெளியில் பச்சை யூனிபார்ம். கையில் சடசடக்கிற துப்பாக்கி.

"சொல்லுங்கண்ணே, சுட்டுருவானுங்களா?"

"ந்தா பாருங்கடே... பெரிக... இவனுக ஆருன்னு தெரிஞ்சு ஒண்ணும் ஆவப் போறதில்ல. சுட்டா இங்கிட்டே செத்தில சாவலாம். வுட்டா வூட்டுக்கு ஓடிடலாம். ஆனாக்கா... சுடமாட்டானுவோ."

"எப்பிடிண்ணே?" - பொடியன் பயம் தெளிய கேட்டான்.

சுடறதானா எப்பவோ சுட்டிருக்கணும். ஒரு நா டயம் வுணாம்"

"அப்புறம் எதுக்கு...?"

"நம்மனால ஏதோ ஆவணும் இவனுகளுக்கு. இன்னான்னுதான் தெரியலை."

சுற்றி காவல் நின்ற ஏ.கே 47களுக்கும் காரணம் தெரியாது. "பிடித்துக் கொண்டு வந்து கட்டு" - உத்தரவு வந்தது. கூண்டு கட்டி விட்டார்கள். இனி உத்தரவு வந்தால்தான்.

"...சீனா தானா டோய்..." அசந்தர்ப்பமாய் பாட்டு கேட்டது. பொடியன் கையில் எஃப்.எம் ரேடியோ.

"நிப்பாட்டுலே அத... இருப்பமா சாவமான்னு கெடக்கோம். இப்பப் போயி..."

விடியலில் அதிபத்தன் திடுக்கிட்டு விழித்தான். காட்டுக்குத் தெற்கில் ஆரஞ்சு வெளிச்சம், வெடிச்சத்தம், கூடாரத்து காவல் நின்றவர்கள் வெளியே வந்து மொபைலில் பேசிவிட்டு பச்சை ஜீப் ஏறி காட்டுக்குள் போனார்கள்.

மழை மரங்களின் மேல் சடசடத்தது. தூரத்து ஹெட்லைட்டுகள் நின்று, தபதபவென்று காக்கி யூனிபார்ம்கள் கூடாரங்களையும், அதிபத்தன் கூட்டாளிகள் இருந்த கூண்டையும் பார்த்து ஓடி வந்தார்கள். கைகளிலிருந்த மெஷின்களில் படபடவென்று நெருப்பு பறந்தது. பச்சை யூனிபார்ம் ஆட்கள் திருப்பிச் சுட்ட படியே பின் வாங்கி காட்டுக்குள் ஓட, காக்கிகள் நெருங்கி வந்தன. தமிழ் ஒலித்தது.

"பயப்படாதீங்க. உங்களை விடுவிக்கத் தான் வந்திருக்கோம். இந்திய மீனவர் எங்களுக்கு எதிரியில்லை. உங்களைக் கொன்னுட்டு படகில போட்டு, பழியை எங்க மேல போட ஏற்பாடு பண்ணியிருந்தாங்க... வெளியே வாங்க."

மூங்கில் கூண்டு உடைக்கப்பட்டது.

"உங்களுக்கு லாஞ்ச் தர்றோம். நேர் வடக்கா போவாதீங்க. மறுபடியும் மாட்டிக்குவீங்க. உங்கள ரெண்டு நாளா தேடறாங்க. உங்க நேவி கப்பல் ஒண்ணு கிழக்கேருந்து வருது. ஸீ குயின்னு போட்டிருக்கும். அதில ஏறி ஸேஃபா போய்ச் சேர்ந்துடுங்க. சரியா? வாங்க."

காக்கிகள் முன்னால் வழிகாட்டி அரை ஓட்டமாக ஓட, அதிபத்தன் மற்றவர்களுடன் நனைந்தபடியே பின்னால் ஓடினான். மழை வலுத்தது. கடல் கிட்டே வர வர லாஞ்ச் தெரிந்தது. ஏறிக் கொண்டார்கள்.

பெரிக மோட்டாரையும், டீசலையும் செக் பண்ணி, பழகிய கை வேகத்தில் லாஞ்சைக் கிளப்பியது.

அகதிகள் கேம்ப்பிலிருந்து வேலி ஓரமாக நீண்ட கடைகளின் கடைசியில், பழைய வீட்டின் முன்னால் 'தமிழ்நாடு கோஸ்டல் செக்யூரிட்டி மண்டல தலைமை அலுவலகம்' போர்டு தெரிந்தது. மாடியிலிருந்த போன் நீள நீளமான ட்ரிங்கில் அலறியது. டீக்கு சொல்லி, உட்கார்ந்திருந்த செக்யூரிட்டி எடுத்தார்.

"என்னங்க, நம்ம பையனுக்கு இனிமே படிப்பு வராது. கல்யாணத்துக்கு வழியைப் பாருங்க..."

"எப்படிச் சொல்றே?"

"மேல் படிப்பு ரொம்ப போர் அடிக்கும். ஃபீமேல் படிப்பு படிக்கிறேனேங்கிறான்!"

- எம். ஆர். மூர்த்தி



"நான் எதிர்க்கரை நண்பன். உங்க டிஎஸ்பி ராமானுஜத்திடம் பேச வேண்டும். அவசரம்."

ராமானுஜம் சட்டை பட்டன் போடாமல் "எவன்யா அது? இந்த நேரத்தில" கேட்டுக் கொண்டே வந்து எடுத்தார்.

"டிஎஸ்பி ஸார். ஒரு முக்கிய தகவல் சொல்லணும். இன்னிக்கு ராத்திரி ஒரு மணி சுமாருக்கு உங்க எல்லையில ஒரு கப்பல் வருது. ஆயுதம் கடத்தல். உங்க தமிழ்நாட்டு நண்பர்கள் வாங்கப் போறாங்க."

"நீ யாரு, கப்பல் பேரு... பேரு என்ன?"

''பேரு ஸீ குயின். எண்டராகறது லாங்கிடியூட், லேட்டிடியூட் 80 -32 ஈஸ்ட்ல 10.26 நார்த்... போதுமா?'' . தொடர்பு கட்டானது.

"ச்சே. ஸ்டிரைக் ஒரு தலைவலின்னா... இது வேற... என்னா எழவுடா இது?" ராமானுஜம் சலித்தார். "ஸ்ரீதரன் எங்கேய்யா... கூப்பிடு. ராடார் மானிட்டரை செக் பண்ணச் சொல்லு. யார் எண்டர் பண்ணாலும் விசாரி" தினமலர் ஓரத்தில் 10 -26 N 80-32E என்று எழுதினார்.

11.30க்கு மானிட்டர் சிவப்புக்கண் திறந்து உற்சாகமாக, உஷாராக, வடக்கு ஓரமாகவே ''லல்லால்லா'' பாடியபடி நகர்ந்தது.

"கேளு... யாரிவன்? பர்மிஷன் கேக்காம... என்ன தைரியம்?"

''பதில் சொல்ல மாட்டேங்கறான் ஸார்."

''போன்ல என்ன பேரு சொன்னான்? ... ஸீ குயின்... ஐபிஆர்சி லிஸ்ட் பாரு."

மானிட்டர் முகம் மாறியது.

"இன்டர்நேஷனல் பைரசி ரிப்போர்ட்டிங் சென்டர், கோலாலம்பூர்... வெல்கம்... உங்கள் ஐடி சொல்லுங்கள்'' என்றது. சொன்னார். "போர்ல ஸீ குயின் ஃபைல் அப் பண்ணு."

"ஸீ குயின் - அடையாளம் ...ட்டாத முகமூடி கப்பல். லிஸ்டில் இருக்கிறது. மாரிடைம் பாதுகாப்புப் பிரிவின் கீழ் 'பதினொரு வழக்குகள் இருக்கின்றன... அந்தமானுக்கு கிழக்கே நெல்சன் தீவைத் தாண்டி..."

''வேட்டைதான்'' என்றார் ராமானுஜம்.

"நம்ம 'நல் பாரத்'தை ரெடி பண்ணுங்க. மெஷினெல்லாம் லோட் பண்ணு. பதினைஞ்சு நிமிஷத்தில கிளம்பறோம். எதுக்கும் நேவி ஐ.ஓ.சிக்கும் தகவல் தரணும். கூப்பிடு."

இரண்டாவது நிமிஷம் பதில் வந்தது... அவர்களும் கிளம்பி விட்டதாக.

**லா**ஞ்ச் கொஞ்சம் போனதும் அதிபத்தன் சத்தம் போட்டான். ''எல பொடியா, வெளக்கெல்லாம் நிப்பாட்டுலே. பெரிசை நிப்பாட்டச் சொல்லு."

லாஞ்ச் ஆடி ஆடி நின்றது. ''என்னல...?"

"அங்க பாருங்க பெரிசு..."

அரையிருட்டில் தூரத்துக் கரையில் வழியனுப்பிய காக்கிகளும், ஓடிப் போன பச்சை யூனிபார்ம்களும் ஒன்றாகத் தெரிந்தார்கள். கைகுலுக்கி ஒரே டிரக்கில் ஏறிப் போனார்கள்.

"என்னாலே இது?"

''திருநெவேலிக்கே அல்வா குடுக்குறனுவ பெரிசு. ரெண்டு பயலுவளும் ஒண்ணுதேன்."

"நம்மள ரெண்டு நாளா தேடறதா சொன்னானில்ல? நாம தோணி வலிச்ச கணக்குக்கு மூணு நா ஆனாத்தானே தேடணும்? இது ஏதோ வில்லங்கம். அவன் சொல்றபடி கெழக்க போயி அந்தக் கப்பல்ல ஏற வேணாம். நேர வடக்க திருப்புங்க பெரிசு.. வூட்டுக்குப் போலாம்."

பெரிசு மறுபடி மோட்டாரை ஆன் பண்ணி வடக்கைப் பார்த்து லாஞ்சைத் திருப்பியது.

அடுத்தநாள் தினமலரில் 'ராணுவம் பிடித்துச் சென்ற 17 மீனவர்கள் மீட்கப் பட்டார்கள்' என்று எட்டுவரிகளில் செய்தி வெளிவந்தது. ○

### "எதிர்காலத்தில் மியூஸிக்ல பெரிய ஆளா வருவே" என்று ஷொட்டு வாங்கிக் கொண்டிருக்கும் சில இசை மெ(ா)ட்டுகள் இதோ:

**ரமணா:**

விவேகானந்தா கல்லூரியில் பி.காம் படிக்கும் இளம் வயலின் கலைஞர் ரமணாவின் கொள்ளுத் தாத்தா, பாப்பா வெங்கட்ராம ஐயர் ஒரு வயலின் வித்வான். ரமணாவின் சின்னத் தாத்தா நாகராஜன், கஞ்சிரா வாசிப்பதில் திறமைசாலி. என்றாலும் ரமணா வெளுத்துக்கட்டுவது மிருதங்கத்தில். "ஏழு வயதில் என் தாத்தாவோடு காஞ்சிபுரத்துக்கு ஒரு கச்சேரியைக் கேட்கப் போயிருந்தேன். அப்போது என் கைகள் தாளம் போட்டதைப் பார்த்து, பரமாச்சாரியார் "குழந்தைக்கு மிருதங்கம் கத்துக்குடு" என்று அப்பாவிடம் சொன்னார். உடனேயே எங்கப்பா அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்" என்கிறார் ரமணா. டி.கே.மூர்த்தியிடம் மூன்று வருடங்கள் மிருதங்கம் கற்றுக் கொண்டிருக்கிறார், இந்த இருபது வயது இளைஞர்.

போட்டியாளர்கள் நிறையப் பேர் இருந்தாலும், சபாக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், சிறப்பான வருங்காலம் தம்மைப் போன்ற இளம் இசைக்கலைஞர்களுக்கு உண்டு என்கிறார். "முன்பெல்லாம் டிசம்பர் இசைவிழாதான். இப்போதுதான் இளைஞர் விழா, கோகுலாஷ்டமி விழா, ராமநவமி விழான்னு நிறைய வாய்ப்புகள் கிடைக்குதே. வெளிநாடு போகும் வாய்ப்புகூட அதிகமாயிடுச்சு" என்கிறார் ரமணாவின் அப்பா ஸ்ரீகாந்த். ஒருமுறை கண்ணனூருக்குச் சென்றிருந்தபோது, அந்த அரங்கில் ஒரு பகுதி மின்சாரம் மட்டுமே வேலை செய்ததாம். பாடுபவருக்கெதிரே இருந்த ஒலிபெருக்கி மட்டுமே இயங்க, ரமணாவுக்கெதிராக இருந்த ஒலிபெருக்கி இயங்கவில்லை. என்றாலும் இவரது மிருதங்கம் அந்தப் பெரிய அரங்கின் கடைசி வரிசை வரை கேட்டதாகப் பலரும் இவரைப் பிறகு பாராட்டினார்களாம்.

**சாருமதி ரகுராமன்:**

அப்பா ரகுராமன் அணுசக்தி மையத்தில் திட்ட மேலாளராகப் பணி புரிந்தவர் என்பதால், குடும்பம் மும்பையில் இருந்தது. சாருமதிக்கு எட்டு வயதாகும்போது, டி.ஆர். பாலாமணியிடம் வாய்ப்பாட்டு கற்றுக் கொள்ளத் தொடங்கினார். அம்மா ரமாவும் பாடகி. வீட்டில் மாணவிகளுக்கு பாட்டு கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தவர். பின் வயலினுக்கு மாறியது எப்படி? 'எங்க அக்கா ராஷ்மி அப்போ வயலின் கத்துக்கிட்டிருந்தா. வீட்டில் இருந்த வயலினை எடுத்து நானாக வயலின் வாசிக்கத் தொடங்கினேன். பிறகு பக்த ரசிக ரஞ்சனி சபாவில் வயலின் வகுப்பு



• சாருமதி ரகுராமன்:

## ஜொலிக்கும்

கள் நடந்தபோது, அங்கே சேர்ந்து கத்துக்கிட்டேன். அங்கே கண்ணன் என்பவர் எனக்கு குருவாக இருந்தார். ஒருமுறை டி.என். கிருஷ்ணன் மும்பைக்கு வந்திருந்தபோது, என்னை அம்மா அவரிடம் அழைத்துச் சென்றேன். அவர் எதிரிலே நான் வயலின் வாசித்துக் காண்பிக்க, அவர் திருப்தியடைந்து ''என்னம்மா என்கிட்ட வயலின் கத்துக்கறியா?'' என்று கேட்டார். பள்ளி விடுமுறை நாட்களிலும், அவ்வப்போது விடுமுறை எடுத்துக் கொண்டும் சென்னைக்கு அம்மாவுடன் வந்து அவரிடம் வயலின் கற்றுக் கொள்ளத் தொடங்கினேன். இந்த ஏற்பாட்டைத் தொடருவதில் சில சிரமங்கள் இருந்தன. நான் எட்டாம் வகுப்பு படிக்கும்போது, தொடர்ந்து சென்னையிலே தங்கினால்தான் வயலினை இடைவிடாமல் கற்றுக் கொள்ள முடியும் என்பதால், நானும் அம்மாவும் சென்னைக்கு வந்து தங்கி விட்டோம். ஒரு காலகட்டத்தில் திரு கிருஷ்ணன், அமெரிக்காவில் பல மாதங்கள் செட்டிலாகிவிட அவரிடம் தொடர்ந்து கற்றுக் கொள்ள முடியாமல் போனது. பிறகு நாராயணசாமி அவர்களிடம் வாய்ப்பாட்டு கற்றுக் கொண்டிருக்கிறேன். முழுநேர வயலின் கலைஞராவதுதான் என் விருப்பம். வருங்காலத்தை மிகவும் பிரகாசமானதாகவே பார்க்கிறேன்'' என்கிறார்.


• சங்கரநாராயணன்

# ஜூனியர்கள்!


• ரமணா

**சங்கரநாராயணன்:**

இருபது வயது மிருதங்கக் கலைஞர். சென்னை விவேகானந்தா கல்லூரியில் சமஸ்கிருதப் பட்டப் படிப்பு (இறுதி வருடம்) படிக்கிறார். ''இரண்டு வயதில் பாமாயில் டின்னை மிருதங்கமாக பாவித்து வாசிப்பேன். அப்படி எடுத்த ஒரு புகைப் படத்தைக் காட்டி, வீட்டில் இப்போது கூடச் சிரிப்பார்கள். லயத்தில் ஒருவித ஈடுபாடு அப்போதிலிருந்தே உண்டு. அப்பா பாபனாசம் ரமணி ஒரு பாகவதர். தொடக்கத்தில் சித்தப்பா பாபனாசம் குமாரிடம் மிருதங்கப் பயிற்சி ரெண்டு வருஷத்துக்கு எடுத்துக்கிட்டேன். அப்புறம் சித்தப்பாவுக்கு மதுரைக்கு மாற்றலாச்சு. கடந்த ஒன்பது வருடங்களாக, ஸ்ரீமுஷ்ணம் ராஜாராவ்கிட்டே கத்துக்கறேன். அவர் மிருதங்க வித்வான் மட்டுமல்ல, வாய்ப்பாட்டும் நன்றாகத் தெரிந்தவர் என்பதால் கூடுதல் வசதியாக இருக்கிறது. பாட்டை நன்றாகத் தெரிந்து கொண்டு தான் பாடணும்கிற என் விருப்பமும் நிறைவேறி வருகிறது. கிருஷ்ண கான சபாவால் சிறந்த ஜூனியர் மிருதங்கக் கலைஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, உமையாள்புரம் சிவராமன் கையினால் மிருதங்கம் ஒன்றைப் பரிசாகப் பெற்றதைப் பெரிய பாக்கியமாகக் கருதுகிறேன்.''

**- ஜி.எஸ்.எஸ்.**



தென்கச்சி சுவாமிநாதன்

ஓர் ஊரிலே ஒரு பெரிய அரசியல்வாதி இருந்தார்.

அவருக்குப் பல்வலி.

உடனே பல் டாக்டர் வந்து சோதித்தார்.

"இது சொத்தைப்பல்... எடுத்துடறது தான் நல்லது!'' என்றார்.

இந்தச் சமயத்தில் வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

அரசியல்வாதியின் வேலைக்காரன் ஓடிப்போய் பார்த்துவிட்டு வந்து சொன்னான்:

"பக்கத்து நாட்டு அரசியல் தலை



# தேசபக்தி

வர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்!''

உடனே இவர் மனசுக்குள் ஒரு யோசனை.

"டாக்டர்! நீங்க கொஞ்ச நேரம் அதோ அந்த அறைக்குள் போய் இருந்து கொள்ளுங்கள்... நான் அழைக்கும்போது வரலாம்...!''

டாக்டர் போய் மறைந்து கொண்டார்.

வெளிநாட்டுத் தலைவர் உள்ளே வந்தார்.

"வாங்க...வாங்க!''

உள்ளே அழைத்து உட்கார வைத்து பேசிக் கொண்டிருந்தார். பேச்சின் நடுவே..

"நீங்க உங்க நாட்டுலே யெல்லாம் எல்லோருக்கும் தேச பக்தி இருக்கிறதா காட்டிக்கிறீங்க... ஆனா உங்களை விட எங்களுக்கு தேச பக்தி அதிகம்!''

"அப்படியா?''

"ஆமாம். எங்க தேச பக்தியை நிரூபிப்பதற்காக நாங்க எதை வேண்டுமானாலும் தியாகம் பண்ணத் தயாரா இருக்கிறோம்...!

என்னுடைய பல்லுலே ஒன்றை தியாகம் பண்ண விரும்பறேன்... அதனாலே என் பல்லுலே ஒண்ணைப் பிடுங்கி எடுக்கப் போறேன்'' என்றார்.

மறைந்திருந்த டாக்டர் புரிந்து கொண்டு வெளியே வந்தார். சரியாக அந்த சொத்தைப் பல்லைப் பிடுங்கி எடுத்துவிட்டார்.

இதைப் பார்த்தவுடன் வெளிநாட்டுத் தலைவருக்கு ரோஷம் வந்துவிட்டது.

"இதோ பாருங்க... நானும் உங்களைவிட தேச பக்தியிலே குறைந்தவனில்லை! டாக்டர்! இப்படி வாங்க! நான் எங்க நாட்டுக்காக இரண்டு பற்களைத் தியாகம் பண்றேன்...! என் வாயிலேயிருந்து இரண்டு பற்களைப் பிடுங்கி எடுத்துடுங்க!''

வைத்தியர் பார்த்தார். அவருக்கென்ன? அவருக்கா வலிக்கப் போகிறது?

இருக்கிறதுலே நல்ல பற்களாகப் பார்த்து இரண்டைப் பிடுங்கி எடுத்துப் போட்டுவிட்டார்.

"பார்த்தீர்களா? எப்படி என்னோட தேச பக்தி?''

இப்படிச் சொல்லிக் கொண்டே பொக்கை வாயோடு புறப்பட்டுப் போனார் அந்த வெளிநாட்டு அரசியல்வாதி!

ஒரு மேல்நாட்டுப் பழமொழி:

"பதவியைக் காப்பாற்றிக் கொள்ள ஓர் அரசியல்வாதி எதைச் செய்யவும் தயங்க மாட்டார். தேச பக்தராகக்கூட ஆகிவிடுவார்!''



* நேருவுடன் ராஜாஜி...

ஒன்று அல்லது இரண்டு படங்கள் வெற்றி பெற்றால் போதும். அடுத்த படத்தில் ஏகப்பட்ட பஞ்ச்' டயலாக்குகள், ஏகப்பட்ட 'பில்ட்-அப்கள், ஆக்ஷன் ஹீரோவாய் நாற்காலிக் கனவுகளுடன் காய் நகர்த்தத் துவங்கி விடுகிறார்கள் இன்றைய கதாநாயகர்கள். ஆனால் அன்று (1952ல்) இவரை தமிழக முதல்வராகப் பதவி ஏற்றுக் கொள்ள வைக்க, நேருவே கெஞ்ச வேண்டியதிருந்தது. யாரென்று சொல்லாமலே அவர் இராஜாஜி என்று தெரிந்திருக்குமே!

யாரோ கொண்டு வந்த திட்டங்களின் வெற்றியில் பங்கு போட்டுக் கொண்டு, அதை வோட்டுகளாக்கத் துடிக்கும் இன்றைய அரசியல்வாதிகளின் மத்தியில் கலப்புத் திருமணம், விதவை மறுமணம், தீண்டாமை ஒழிப்பு போன்றவற்றை அதிரடியாகச் செயல்படுத்திய உண்மையான ஹீரோ இராஜாஜி.



* விழாவில்...

அனைத்து நாடுகளும் ஒரு கையில் அமைதியையும், மறுகையில் அணு ஆயுதங்களையும் வைத்துக் கொண்டுள்ள சூழ்நிலை இது. ஆனால் 1962லேயே அமெரிக்காவுக்குச் சென்று ஜான் கென்னடியைச் சந்தித்து, அணு ஆயுதங்களைத் தடை செய்யக் கோரி குரல் கொடுத்தவர் இவர்.

சேலத்தில் கிரிமினல் வக்கீலாக வாழ்க்கையைத் தொடங்கிய இராஜாஜி, வாதாடிய வழக்குகள் கிட்டத்தட்ட எல்லாம் ஜெயமே! ஃபீஸ் எவ்வளவு

# பயணம் தொடர்கிறது...

தெரியுமா? ஒரு வழக்கிற்கு ரூ.1000. (இன்றைய மதிப்பு 2 லட்சத்துக்கும் மேல்!)

நேர்மை, நாணயம், கடமை உணர்வோடு வாழ்ந்த இராஜாஜியின் பயணம் முடிந்துவிடவில்லை. அவரின் சமத்துவ, சமதர்மக் கொள்கைகளோடு 'இராஜாஜி ஃபவுண்டேஷன்' என்ற அமைப்பைத் தொடங்கியுள்ளார் அவரது கொள்ளுப் பேரன் சி.ஆர்.கேசவன். அவரது 126வது பிறந்தநாளில் (டிசம்பர் 10, 2004) சென்னை இராஜாஜி நினைவாலயத்தில் தொடங்கப்பட்டுள்ள இவ்வமைப்பு முதற்கட்டமாக, ஊரகப் பகுதிகளில் படித்து வரும் 10ம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவ, மாணவியருக்கு அடுத்த இரண்டாண்டுகளுக்கான கல்வி உதவித் தொகையை வழங்குகிறது.

விழாவில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயலாளர் ஜெயக்குமார், 'தமிழில் பேச எனக்குப் பிடிக்கும்' என்று பாதிக்குப்பாதி ஆங்கிலத்தில் பேசினார். இராஜாஜியோடு சோனியாவையும் பாராட்டத் தவறவில்லை! மற்றவர்களைத் தாக்கவும் தவறவில்லை!

- முகில்


# குறையொன்றுமில்லை

உலகிலே எந்த வஸ்துவானது மிக உயர்ந்தது என்று நாம் ஸ்தாபிக்கிறோமோ, அதைக் காட்டிலும் உயர்ந்தவன் பரமாத்மா. பரமார்த்தம் அவன் ஒருத்தன் தான். மீதி எதுவும் பரமார்த்தம் ஆகாது. தான் மற்றொன்றை ஆச்ரயிக்காமல், தானே எல்லாவற்றையும் கொடுக்கக் கூடியதுதான் பரமார்த்தம். உலகத்தில் எது பரமார்த்தம்? பொருள் பரமார்த்தமா...? இல்லை, பொருள் வெறும் அனர்த்தம்! இது நமக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்.

ஒருத்தருக்கு நல்ல பசி எடுக்கிறது. எதிரே பத்து லட்சம் ரூபாய் பணம் இருக்கிறது. பசிக்கிறதே என்று பத்து லட்ச ரூபாயை எடுத்துச் சாப்பிட முடியுமா?!

ஆகையினாலே அர்த்தம் பரமார்த்தம் ஆகாது! வேறொரு வஸ்துவான சாதத்தைச் சாப்பிட்டால்தான் பசி நீங்கும். சரி... 'அந்த அன்னம் பரமார்த்தமா?' என்றால், அதுவும் இல்லை. ஒருநாள் வைத்திருந்தால் அன்னம் அழுகிப் போய்விடுகிறது! ஒரு தடவை சாப்பிட்டால் அதோடு வயிறானது பூர்த்தியடைகிறதா என்றால், மறுபடியும் சாப்பிடத் தோன்றுகிறது! ஆகவே அன்னமும் பரமார்த்தம் இல்லை. இப்படியே உலகில் எதை எடுத்துக் கொண்டாலும் பரமார்த்தம் கிடையாது. பகவான் விஷ்ணு. அவன் ஒருத்தன்தான் பரமார்த்தம். அவனைத் தவிர மற்றவையெல்லாம் அனர்த்தம். அவனை அடைவதே நமக்குப் பரமார்த்தம்.

சுவாமி தேசிகன் பரமார்த்த ஸ்துதி என்று ஒரு ஸ்தோத்திரம் பண்ணியிருக்கிறார். காஞ்சிபுரத்துக்கு அருகே இருக்கும்



படியான திருப்புட்குழியில் எழுந் தருளியிருக்கும்படியான எம் பெருமான், அவனுக்கு விஜயராகவன் என்று பெயர். இந்தப் பெருமானை நோக்கி சுவாமி தேசிகன் பாடிய சுலோகங்கள் அவை. நூற்றியிரண்டு சுலோகங்களும் ராமாயண

# முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



ஸாரம். ராமாயணம் முழுதுமே வருகிறது அதிலே. 'அந்த திருப்புட்குழி ஜடாயு புஷ்கரிணி திரத்திலே, அழகான பாரிஜாத - கல்பக விருக்ஷமானது இருக்கிறது. அதனருகே எழுந்தருளியுள்ள விஜயராகவ பெருமாளை யார் சென்று வணங்குகிறார்களோ, அவர்கள் பலனைப் பெறலாம். அவன்தான் பரமார்த்தம்' என்று காட்டிக் கொடுக்கிறார் சுவாமி தேசிகன். அந்த பராமார்த்தத்தை வணங்கினால்தான் பலன்; வணங்காவிட்டால் பலன் கிடையாது.

இந்த பரமார்த்தத்தை நாம் நன்கு உணரக் காட்டுபவைதான் அவன் திருநாமங்கள். அப்படிப்பட்ட திருநாமங்களை இந்த உலகிலே இருந்துகொண்டு நாம் உச்சரிக்கும் ஆனந்தம் இருக்கிறது பாருங்கள்...

'இச் சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என்று தொண்டரடிப் பொடியாழ்வார் பாடியிருக்கிறார்.

வைகுண்டம் கொடுக்கிற ஆனந்தம் உயர்ந்ததுதான். ஆனால் அது என்ன, எப்படி இருக்கும் என்பதே நமக்குத் தெரியாது. 'அப்படிப்பட்ட ஆனந்தம், நாம் இங்கே பகவான் நாமாவை உச்சரிப்பதிலே பெறுகின்ற ஆனந்தத் துக்குத் துல்யமாகுமா?' என்று மகான்கள் பேசுகிறார்கள்.

நினைக்க வல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூர் எல்லாம். இருக்கிற இடமே வைகுந்தமாகி விடுகிறது.... எப்போது...? அவனுடைய திருநாமத்தை நாம் சொல்லி, பல பேர் அந்தத் திருநாமத்தைக் கேட்டு அனுபவிக்கக்கூடிய ஆனந்தம் இருக்கிறது பாருங்கள்... அது அவன் தரும் வைகுண்டத்திலே கிடைக்கும் ஆனந்தத்தைக் காட்டிலும் மேம்பாடுடையது - இது வேதத்தை அடியொற்றிய மஹான்களின் வாக்கு.

'பிருஹதே விஷ்ணு: சுமதிம் பஜாமஹே' என்று விஷ்ணுவை அழைத்து பிருஹத் என்கிறது.

ப்ருஹத், மஹத் என்று இரண்டு சத்தங்களாலே விஷ்ணு சொல்லப் படுகிறான். ப்ருஹத் என்றால் மிகவும் பெரியவன். மஹத் என்றால் எங்கும் வியாபித்து, எல்லா இடத்திலும் நிறைந்து நிற்கக் கூடியவன். இப்படிப்பட்ட எம்

''கல்யாண மொய்க்கு ஆனாலும் இப்படி அலையக் கூடாது.''

''ஏன்! என்ன ஆச்சு?''

''அதோ பார். 'மொய்க்கு கிரடிட் கார்ட் ஏற்றுக் கொள்ளப்படும்'னு எழுதி வெச்சிருக்கு.''

- அனந்தராமன்

பெருமானை சின்னச் சின்ன திருநாமங்களைச் சொல்லி, மனத்திலே நினைத்து ஆனந்தப்படுகிறோமே, அதற்கு இணையே இல்லை என்கிறது வேதம்.

பெரிய க்ஷத்ரியர்களெல்லாம் பண்ணக்கூடிய அச்வமேத யக்ஞத்து மந்திரங்களுக்கும் பொருளாக இருக்கக் கூடியவன், அந்த யக்ஞங்களின் பலனையும் அளிக்கக் கூடியவன். அவனுடைய திவ்ய திருநாமத்தைச் சொல்கிறபோதே பலனைக் கொடுத்து விடுகிறான்.

பெரிய காரியத்தைப் பண்ணிவிட்டு நாம் பெரிய பலனை எதிர்பார்க்கிறோம். சுலபமான முறையிலே ஒரு காரியம் பண்ணி, பெரிய பலனை அடைவது தான் உத்தமர்களுடைய லக்ஷணம்.

அதனால்தான் வேதமே பெரிய பெரிய யக்ஞங்களில் சிரமப்பட வேண்டாம் என்றும், சுலபமாக அவன் திருநாமத்தைச் சொல்லி அவன் அனுக்ரஹத்தைப் பெறலாம் என்றும் இந்தக் கலியுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும்படியான நமக்குச் சொல்கிறது.

'அஹமஸ்மி அபராத சக்ரவர்த்தி' அஹமஸ்மி அபராதானாம் ஆலய: என்றெல்லாம் மஹான்கள் பேசுகிறார்கள். அவர்களுடைய வாக்கைத்தான் நாம் திருப்பிச் சொல்கிறோம். அப்படிப்பட்ட மஹானான ஆளவந்தார், 'அபராத சக்ரவர்த்தியாக நான் இருக்கிறேன்' என்கிறார். உயர்ந்த சீலரான அவரே சொல்லும்போது, நாம் என்னத்தைச் சொல்வது! நாமெல்லாம் வாயைத் திறப்பதற்கே லாயக்கில்லை!

இப்படி அகிஞ்சனர்களாக, சுத்யந்த மற்றவர்களாக இருக்கக்கூடிய நம்மைப் போன்றவர்களுக்கு, இந்தக் கலியுகத்திலே பகவான் நாமாவைத் தவிர பற்றிக் கொள்வதற்கு எதுவுமே இல்லை.

யக்ஞ பிரகரணத்திலும் அவனை அழைத்து, 'இந்த யக்ஞத்திலே வழங்



கப்படும் மஹா ஹவிஸை நீ சுவீகரித்துக் கொள், ஏற்றுக் கொள்' என்று அவன் திருநாமம் சொல்லித்தான் அழைக்கிறது.

இவ்வாறு காயத்ரி மந்திரத்தின் உயர்ந்ததான சத்தத்துக்கு வாச்ய பூதனாக இருக்கக்கூடியவன், விச்வம் என்ற சத்தத்துக்கு உரியவனே!

விச்வம் என்ற சத்தத்தில் சொல்லப்படுகிறவன் யாரென்றால்,

விச்வம் நாராயணம் தேவம்
அக்ஷரம் பரமம் பிரபும்

பரமன் - மேம்பாடு உடையவன். பரோமா - அவனைக் காட்டிலும் மேம்பாடு உடையவனே இல்லை.

உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்
அயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வரும் அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழு என் மனமே!

என்று மனத்தைக் கூப்பிட்டு ஆழ்வார்- நம்மாழ்வார் - உயர்ந்த ஸாமவேத ஸாரமான திருவாய்மொழியை ஆரம்பிக்கிறபோதே கூறிவிட்டார்:

"எல்லாவற்றுக்கும் மேம்பட்டவனாக, அவனைக் காட்டிலும் மேம்பாடு இல்லாதவனாய், எல்லா நலங்களும் பொருந்தியவன் எவனோ, அவன் - அப்படிப்பட்டவன் யாரோ, அவனுடைய திவ்ய திருவடியிலே மனத்தை வை!"

துளிக்கூட சந்தேகம் இல்லாமல், தத்துவத்தை நன்கு உணரும்படியான நல்ல புத்தியை அவன்தான் கொடுக்க வேண்டும். (மயர்வற மதிநலம் அருளினன்) நாமாக அந்த புத்தியைப் பெற முடியாது.

வேதம் சொல்வதைத்தான் அப்படியே சொல்கிறார் ஆழ்வார்:

'சுமதிம் பஜாமஹே' என்கிறது வேதம். தெள்ளறிவைப் பெற விஷ்ணுவைச் சரணடையச் சொல்கிறது.

'மயர்வற மதிநலம் அளித்த எம்பெருமான்' என்று இந்த வேத கருத்தைத்தான் அப்படியே எடுத்துக் காட்டுகிறார்.

இதனாலேயே, 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்று நம்மாழ்வாருக்குப் பெயர். வேதத்தைத் தமிழ்ப்படுத்திக் காட்டினார்.

அப்படி நல்ல புத்தியைக் கொடுத்து, அவனை நினைக்கும்படியான அறிவைக் கொடுத்து, தன்னையும் தாழ காட்டிக் கொடுத்து, நாம் அவனை அனுபவிக்கும்படியாகப் பண்ணுகிறான் எம்பெருமான்.

வேதத்தில், நான்காம் காண்டத்தில் இதை விவரிக்கும் எட்டு வரிகள் வருகின்றன.

'எந்த தேவதையின் பொருட்டு இந்த ஹவிஸானது சமர்ப்பிக்கப்படுகிறது என்றால், எவனை விச்வம் என்ற சத்தத்தினால் உலகமெல்லாம் உபாஸிக்கிறதோ, விச்வ சப்த சத்ய பூதனாய் எவன் இருக்கிறானோ, விச்வம் என்று எவன் சொல்லப்படுகிறானோ, எவன் நமக்கு ஆத்ம பலத்தைக் கொடுக்கிறானோ, சரீர பலத்தை எவன் கொடுக்கிறானோ, தன்னைத் தாழ இட்டுக் கொண்டு, அனுபவிக்கும்படியாக எவன் காட்டிக் கொடுத்திருக்கிறானோ, அப்படிப்பட்டவனின் பொருட்டு இந்த ஹவிஸை இந்த ஹோம குண்டத்திலே சமர்ப்பிக்கிறேன்...'

ஆகவே, அனைத்துமே பகவான் நமக்குக் கொடுத்தவைதான். அவன் அந்த பாக்கியத்தைக் கொடுக்கவில்லையானால் அவனை அனுபவிக்கவே முடியாது நாம். அனுக்ரஹம் இல்லையேல் அவனைப் பற்றிக் கேட்பதோ, சொல்வதோ, அவனைப் பூஜை பண்ணுவதோ, எதுவுமே நம்மால் பண்ண முடியாது.

(வளரும்)



# பி.பி.சியிலிருந்து மைத்ரேயி...

**மைத்ரேயி... லண்டன் பி.பி.சியில் பணிபுரியும் தமிழ்ப் பெண். 1645ம் ஆண்டு சென்னை ஆளுநராகப் பணியாற்றிய யேல் துரை பற்றி ஆய்வு செய்வதற்காக அண்மையில் சென்னை வந்திருந்தவரிடம் பேசினோம்...**

"சின்ன வயதிலிருந்தே ரேடியோவில் ஆர்வம் இருந்ததால், பி.பி.சி ரேடியோ தவறாமல் கேட்பேன். இந்தியன் எக்ஸ்பிரஸ், ஹிந்து நாளிதழ்களில் கட்டுரைகள் எழுதுவேன். திருமணமாகி லண்டன் போனதும், அங்கேயே ரேடியோவிலும், டி.வியிலும் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தது.

செய்தி சேகரித்து, முழுமையாக, தவறுகள் எதுவும் இல்லாமல் கொடுக்க வேண்டும். புரொஃபஷனலிஸம் அதிகம். சில சமயம் இரண்டு நாட்கள் கஷ்டப்பட்டுத் தகவல்கள் சேகரித்துக் கொடுத்தால் 'இது வேண்டாம் என்று தீர்மானித்து விட்டோம்!' என்பார்கள். கடுமையான மேற்பார்வை உண்டு. செய்தியாளர் - தர்மத்தைக் காப்பாற்றியாக வேண்டும். பேட்டிகளின் போது, கேள்வி கேட்கப்படுபவர் மனம் நோகாமல் கேட்க வேண்டும். அமிதாப் பச்சன், ஆமீர்கான், ஷபனா ஆஸ்மி என்று அங்கு வரும் இந்தியப் பிரபலங்களை எல்லாம் பேட்டி கண்டிருக்கிறேன்.

பெரிய வார்த்தைகளையே செய்திகளில் பயன்படுத்தக் கூடாது. ஊழல்களை வெளிப்படுத்தலாம். ஆனால் ஆதாரங்களுடன், மிகத் துல்லியமாகத் தகவல்களைக் கொடுத்தாக வேண்டும். சிறிதளவு தவறு நேர்ந்து விட்டால்கூட, நடவடிக்கை கடுமையாக இருக்கும். இராக் போர் சம்பந்தமாக ஹட்டன் அறிக்கை வெளியானபோது, அதில் நேர்ந்த சிறு தவறுக்காக பி.பி.சியின் டைரக்டர் ஜெனரல் பதவி விலக நேர்ந்தது. அரசியல் நிகழ்வுகளைப் பற்றிய விமர்சனங்களை முழுச் சுதந்திரத்துடன் தாராளமாகச் செய்யலாம். நிறைய செக்கிங் உண்டு. புரொட்யூசர், எடிட்டர் எல்லோருமே தகவல்கள் சரியானவைதானா என்று பார்த்த பிறகே ஒளிபரப்புவார்கள். சரியாக இருந்தால் அதில் கை வைக்க மாட்டார்கள். அதற்கான வழிமுறைகளைச் சரியாகப் பின்பற்றியிருந்தால் போதும்" என்று தனது பி.பி.சி அனுபவங்களைக் கூறும் மைத்ரேயி, நம்மூர் செய்திகள் குறித்து என்ன சொல்கிறார்?

"இந்தியாவில் டி.வி செய்தி வாசிப்பவர்கள் இன்னும் கொஞ்சம் ரிலாக்ஸ்டாக இருக்கலாம். ரொம்பவும் இறுக்கமாகக் காட்சியளிக்க வேண்டாம்"

**- சாருகேசி**

படம்: **யோகா**

# கல்கி

அடுத்த இதழ்

புதுப் புது
விஷயங்களைத்
தாங்கி வரும்

# புதுமை ஸ்பெஷல்!



**சுஜாதா** எழுதும்

# உள்ளம் துறந்தவன்



பளீர்
இளமைத்
தொடர்
9.1.2005
இதழில்...

# வட்டமேஜை

✉ 'பிச்சையெடுப்பதைவிடக் கேவலமானது எது?' என்ற கேள்விக்கு தராக அளித்த நெத்தியடி பதில், லஞ்சம் வாங்கும் அரக்கர்களுக்கு சரியான சாட்டையடி.

**திருவாரூர் -1, கே. முருகேசன்**

✉ ஹாரிஸ் ஜெயராஜ் பேட்டி படித்தேன். ஹீரோவுக்கு 'ஜே' போடுகிற படங்களை ஒப்புக்கொள்வதில்லை என்ற பதிலில் தொழில் மீதான அவரின் நம்பிக்கை பளிச்சிட்டது!

**கல்பூண்டி, பூ.சீனிவாசன்**

✉ பொதுக் கூட்ட மேடைகளிலும், சட்டமன்ற விவாதங்களிலும் ஆளும் கட்சியினர் மீது சீறிப் பாயும் பாம்பாக இருக்கும் துரைமுருகன், கர்நாடக சங்கீதம் என்ற மகுடி கொண்டு வாசித்தால் கட்டுண்டு போய்விடுவார் என்ற உண்மையை 'காங்குப்பம் கூத்துக் கலைஞர்' கட்டுரை மூலம் தெரிந்து கொணடேன்.

**திருநெல்வேலி - 11, பாவனா. ஆரிச்சன்**




# நெத்தியடி

✉ ஸ்ரீ வேணுகோபாலனின் 'காதல் கானடா' சிறுகதையின் முடிவு எதிர்பாராதது. படித்தவுடன் நெஞ்சம் கனத்தது - தயாவின் நெஞ்சம் போல!

**ஆலங்குளம், ரா. சாலமோன்**

✉ 'சங்கீத வித்வத் சபை'யின் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களின்போது அமரர் கல்கி எழுதிய கட்டுரை, 'ஓல்டு இஸ் கோல்டு!' என்று கூற வைத்தது!

**திருவாரூர், ஆர்.ராமசுப்ரமணி**

✉ ஆஹா...! இளமை எழுத்தாளர் சுஜாதாவின் இளமை ததும்பும் தொடரா? காத்திருக்கிறோம் 'கல்கி'யின் வரவை நோக்கி...!

**ஈரோடு, ரேவதிப்ரியன்**

✉ 'மீடியா வாயை யார் மூடுவது?' ஆசிரியர் பக்கம் மிகவும் தெளிவாகவும் நடுநிலையுடனும் எழுதப்பட்டிருந்தது. சட்டம் தன் கடமையைச் செய்யட்டும். ஆனால், பத்திரிகைகளே நீதிபதியாவதுதான் கொடுமை!

**மும்பை, ஜி.வெங்கடராமன்**

✉ 'உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்கள் வழிதவறி நடக்க என்ன காரணம்?' என்ற கேள்விக்கு தராசின் பதில், அவர் உயர்ந்த பொறுப்பில் உள்ளார் என்பதை நிரூபித்தது!

**திசையன்விளை, ஆர்.ஜி.கல்யாணி**

✉ மியூசிக் very ஸ்பெஷல், அட்டைப் படமும் கட்டுரைகளும் சம்திங் special!

**தேனி, எஸ்.எம்.பாலசுப்ரமணியன்**

✉ முரசொலி மாறனுக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது என்பதைப் படித்ததும் ஆச்சரியப்பட்டேன். வெல்டன் சரவணன்!

**மும்பை, எலிசபெத் சாமுவேல்**

19.12.04 இதழில் வெளியான 'தீபத் திருவிழா'வில் குறிப்பிட்டுள்ள தேய்பிறை அஷ்டமி பூஜையானது சுவர்ண ஆகர்ஷண பைரவருக்கே நடத்தப்படுகிறது. சௌந்திரராஜப் பெருமாளுக்கல்ல.

**- ராஜப்பா, சேஷாத்ரி, அர்ச்சகர்கள், சௌந்திர ராஜப்பெருமாள் கோயில், தாடிக் கொம்பு**




❑ சிறுவயதில் செட்டி நாட்டில் வளர்ந்த நான், அந்த மண்ணின் மணத்தை மறுபடியும் முகர்வதற்கு உதவிய சத்தியபிரியன், 'முற்றும்' என்று போட்டுவிட்டாரே இவ்வளவு சீக்கிரம்! அவருக்கு நிறையப் பாராட்டுக்களைத் தெரிவிக்கலாம் என் போன்றோர் சார்பாக.

**பெங்களூர், எல்.ஆர்.ராஜாமணி**

❑ சத்தியபிரியனின் 'வலம்புரி முத்து' என்றும் எங்கள் நெஞ்சில் நிலைத்திருக்கும் செல்ல முத்து!

**மதுரை - 16, பி. ராஜசேகரன்**

❑ செட்டிநாட்டு மண்ணின் மணம் கமழும் சென்டிமெண்ட் கதையை, மனதைத் தொடும் உணர்ச்சிகரமான நிகழ்வுகளுடன் கனமாகப் படைத்திருந்தார் சத்தியபிரியன். முப்பத்தொரு வாரங்கள் போனதே தெரியவில்லை!

**அயன்புரம், த. சத்திய நாராயணன்**

❑ செட்டிநாட்டு உறவு முறைகளை தொடரில் அப்படியே பயன்படுத்திய விதம் அருமை. ஆங்கிலம் கலக்காமல் உரையாடல்களைக் கொடுத்த விதம் படிக்கும் ஆவலை அதிகரித்தது. மாருதியின் தூரிகை வலம்புரி முத்தின் வைரமாக ஜொலித்தது.

**சென்னை - 117, ஆர்.நாகராஜன்**

❑ சத்தியபிரியனின் 'வலம்புரிமுத்து', அவரது எழுத்தாற்றலின் ஒரு மைல் கல். தாமரை, கதிரேசன் ஆகிய இருவரது பாத்திரப் படைப்புகள் ஒன்றையொன்று விஞ்சுபவை. சிப்பிக்குள் விளைந்த நன்முத்தான கதிரேசன் காட்டும் விசுவரூபதரிசனம் பன்முகம் கொண்ட கண்ணாடி.

**சென்னை - 78, கே.எஸ்.நாராயணன்**


# கல்கி

**பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்**
*அச்சிட்டு வெளியிடுபவர் :*
**கி. ராஜேந்திரன்**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

*ஆசிரியர் :*
**சீதா ரவி**

*ஆசிரியர் குழு :*
**அனுராதா சேகர்**
**ஆர்.சி. ஜெயந்தன்**

*வடிவமைப்பு :*
**எஸ். ஸ்டீஃபன்**
**பி.ஆர். ராஜன்**

*தொலைபேசி :*
**22345622, 23, 24**
*தொலைநகல் :*
**044 - 22345621**

*மின்னஞ்சல் :*
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
*உள்நாடு :*
**ஒரு வருடம் : ரூ.330/-**
**ஆறு மாதம் : ரூ.165/-**
*வெளிநாடு (விமானத்தபால்) :*
*ஒரு வருடம் :* **62 யு.எஸ். டாலர்**
**இலங்கை : ரூ.2000/-**

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

**ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு**

● **ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி**
? ராமர் போல் வனவாசத்தில் இருப்பதாகக் கூறும் சதுர்வேதி பற்றி...?
! வனவாசம் போவோரெல்லாம் ராமனாகிவிட முடியுமா என்ன...? வீரப்பனும்தான் வனவாசம் இருந்தான். அந்த லிஸ்ட்டில் வேண்டுமானால் சேர்ந்து கொள்ளலாம்.

● **இரா. சக்கரபாணி, மதுரை - 7**
? பாராளுமன்றத்தில் பிரதமர் இருக்கையில் ம.தி.மு.க உறுப்பினர் எல். கணேசன் அமர்ந்தது எதைக் காட்டுகிறது?
! எல். கணேசன் போல் எல் போர்டு எம்.பிக்கள் உள்ளதால், அந்த சீட்டில் கர்ச்சீஃப் போட்டு ரிசர்வ் செய்து வைக்காதது தவறு என்பதை!

● **ஆர். பிரகாஷ், பொன்மலை**
? இன்னும் கைதே ஆகாத அப்பு, ரவி சுப்ரமணியம் ஆகியோருக்காக தனி பங்களா தயாராகியிருப்பது எதைக் காட்டுகிறது...?
! தும்பை விட்டு விட்டு வாலைப் பிடித்த கதையாக, போலீஸ் இந்த வழக்கில் ரொம்ப அவசரப்பட்டு அவஸ்தைப் படுவதைத்தான்.

● **ஏ.எஸ். யோகானந்தம், கலிங்கியம்**
? கவாஸ்கரை மிஞ்சிய சச்சின் பற்றி...?
! கவாஸ்கருக்கு இணையான சதங்கள். கவாஸ்கருக்கு இணையான இரட்டைச் சதங்கள். இரு சாதனைகளும் சமீப பங்களாதேஷ் டெஸ்ட்டில்... 159 டெஸ்ட்டுகளில் காவஸ்கர் சாதித்ததை 153 டெஸ்ட்டுகளில் சச்சின் சாதித்தார். எனவே, கவாஸ்கரே அவரை கோகினூர் வைரம் என்று வர்ணித்ததில் வியப்பில்லை. வியப்பளித்தது சச்சினின் அடக்கம், பண்பு. Truly Great!

● **குவளை எழில், சென்னை - 92**
? 'மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் மடம், குரு போன்ற இடைத் தரகர்கள் தேவை இல்லை' என வாஸந்தி சொல்கிறாரே... குரு வழி தெய்வம் என்பதுதானே நமது கோட்பாடு?
! இடைத் தரகராக அன்றி நல்வழியைச் சுட்டிக்காட்டி, நம் சிந்தனையைத் தூண்டி, மனத்தையும் வளப்படுத்தும் குரு இருந்தால் வரவேற்று வழிபடுவதில் தவறில்லை. அப்படிப்பட்டவர்கள் வாழ்ந்து வழிகாட்டியதால்தான், இன்று நம்மில் சிலர் 'குரு என்ற இடைத்தரகர் தேவையில்லை' என்று கூறும் அளவுக்கு



● நம்பிக்கை மறுப்பு!

# திருமணத்தில் நம்பிக்கை இல்லை என்கிறரே கமல்?



* இரட்டைச் சங்கடம்!



* கோகினூர் வைரம்!



* மறுப்புக்கு மறுபக்கம்



* கார்கில் கைங்கரியம்!

வந்திருக்கிறோம். தனி நபரின் குறைபாடு தத்துவத்தின் கோளாறாகிவிடாது.

● **எஸ்.வி. லலிதா, ஓசூர்**

*? இக்கால குழந்தைகளுக்குப் பாசம், பணிவு குறைய காரணம்?*

! அவ்வாறு குறைந்துவிட்டதாக எண்ணிக் கொள்கிற, அல்லது குறையும்படி வழிகாட்டியிருக்கிற நாமே தான்!



* என்றும் இரண்டாவதாய்...!



* 'எல்' போர்டு!

● ரா. சாலமோன், ஆலங்குளம்

*? மனைவியின் சித்திரவதை காரணமாக மன உளைச்சலுக்கு ஆளாகும் கணவன் டைவோர்ஸ் கோரலாம் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதே?*

! கணவர்கள் எல்லோரும் ஸாக்ரடீஸாக இருக்க முடியுமா என்ன...?

● **பி. கற்பகம், சென்னை - 73**

*? 'விசாரணைக்கு இடையூறு செய்யும் விதத்தில் பத்திரிகைகள் எழுதக் கூடாது' என்று கல்கியில் வந்ததை நக்கீரனில் சின்னக்குத்தூசி கண்டித்து எழுதியதைப் படித்தீர்களா?*

! ஜயேந்திரர் விஷயத்தில், அவருக்கு ஆதரவாகவும் எதிராகவும் செயல்பட்டு, மீடியா தார்மிக நெறிகளையும் சட்ட விதிகளையும் மீறியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. காவல் துறையின் அணுகுமுறையும் பல விதங்களில் சரியில்லை. இவற்றைச் சுட்டிக் காட்டுவது ஜயேந்திரருக்கு வக்காலத்து வாங்குவதாக ஆகிவிடாது. அவர் குற்றவாளி என்று சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமானால், தண்டிக்கப்படத்தான் போகிறார். ஆசிரியர் பக்கத்தில் நமது வாதங்கள் ஆணித்தரமானவை என்பதால், அதில் குத்தூசி குத்தினாலும் வலிக்கவில்லை.

● **கே. தெய்வசிகாமணி, சென்னை - 30**

*? மணல் வியாபாரத்தை அரசே எடுத்து நடத்தி வருகிறபோது, மணல் திருட்டைத் தடுத்த துணை தாசில்தார் கொலை செய்யப்பட்டது பற்றி...?*

! உங்கள் கேள்வியின் முதல் பகுதிதான் இரண்டாவது பகுதியில் குறிப்பிடப்படும் விபரீதத்துக்குக் காரணம். மணல் திருட்டையும் விலை உயர்வையும் தடுப்பதற்கு மணல் வியாபாரத்தை அரசே ஏற்று நடத்துவது பரிகாரம் அல்ல.

● **கே. சண்முகம், ஆதமங்கலம்புதூர்**

*? 83வது பிறந்தநாளைக் கொண்டாடப் போகும் பேராசிரியர் அன்பழகன், அரசியலில் சாதித்தது என்ன?*

! எண்பத்து மூன்று வயதிலும் இரண்

# எண்ணிக்கை முக்கியமில்லை!

**தேசிய அளவில் கொடி கட்டிப் பறக்கும் பல கட்சிகளுக்கு பல மாநிலங்களில் லெட்டர்பேடு மட்டும்தான் இருக்கும். இப்படி தமிழகத்திலும் சில கட்சிகள் இருக்குமிடம் தெரியாமல் இருக்கின்றன. ஏன் இந்த நிலை? லோக் ஜனசக்தி (ராம்விலாஸ் பாஸ்வான்) மாநிலத் தலைவர் பெ. சந்திரசேகரனிடம் ஒரு மினி பேட்டி...**

***குத்துமதிப்பா உங்க கட்சியில எத்தனை பேர் இருக்காங்க?***



இதுல குத்து மதிப்பெல்லாம் போட முடியாது. இதுவரைக்கும் ஒன்றரை லட்சம் பேர் முறையா உறுப்பினர் அட்டையோட இருக்காங்க.

***இத்துனூண்டு ஆட்களை வச்சிகிட்டு எதுக்கு கட்சி நடத்த ஆசைப்படறீங்க...?***

கொள்கைதான் முக்கியமே தவிர எண்ணிக்கை முக்கியம் கிடையாது.

***அப்படீன்னா உங்க கொள்கை பத்தி கொஞ்சம் விலாவாரியா சொல்லுங்க...***

ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு, உணவு எல்லாவற்றையும் தங்கு தடையின்றி கிட்டச் செய்வதுதான் எங்கள் நோக்கம்.

***கைவசம் எவ்ளோ நிதி வச்சிருக்கீங்க?***

உறுப்பினர் சந்தா, பத்திரிகைச் சந்தா எல்லா வாங்குவோம். அதை அப்படியே கட்சிப் பணிக்கு பயன்படுத்திடுவோம். அதனால தற்போதைக்கு கைவசம் நிதி எதுவும் இல்லை.

- ஸ்வரா

கல்கி 26.12.2004

டாம் இடத்தை இழக்காமல் தக்க வைத்துக் கொண்டு, அதன் மதிப்பும் இன்று வரை குறையாமல் பார்த்துக் கொண்டிருக்கிறாரே, போதாதா?

● **என். மாணிக்கம், மின்னல்**

***? 'சோனியா இத்தாலிக்காரி, வெளிநாட்டவர்' என்று வாதிட்ட பவார், காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் பங்கு கொண்டுள்ளது பற்றி...?***

! சோனியா 'பிரதமர் பதவி வேண்டாம்' என்று துறந்த பிறகு, சரத்பவாரின் முந்தைய ஆட்சேபணைக்கு அவசியமே இல்லாமல் போய்விட்டதே. அதனால் உங்கள் கேள்வியும் வலுவிழந்து விட்டதே!

● **க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்**

***? ஜயேந்திரர் பேரில் வழங்கப்பட்ட தேசிய சாதனையாளர் விருதை ஏற்க பாலமுரளிகிருஷ்ணா மறுத்துள்ளாரே?***

! நிலவுகிற சூழ்நிலையை உத்தேசித்து, விருது வழங்கிய அமைப்பே விருது வழங்குவதை ஒத்தி வைத்திருக்கலாம். அவ்வாறு செய்யாததால் பாலமுரளிக்கும் சங்கடம்; அமைப்புக்கும் சங்கடம்.

● **வே. பாலா, திண்டுக்கல்**

***? 'திருமணத்தில் எனக்கு நம்பிக்கை கிடையாது; மற்றவர் சௌகரியத்துக்குத்தான் அது. கடவுள் இல்லாமல்தான் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்' என்று கமல் பேட்டி அளித்துள்ளாரே?***

! கமலின் நடிப்பில் எல்லா ரசிகர்களுக்கும் நம்பிக்கை உண்டு. கமலின் கொள்கைகளில் பெரும்பாலான ரசிகர்களுக்கு நம்பிக்கை கிடையாது.

● **எஸ். இராமலிங்கம், ஆத்தூர்** ★

***? நூல் விடுவது, கயிறு திரிப்பது, ஆழம் பார்ப்பது... இவை எல்லாமே ஒரே அர்த்தத்தைக் கொடுக்கும் சொற்கள்தானா...?***

! ஊஹூம்... ஜயேந்திரர் வழக்கு விஷயத்தில் போலீஸின் பல ரகச் செயல்பாடுகளைக் கவனியுங்கள். நீங்கள் குறிப்பிட்டுள்ள சொற்றொடர்கள் ஒவ்வொன்றுக்கும் நுணுக்கமான வேறுபாடுகள் புரிந்து போகும்!



## அஞ்சலி

**"குறையொன்றும் இல்லை அம்மா"**

எளிமை, அன்பு, அடக்கம், பதிபக்தி முதலிய
நற்பண்புகளால் பாரதப் பண்பாட்டுக்கு எடுத்துக்
காட்டாய் விளங்கிய இசைப் பேரொளியே!
தங்களின் தெய்வீக இசையால்
இந்நாடே பெருமையடைந்தது.

தங்களின் நல்லாசியினால் நாங்களும்
பெருமையுற்றோம்.

வாழ்க நின் புகழ் இவ்வையகம்
உள்ள மட்டும்.

பாரத ரத்னா

**M.S. சுப்புலட்சுமி அம்மா**

**R. பாஸ்கர், ஜோதிபாஸ்கர், பாலமுருகன், லட்சுமி, கீர்த்து, குட்டிம்மா**

**BLB Estates (P) Ltd.**
Behind Apollo Cancer Hospital, Teynampet, Chennai-18.
E-mail : blbestmail@vsnl.net www.blbestates.com


● என். ரங்கநாயகி, கோவை - 9

? பள்ளி ஆசிரியையால் திருட்டுப் பட்டம் கட்டப்பட்ட பத்து வயதுச் சிறுமி, தீக்குளித்துத் தற்கொலை செய்துகொண்ட செய்தியிலிருந்து நாம் அறிய வேண்டியது என்ன...?

! ஆசிரியர் பயிற்சி அளிக்கப்படும்போது அறிவு புகட்டலுக்கான ஆற்றலுடன், குழந்தைகளின் மென் மனங்களைப் புரிந்துகொண்டு இயங்கும் ஆற்றலும் வளர்க்கப்பட வேண்டும் என்பதுதான்.

● ஆரூர் சேகர், சென்னை -26

? அன்பாலும் கருணையாலும் ஒரு சங்கரராமனை தன் வசப்படுத்திக் கொள்ள முடியாத ஜயேந்திரர், எந்த மனப் பக்குவத்தின் அடிப்படையில் துறவியானார்...?

! அவர் தாமே முன்வந்து துறவி ஆக வில்லை. சங்கரமடத்தின் தலைவர்கள், முந்தைய தலைவரால் தலைமைக்கும் துறவுக்கும் குழந்தைப் பருவத்திலேயே தேர்ந்தெடுக்கப்படுபவர்களே... இந்தத் தேர்வு தவறாகக் கூடும் என்பதை ஏற்கிற மனப்பக்குவம்தான் நமக்கு இப்போது அவசியம் தேவை.

● நகை தி. மகராசன், சின்னமனூர்

? கார்கிலுக்கே சென்று தம் வீரர் களுக்குத் தமது கையால் உணவு பரி மாறிய குடியரசுத் தலைவரின் செயல் பற்றி...?

! அவருடைய ஆத்மார்த்த மனிதநேயத் தின் மற்றொரு வெளிப்பாடு.

❒ ரூ 100 பரிசு பெறுபவர்:
குவளை எழில்,
பிளாட் 73, கதவு எண் 20,
SBI காலனி, மூன்றாவது தெரு,
சென்னை - 600 092

★ ரூ. 50 பரிசு பெறுபவர்:
எஸ். இராமலிங்கம்,
165/74, மெயின் ரோடு,
ஆத்தூர் - 628 151
தூத்துக்குடி மாவட்டம்

26.12.2004 கல்கி

தமிழ், ஹிந்தி ஆகிய இரு மொழிகளில் 'மும்பை எக்ஸ்பிரஸ்' தயாரிக்கப் படுவதால், முழுப்படத்தையும் மும்பையில் எடுத்துக் கொண் டிருக்கிறார் கமல்.



# கலாட்டா எக்ஸ்பிரஸ்!



படத்தின் அனைத்துப் பாடல்களையும் ஹாலிவுட்டில் பதிவு செய்கிறது, இசைஞானி - கலைஞானி கூட்டணி.



பேசும் படம் உட்பட கமலுக்குப் புதிய பரிமாணங்கள் பல தந்த சிங்கீதம் சீனிவாச ராவ்தான் படத்தை இயக்குகிறார். அவருக்கு இது பொன்விழா படம்.

கல்கி 26.12.2004

கமலின்
'மும்பை
எக்ஸ்பிரஸ்'
பற்றி சில
எக்ஸ்பிரஸ்
நியூஸ்...



■ சௌராவ் சுக்லா

படத்தின் தலைப்பை
'மும்பை
விரைவுவண்டி' என்று
கூலாக மாற்றச்
சொல்கிறார்களாம்
திருமாவளவனும்,
ராமதாசும்!



கமலின் காமெடிப்
படமென்றால்
கிரேசிமோகன்
வசனம் எழுதுவார்.
இதில் கமலே
வசனம் எழுதுகிறார்.





"பக்கா சீரியஸ் கதை.
அதை விழுந்து சிரிக்கும்படி
கலாட்டா எக்ஸ்பிரஸாக தரப்
போகிறேன்" என்கிறார் கமல்.

தொகுப்பு:
ஜெய்

# கிருஷ்ணா, ராமா, கோவிந்தா!

## தும்புரு

நுங்கம்பாக்கம் கல்சுரல் அகடமி ரசிகர்களுக்கு ஏமாற்றம். டிசம்பர் 14, ஏழேகால் மணிக்கு அங்கே டி.என். சேஷகோபாலன் பாடியிருக்க வேண்டும். ஆனால், அப்பாவுக்குப் பதிலாக மகன் டி.என்.எஸ்.கிருஷ்ணா பாட வந்திருந்தார்.

"இப்படின்னு தெரிஞ்சிருந்தா நான் யேசுதாஸ் கச்சேரிக்குப் போயிருப்பேன். கைவசம் ரெண்டு வி.ஐ.பி. பாஸ் இருந்தது..."

"அடாடா! சேஷகோபாலன் இல்லியா? நான் அவருக்காகத்தானே வந்தேன்..."

"டிக்கெட்ல சேஷகோபாலன்னுதானே போட்டிருக்கு..."

- சேஷகோபாலன் அதே நேரத்தில் மார்கழி மகோத்ஸவ மேடையில் முழங்கிக் கொண்டிருந்தார். (தகவல் நன்றி: தி ஹிந்து) இது தெரியாமல் பலர் பலவாறு முணுமுணுக்க...



• கிருஷ்ணா...

"அவர் பையன்தானே... எப்படிப் பாடறார்னு கேட்போமே கொஞ்சம் நாழி..." என்று சிலர் உட்கார, தும்புருவும் ஓரத்து சீட் பிடித்துப் பேனா உதறி உட்கார்ந்தார்.

டி.என்.எஸ். கிருஷ்ணா கச்சேரியில் (கேட்டவரை) சங்கீதம் என்று தும்புரு ஒப்புக்கொண்டவை:

* வயலின் வாசித்த ஸ்ரீராம்குமாரின் ஆலாபனைகள்; கிருஷ்ணாவின் ஆலாபனைகளின் போது ஆர்.கே.எஸ் காத்த நிசப்தம்.
* டி.கே.மூர்த்தி, டி.வி.வாஸனின் தனி யாவர்த்தனம். லய வாத்தியங்களுக்கென ஏற்பட்ட கணக்குகளை 'ஸவால் - ஜவாப்' இன்றி இணக்கமாக அவர்கள் இசைத்தது.

இந்தக் கச்சேரியில் தும்புருவுக்குப் பிடித்த இதர விஷயங்கள்:

* நிர்விசாரமாக ஓடி விளையாடிக் கொண்டிருந்த சிறுவன்.
* கான்டீனில் வடையோ, மிளகாய் பஜ்ஜியோ தின்றுவிட்டு, காரம் தாளாமல் ஓடி வந்து அம்மாவிடம் அபிநயித்து தண்ணீர் வாங்கிக் குடித்த குழந்தை.
* வினாடிகள் நகர்வதை சிவப்புக் கண் சிமிட்டிச் சிரித்தபடி உணர்த்திய டிஜிட்டல் கடிகாரம்.
* மேடையில் சங்கீதம் என்கிற பெயரில் ஓர் ஊழிக் கூத்து அரங்கேறுவதை மந்தகாசப் புன்னகையுடன் கவனித்து நின்ற குழலூதும் கிருஷ்ணன் படம். (மேடைக்கு வலப்புறம் நிற்கிறார் மாயவன்.)

தியாக பிரும்ம கான சபாவில் அதே டிசம்பர் 14 பிற்பகல் 4.30 மணிக்கு சந்தானகோபாலனின் சிஷ்யர் ஸ்ரீராம் பார்த்தசாரதி பாடினார். குரு இயற்றிய பாடலையே



பேப்பரில் எழுதி வைத்துக்கொண்டு பாடிய முதல் சிஷ்யர் இந்த ஸ்ரீராமர் தானா என்பதை யாராவது உறுதிப் படுத்தினால் கின்னஸுக்கோ லிம்காவுக்கோ எழுதிப் போடலாம்.

முதல் பாட்டுக்கே (மேரு ஸமான மாயாமாளவகௌளை) நிரவல் பண்ணுகிறாரே இந்த இளைஞர் - அதுவும் நல்ல கட்டுப்பாடுடன் என்று எதிர்பார்ப்போடு நிமிர்ந்து உட்கார்ந்தால், போகப் போக அந்த எதிர்ப்பார்ப்புகளின் தலையில் இடி விழுந்தது. இடியென்றால் சாமானிய இடி இல்லை... பயங்கரமான கோடை இடி! சந்தானகோபாலனுடைய பாணியின் கழைக்கூத்து, செப்பிடு வித்தை என்று சங்கீதத்துக்கு ஒவ்வாத கூடாரங்களில் புகுந்து புறப்பட்டுக் கொண்டேயிருந்தார் இந்த இளைஞர். அடிக்கடி சுருதி விலகியதும், ஆஹிரியில் விருத்தம் பாடும்போது கூட பாவத்தைக் கொல்லும் அளவுக்கு அதை மிகைப் படுத்தியதும், 'மாயம்மா'வில் வரவே கூடாத சில சங்கதிகளை வரச் செய்ததும்... எப்படிப் பொறுப்பது...?

இத்தனைக்கிடையில் பி.வி.கணேஷ் பிரசாத்தின் வயலினும், மடிப்பாக்கம் சுரேஷின் மிருதங்கமும் இருந்தாலென்ன? இல்லாவிட்டால்தான் என்ன, என்றாகி விட்டது.





• ...ராமா!

அதிமுக்கிய அம்சமான வல்லின - மெல்லின போஷாக்கு என்பதே கிஞ்சித்தும் இல்லாததால், ஸ்ரீராமின் சங்கீதம் பெரும்பாலும் இரைச்சலாகவே ஒலித்தது.

ஓரஜூபுக, பாத பஜனமே அருள் பாவனி (சந்தானகோபாலனின் கீர்த்தனை) நெனருஞ்சிநனு, மாயம்மா, ஏதாவுன்னரா... என்று அழகழகான பாடல்களை எடுத்துக்கொண்டு, விதவிதமாக அவற்றை த்வம்ஸம் செய்தார் ஸ்ரீராம் பார்த்தசாரதி. நல்ல ஞானஸ்தர், ராக பாவம் எங்கே இருக்கிறது என்பது நன்றாகவே தெரிகிறது. ஆனால் தமது குருநாதரின் கீர்த்தனை விவரிக்கும் 'நாத யோக நல்வழியை' விட்டுவிட்டு ஜெமினி சர்க்கஸ், ரஷ்யன் சர்க்கஸ்,

கிருஷ்ணாவையும் ஸ்ரீராமையும் கேட்டுவிட்டு 'அட ராமா, கிருஷ்ணா' என்று தும்புருதான் அங்கலாய்த்தாரேயொழிய, ரசிகர்கள் சலித்துக் கொள்ளவே இல்லை. அகமும் முகமும் மலர்ந்து அடிக்கடி கைதட்டி தங்கள் குதூகலத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். இந்த கைத்தட்டலையும் ஆரவாரத்தையும் நம் இளைஞர்கள் தங்கள் வெற்றியின் அளவுகோலாக எடுத்துக் கொண்டால் என்ன ஆவது...? நினைத்துப் பார்க்கவே அச்சமாயிருக்கிறது.

கிருஷ்ணா, ராமா, கோவிந்தாதான்!

படங்கள்: ஸ்ரீஹரி

# 2005 இனி இவர்களின் ராஜ்யம்?

எல்லாக் கட்சிகளிலுமே இளைஞர் அணி உண்டு. முப்பத்தைந்து வயதுக்கு மேல் இளைஞரணியில் யாரும் இருக்கக் கூடாது என்ற விதிகூட உண்டு. ஆனால், மணி விழா கொண்டாட நான் பார்த்துக் கொண்டிருக்கும் நரைமுடிப் பிரமுகர்கள்தான் இளைஞரணியின் தலைவராகவோ அல்லது செயலாளராகவோ பொறுப்பு வகித்துக் கொண்டிருப்பார்கள். பல சந்தர்ப்பங்களில் அவர்கள் கட்சித் தலைவர்களின் வாரிசாகவோ, அல்லது உறவினர்களாகவோ இருக்கக்கூடும்.

"எதிர்கால இந்தியா இளைஞர்கள் கைகளில். அவர்கள் எவ்விதத் தயக்கமுமின்றி பொதுநலச் சேவைக்கு வர வேண்டும்" என்று மேடைக்கு மேடை மூத்த தலைவர்கள் முழங்கினாலும், இன்று படித்த இளைஞர்கள் அரசியலுக்கு வருவதை கடைசி வாய்ப்பாகத்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"இதற்குக் காரணம் உண்டு" என்கிறார் அ.இ.அ.தி.மு.க பிரமுகர் க.சுப்பு. "அரசியல் என்றாலே சாக்கடை; அதில் குதிப்பது கேவலம் என்று கருதும் இன்றைய இளைஞர்கள், படிப்பு, வேலை என்று தம் பாதையை வகுத்துக் கொள்கிறார்கள். அப்படியே வரும் இளைஞர்களும் எடுத்தவுடன் 'அதிகாரம் கிடைக்குமா? சம்பாதிக்க முடியுமா?' என்கிற எண்ணத்தில்தான் வருகிறார்கள். சுதந்திரத்துக்கு முன் இருந்தது தியாக அரசியல். இன்று அரசியலில் நுழைந்தவுடனேயே பணம், பதவி, பகட்டுதான் தேடப்படுகிறது. மற்றொரு விதத்திலும் இளைஞர்களுக்குச் சலிப்பு தோன்றிவிடுகிறது. என்னதான் உழைத்தாலும் கட்சியில் உயர் பதவிக்கு வர முடியாது. அங்கே குடும்ப அரசியலும், வாரிசு அரசியலும்தான் கொலுவீற்றிருக்கும் என்ற எண்ணம்தான் அது" என்கிறார் சுப்பு.



• பொன்முடி



• க.சுப்பு

அ.தி.மு.கவில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் இளைஞரணி என்ற அமைப்பு இருக்கிறது. 1972ல் எம்.ஜி.ஆர் கட்சியைத் துவக்கியபோது, அதில் இணைந்த இளைஞர்கள் பெரும்பாலோர் இன்று ஐம்பதைத் தாண்டியவர்கள் அல்லது நெருங்குபவர்கள். இந்த நிலையில் கட்சிக்கு 'இளமை முகங்கள்' மிஸ்ஸிங்.

"நீங்கள் அப்படிச் சொல்லிவிட முடியாது. இன்று எங்கள் கட்சியில் உள்ள பாதிக்கு மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் நாற்பது வயதுக்குக் கீழே உள்ளவர்கள்தாம். மேலும் அமைச்சர்கள் பொறுப்பிலும் அவர்களுக்கு உரிய பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகர துணை மேயர் பொறுப்புக்குக் கூட இளைஞரணி கராத்தே தியாகராஜனைத் தானே போட்டிருக்கிறார் அம்மா" என்று வாதாடுகிறார் ஒரு மூத்த அதி.மு.க பிரமுகர். கட்சியின் அதிகார மையங்களில் ஒருவராக இளைஞரான தினகரன் இருந்தாலும், அதை அ.தி.மு.கவினர் வெளிப்படையாகச் சொல்வதில்லை.

தி.மு.க.வில் கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கும் மேலாக இளைஞரணி மாநிலச் செயலாளர் பொறுப்பில் இருக்கிறார்



ஸ்டாலின். இதைத் தவிர துணைப் பொதுச்செயலாளர், முரசொலி அறக்கட்டளைத் தலைவர் என்று பொறுப்புகள் வேறு. தி.மு.க.வின் இந்த மில்லேனியத் தலைவராக அவரை உருவாக்க, எல்லா ஏற்பாடுகளும் இயல்பாகவே நடந்து கொண்டிருக்கின்றன.

"ஒவ்வொரு அணியின் செயலாளரும் பொதுச்செயலாளரால் நியமிக்கப்படுகிறார். அவர்கள் தலைமைக் கழகத்தில் இருந்து செயல்படுபவர்கள். அவர்களுக்கு வயது உச்சவரம்பு கிடையாது. ஆனால் கீழே உள்ள மாவட்ட, ஒன்றிய, நகர அமைப்பாளர்களுக்கு அல்லது செயலாளர்களுக்கு வயது உச்சவரம்பு உண்டு"

என்கிறார் தி.மு.க.வின் அமைப்புச் செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன்.

முன்னணித் தலைவர்கள் வரிசையில் ஸ்டாலின் மட்டுமே 'இளைஞராக' பளபளத்துக் கொண்டிருந்த நிலையில், சென்ற பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் அதிரடியாக கழகத்தில் இறக்கப்பட்டவர் தயாநிதி மாறன். தேர்தல் வெற்றிக்குப் பின் மத்திய கேபினட் அமைச்சர். இன்று தி.மு.க.வின் தில்லிப் பிரதிநிதியாக தேசிய அரசியலில் பளிச்சிடுகிறார். தி.மு.க.வில் உள்ள லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்டுகிற வகையில் இவரது செயல்பாடுகள் இருக்கின்றன. படித்த இளைஞருக்கு வாய்ப்புகள் கிடைத்தால் ஜமாய்த்து விடுவர் என்பதற்கு இவர் நல்ல உதாரணம். ஆனால் "இந்த வாய்ப்பு தலைவரின் உறவினர் என்பதால்தானே கிடைத்தது?" என்கிற விமர்சனத்தையும் அலட்சியப்படுத்திவிட முடியாது. எது எப்படியிருந்தாலும், தி.மு.க.வின் எதிர்காலத்தில் தயாநிதி மாறனின் அழுத்தமான பங்களிப்பும் உண்டு என்பதைத்தான் அவரது நுழைவும் ஏற்றமும் சொல்கின்றன.



• ஜி.கே.வாசன்

கழக இளைஞர் பாலிடிக்ஸ் இப்படிப் போய்க்கொண்டிருக்க, தாத்தாக்கள் துள்ளி ஆடிக் கொண்டிருந்த காங்கிரஸில் இளமைக் காற்று சுகமாக வீசிக் கொண்டிருக்கிறது. தில்லியில் பாராளுமன்ற உறுப்பினர்களாக சச்சின் பைலட், ஜோதிர்மய் சிந்தியா, ஜிண்டாய், தியோரா என்று இளைய தலைமுறை ராகுல்காந்தியின் தலைமையில் அணிவகுத்து நிற்கிறது.


"தமிழ்நாட்டைப் பொறுத்தவரை படித்த இளைஞர்கள் அரசியலுக்கு வர விரும்பினால், அவர்களுக்கு ஏற்ற தளமாக இன்றிருப்பது காங்கிரஸ் மட்டும்தான். 2006 சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸில் உள்ள இளைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் காத்திருக்கின்றன. மாநிலத் தலைவர் வாசனே இளைஞர்தான். இந்தச் சூழலில் 'பசுமையாக' வந்திருக்கும் கார்த்தி சிதம்பரம் மற்றும் திருமகன் ஈ.வே.ராவின் செயல்பாடுகள், எங்கள் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும்" என்கிறார் தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவர் டாக்டர். விஷ்ணு பிரஸாத்.

மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் மகன்தான் திருமகன் ஈ.வே.ரா. அமைச்சுப் பணி இளங்கோவனை அழுத்த, தந்தை சார்பாக கோபிசெட்டிப்பாளையம் தொகுதி மக்களிடம் குறைகளைக் கேட்டு, அவற்றைக் களையும் பணியை மேற்கொண்டிருக்கிறார் திருமகன்.

"தேர்தல் பிரசார கூட்டங்களின் மூலம் மேடைப் பேச்சுக்கு அறிமுகமானேன். இரண்டு தேர்தல்களில் அப்பாவுக்காக பிரசாரம் செய்திருக்கிறேன். இந்தியா போன்ற பன்முகம் கொண்ட நாட்டுக்கு ஏற்ற அரசியல் கட்சி காங்கிரஸ்தான் என்பதை நன்குணர்ந்து அதில் இணைந்துவிட்டேன்" என்கிறார் இவர். கார்த்தி சிதம்பரமும் தந்தை சார்பாக சிவகங்கை பாராளுமன்றத் தொகுதியில், கிராமம் கிராமமாகப் போய் மக்களைச் சந்திக்கிறார். "இந்த இருவருக்கும் 2006 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்கும் என்பது நிச்சயம்" என்கின்றனர் காங்கிரஸ் பிரமுகர்கள். "எதையும் எதிர்பார்த்து கட்சியில் இணையவில்லை" என்பதே இவர்களது பதிலடியாக இருக்கிறது.

"நானோ என்னுடைய குடும்பத்தினரோ, அரசியல் மூலமாகக் கிடைக்கும் எந்தப் பொறுப்புகளையும் ஏற்க மாட்டோம்" என்றார் டாக்டர் ராமதாஸ். ஆனால் மகன் டாக்டர் அன்புமணி இன்று மத்திய அமைச்சர். இது தவிர கட்சியின் அமைப்புச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார். "எங்களுக்கெல்லாம் நம்பிக்கையான எதிர்காலத் தலைமையாக நிமிர்ந்து நிற்கிறார் சின்ன

ஐயா. (அன்புமணியை இப்படித் தான் கட்சிக்காரர்கள் அழைக்கிறார்கள்). அரசியலை தொழிலாகப் பாவித்து சம்பாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கு பா.ம.க.வில் இடமில்லை. இங்கே ஒவ்வொரு இளைஞனுக்கும் தலைமைப் பயிற்சி, ஆளுமைப் பண்பு, பொதுச் சேவை ஆகியவை பற்றி பாசறை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஆக்கபூர்வமான வழியில் இளைஞர்களை வழி நடத்துகிறார் டாக்டர் ராமதாஸ். தீரன், தலித் எழில்மலை, புதா. இளங்கோவன் போன்ற துரோகிகள் முதுகில் குத்திவிட்டு ஓடிய நிலையில், எங்களின் வற்புறுத்தல் பேரில் சின்ன ஐயா அமைச்சர் பொறுப்பு ஏற்க ஒப்புக்கொண்டார்'' என்கிறார் பா.ம.கவின் மாநில இளைஞரணிச் செயலாளரான அறிவுச் செல்வன். ''பா.ம.க.வின் தலைவராக ஜி.கே. மணி இருந்தாலும், கட்சி செயல்பாடுகள் மற்றும் நியமனங்களில் டாக்டர் அன்புமணியின் கைவண்ணம் இப்பொழுதே உண்டு'' என்றும் பெருமையுடன் பா.ம.க. பிரமுகர்கள் சொல்கிறார்கள்.



• அறிவுச் செல்வன்

இன்னமும் அரசியல் திசை பக்கம் சிறிதும் எட்டிப் பார்க்காமல், தான் உண்டு, தன் பிஸினஸ் உண்டு என்று இருப்பவர் வைகோவின் மகன் துரை வையாபுரி. வைகோ ஒன்றரை வருட காலம் 'பொடா'வில் இருந்தபோது, கட்சிப் பிரமுகர்களுக்கும் தந்தைக்குமிடையே அரசியல் செய்திகளைச் சுமந்து சென்ற அனுபவம் இவருக்கு உண்டு. 'நமக்கு அரசியல் வேண்டவே வேண்டாம்' என்று பேட்டிகளில் இவர் அடித்துச் சொன்னதுண்டு. ஆனால், அரசியல் புதைமணல் இவரையும் இழுக்கும் வாய்ப்பு இருப்பதாகவே சொல்கிறார்கள் ம.தி.மு.க பிரமுகர்கள். 2006 சட்டமன்றத் தேர்தலில் கோவில்பட்டியோ அல்லது விளாத்திகுளமோ இவருக்காக ரிசர்வ் செய்யப் படக்கூடும் என்கிறார்கள்.

இப்படி வாரிசுகள் மின்னிக் கொண்டிருக்க, ''அரசியலில் இளைஞர்கள் அதிக ஆர்வம் காட்டாமல் இருப்பதற்கு, உணர்ச்சிபூர்வமான பிரச்னைகள் ஏதும் இல்லாமல் இருப்பதுதான் காரணம்'' என்று சொல்வோரும் உண்டு. ''எப்போதும் உணர்ச்சியைத் தூண்டும், உணர்வுகளை நசுக்கும் பிரச்னைகள் சமுதாயத்தில் இருக்காது. அரசியல் கட்சிக்கு மொழிப் பாதுகாப்பு, சமுகநீதி போன்ற கொள்கைகள் அஸ்திவாரமாக இருந்தால், அவற்றை விட்டுக் கொடுக்காமல், காலத்திற்கேற்றபடி சில மாறுதல்களைச் செய்து கொள்ள வேண்டும். முதுமையின் அனுபவம், பக்குவம், புத்திசாலித்தனம், இளமையின் சுறுசுறுப்பு மற்றும் துணிச்சலோடு இணையும் பட்சத்தில் ஒரு கட்சி பிரகாசிக்கும். இதற்கு தி.மு.கதான் உதாரணம்''என்கிறார் முன்னாள் தி.மு.க. அமைச்சர் பொன்முடி.

இறுதியாக மனநல மருத்துவர் டாக்டர் ருத்ரனிடம் ''தலைவர்கள் தங்கள் வாரிசுகளையே அடுத்த தலைவர்களாக உருவாக்க முனைப்புக் காட்டுவது ஏன்?'' என்றோம்.

''தாவரங்கள் தங்களைத் தாங்களே புதுப்பித்துக் கொள்வது எப்படி இயற்கை நியதியோ, அது போல அரசியல்வாதிகளும் தங்கள் செல்வாக்கு, புகழ் (சொத்தும் தான்), தலைமுறை தலைமுறையாகத் தொடர வாரிசுகளை உருவாக்குகிறார்கள். தலைவர்களுக்கு மற்றவர்கள் மீது நம்பிக்கையும் இல்லை. அவர்களுக்குப் பிறரை வளர்க்கும் அளவுக்குத் தன்னம்பிக்கையும் இல்லை'' என்ற ருத்ரன், ''ஒருவேளை செல்வாக்கு, புகழ் ஆகியவை நியாயமான அடிப்படையில் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்ற பயமும் கூட, அவர்கள் வாரிசுகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடக் காரணமாக இருக்கக்கூடும்'' என்று 'நச்'சென்று முடித்தார்.

- ப்ரியன்

படங்கள் : ராஜன்

சித்திரம் : அரஸ்

ஓடிக் கொண்டே இருக்கிறார் சாரதா நாராயணன். எத்திராஜ் கல்லூரியில் முதலாமாண்டு சைக் காலஜி மாணவி.

சமீபத்தில் மாநில அளவில் நடந்த தட களப் போட்டியில் நூறு மீட்டர், இருநூறு மீட்டரை புயல் வேகத்தில் ஓடி தங்கப் பதக்கங்களை அள்ளி வந்திருக்கிறது இந்த இளமைச் சூறாவளி!

பூ ஒன்று புயலானது எப்படி?

''ஏழாம் வகுப்பு படிக்கும் போதிலிருந்தே எனக்கு விளையாட்டில் ஆர்வம் அதிகம்!

''என் கோச், ராஜசேகர் என்னை நல்லா ட்ரெய்ன் பண்ணார்'' என்றவர், நிறுத்தி நிதானமாகச் சொன்னார்: ''இன்று எனக்கு வெற்றி கிடைக்கக் காரணம் ஆரம்பத்தில் நான் பெற்ற தோல்விகள் தான்!''

''முதல் நான்கு வருடங்கள் தொடர் தோல்விதான். ஆனாலும் விடாமல் போராடினேன். பிறகு, விசாகப் பட்டினத்துல நடந்த நேஷனல் மீட்ல லாங்க் ஜம்ப்பில் 5.15மீ. நீளம் தாண்டி சாதனை படைச்சேன்!''

நாம் விழிக்க... ''ஆமாம் ஓட்டப்பந்தயத்தில் மட்டுமல்ல... லாங்க் ஜம்ப், ட்ரிபிள் ஜம்ப்பிலும் தங்கம் வாங்கியிருக்கேனாக்கும்'' என்றார் காலரைத் தூக்கிவிட்டபடி.

மேற்கு வங்கத்தில் நடந்த அகில இந்திய தடகளப் போட்டி, கேரளாவில் நடந்த ஓப்பன் ஸ்டேட் மீட்... என்று எட்டுத்திக்கும் சென்று கைநிறைய தங்கம் வாங்கி வருவது சாரதாவுக்கு வழக்கமான ஒரு விஷயமாகி விட்டது.




# ரெடி... ஸ்டார்ட் கோ!

ஆனாலும் சாரதாவுக்கு ஒரு வருத்தமும் இருக்கிறது.

''ஒரு தடவை வெளியூர் போய் போட்டியில கலந்துகிட்டு திரும்புறதுக்கு ஐயாயிரம் ரூபாய் செலவாகுது! அதே மாதிரி ஷூ, கிட்ஸ், ஸ்பெக்ஸ் எல்லாம் ரொம்ப காஸ்ட்லி! கிரிக்கெட்டுக்கு லட்சம் லட்சமாக கோடி கோடியாக ஸ்பான்சர் செய்யும் நிறுவனங்கள், தடகளம் பக்கமும் கொஞ்சம் எட்டிப் பார்க்க வேண்டும்!'' என்கிறார்.

பேட்டி, படங்கள் : **யுகந்த்**

GOKULAM
The magazine for children
Look forward to lots of fun and enjoyable reading
Rs. 8/- only
47- NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 32

கல்கி வழங்கும்

# சென்னை ஸ்பெஷல்

கல்கி ஜன்னலில் ஒரு மின்னல்!

(சென்னை நகர்க்கு மட்டும்)

கோகுலம்
சிறுவர் மாத இதழ்
உங்கள் குழந்தைகளின் மகிழ்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அட்டகாசமான இதழ்
ரூ.8/- மட்டுமே
47-NP, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

8 பக்கங்கள்
26 டிசம்பர் 2004 இதழுடன் இலவச இணைப்பு






அமெரிக்கா, அண்டார்டிகா, அட்லாண்டிக் ஓஷன், ஆர்டிக் ஓஷன் இப்படி நிறைய இடத்துக்கு நான் போயிருந்தாலும் (சரி சரி, முறைக்காதீங்க) சென்னையில என்னோட ஃபேவரிட் ப்ளேஸ் அடையார்தான். 'அட, அப்படியா'ன்னு நீங்க ஆச்சரியப்படற நிறைய விஷயங்கள் அடையார்ல இருக்கு.

உலகம் முழுக்க அடையார் பரவிய சுமார் 20,000 ஓலைச்சுவடிகள், 200,000 புக்ஸ் இருக்கு. 600 வருஷ குரான், 500 வருஷ சமஸ்கிருத ஸ்லோகங்கள், 800 வருஷ புத்தர் ஓவியங்கள், 300 வருஷ ஜெர்மன் பைபிள்.. இது போல 'கொஞ்சம் கண்டு பழசா' அழகுல கலக்கித் தூப்பியிருக்காங்க.

இன்னொரு ஆச்சரியமான மேட்டர் தெரியுமா? அடையார் ஆலமரம் இது வரைக்கும் 450 ஹேப்பி பர்த்டேக்கு மேலே கொண்டாடியிருக்கு. உலகத்துலேயே சீனியர் மரங்கள் வரிசையில நம்ம ஆலமரத்துக்குத்தான் இரண்டாவது இடம். மரம்னா மரம் அப்படி ஒரு மெகா மரம். இந்த மரத்தோட கிளைகள் சுமார் 40,000 அடிக்கு நல்லா அகலமா பரவியிருந்தது. இதுக்குக் கீழ 3000 பேர் ஒரே சமயத்துல உட்கார்ந்து ஜே. கிருஷ்ணமூர்த்தியோட லெக்சரைக் கேட்பாங்களாம். லோ, நம்ம ஆலமரம் திடு திடு ஒபன் ஆடிட்டோரியமா பார்ட்டைம் வொர்க் பண்ணியிருக்கு. சபாஷ் சரி..!

ஃபேமஸ் ஆனதுக்கு முக்கியக் காரணம் 1879ல மேடம் ப்ளாவட்ஸ்கி இங்க வந்து ஆரம்பிச்சு வைச்ச தியோஸஃபிகல் சொஸைட்டி. பல இன்டர்நேஷனல் லெவல்களுக்கு அடையார்தான் ஹெட் குவார்ட்டர்ஸ். கடவுள், ஆத்மா, மெடிடேஷன் பத்தியெல்லாம் இங்க சிறுவரா விளக்கமா நடத்துக் கிட்டிருக்கு.

கொஞ்சம் மூச்சைப் பிடிச்சுக்கோங்க. இங்க இருக்கிற லைப்ரரி



ஆனா பாவங்க... இரண்டு தடவை பலமா அடிச்ச புயல் காத்துல இந்த ஆலமரம் பாவம் செய்ய முடியாம [illegible] அதோட கிளைகள் [illegible] பாலே டான்ஸ் ஆடிகிட்டிருக்கு.

[illegible] இருக்கு இதுல 68.27 ஏக்கரில் [illegible] மூலிகை [illegible] தண்ணி. அதைத்தான் இந்த


# உள்ளே...

திக்திக் பாலம்
–ஃபோக்கஸ்
லைப்டப் குரல்
–சி.ஐ.பி.
ஜில் ஜில் ஸ்வீட்ஸ்
–டேஸ்ட்.காம்

காத்தாவது கருப்பாவது, இனி இதை யாரும் ஒன்னும் செய்ய முடியாது. அடையாரோட அம்ப்ரல்லா இந்த ஆலமரம்தான்.

ஸ்வீட்டா பாட்டுப் பாடினா மரம் செடியெல்லாம் வளரும்னு சொல்லுவாங்க. நான்கூட ட்ரை பண்ணிப் பார்க்கலாமேனு ஆலமரத்துக்குக் கீழ நின்னு ஒரு பிரிட்னி ஸ்பியர்ஸ் பாட்டை ஹை பிட்ச்ல எடுத்து விட்டேன். வாவ்... வாட் எ சர்ப்ரைஸ்! ஆலமரம் தலையை ஆட்டி ஆட்டி ஒன்ஸ்மோர் கேட்டுதுங்க. நிஜமா உண்மையாதாங்க சொல்றேன்... அடப்பாவிங்க..

– பிரிட்னி லஜ்ஜு




SCHOLAR
LENDING LIBRARY A/C
ALL LATEST BOOKS FOR RENT
Internet Browsing
Computer and Video Games
Attached
124 A, LB Road, KR Building,
opp: Adyar Ananda Bhavan, Adyar,
Ph: 52115434
Free Door-Step Service

# கிறிஸ்துமஸ்க்கு முந்தைய இரவு



அது கிறிஸ்துமஸுக்கு முந்தைய இரவு. வெளியே பனி பெய்து கொண்டிருக்கிறது. அந்தச் சிறுமி இன்னமும் உறங்கவில்லை. விடிந்தால் கிறிஸ்துமஸ். எப்படி வரும் உறக்கம்?

கனத்த போர்வையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறாள் அவள். இதோ வெகு அருகே வந்துவிட்டது நிலவு. சுற்றிலும் கோடிக் கோடி நட்சத்திரங்கள்.

வெளியே எட்டிப் பார்த்த அவள் தலையில் பாய்ந்து வந்து இறங்கியது ஒரு பொட்டு வெள்ளைப் பனி. ஒருமுறை சிலிர்த்து விட்டு யோசிக்கிறாள். எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். 'கவனமாய் பார்த்துக் கொண்டே இரு. பனி பெய்யும் இரவில் நிலவின் நடுவிலிருந்து கிறிஸ்துமஸ் தாத்தா வண்டியை ஓட்டி வருவார். வண்டி நிறைய வண்ண வண்ண அட்டைப் பெட்டிகள். அட்டைப் பெட்டிகளுக்குள்... உஷ்... அது ரகசியம். நீ விழித்துக் கொண்டிருந்தால் உனக்கும் கொடுப்பார். இல்லையென்றால் ஜன்னல் வழியாகப் பார்த்து விட்டு, போயே போய் விடுவார்.'

இதோ போதிய அளவு ஜன்னலையும் கண்களையும் திறந்து வைத்தாகிவிட்டது. பார்க்கலாம். இப்படித்தான் போக வேண்டும் அந்த வண்டி. வயதானவர் அல்லவா! மெதுவாகத் தான் ஓட்டிச் செல்வார்.

படுக்கைக்குத் திரும்பிச் சென்று போர்வைக்குள் நுழைகிறாள். படுத்தவாறே பார்த்துக் கொண்டிருக்கலாம். ஜன்னல்தான் இங்கிருந்து தெரிகிறதே.

சரி. ஆனால் படுத்துக் கொண்டு என்ன செய்வது? சிறிய கண்களை மூடிக் கொள்ளலாம் தானே? அவ்வளவு பெரிய வண்டி கடந்து செல்லும்பொழுது சத்தம் கூடவா வராது?

அவ்வளவுதான். அவ்வளவு தான் தெரியும் அந்தச் சிறுமிக்கு. முதல் வெளிச்சக் கதிர் பாதம் தொட்டதும் திடுக்கிட்டு விழித்து எழுகிறாள் அவள்.

ஓடிச் சென்று ஜன்னலைப் பார்க்கிறாள். நிலவு இல்லை. நட்சத்திரங்கள் இல்லை. பனி மெலிந்திருந்தது. கடந்துவிட்டதா தாத்தாவின் வண்டி? சிறிய கண்களில் பெரிய பெரிய கண்ணீர்த்துளிகள். என்ன சொல்வது தோழிகளிடம்? தூங்கி விட்டேன், தாத்தா சென்று விட்டார் என்றா? அவமானமில்லையா?

ஏதேதோ முனகியபடி திரும்பிய அவன் முகத்தில், மின்னல் போல ஒரு குட்டிப் பிரகாசம். கண்களைச் சுருக்கிப் பார்த்தால்... இதோ... அட... சுருண்டுக் கிடக்கும் போர்வைக்கு வெளியே எட்டிப் பார்க்கும் வண்ண வண்ணப் பரிசுப் பெட்டிகள். ஓடிச் சென்று எடுத்துப் பார்க்கிறாள் இரண்டு கைகளாலும்.

அட இதென்ன? தடவிப் பார்த்த அவள் கைகளில் சிலிர்ப்புடன் ஒட்டிக்கொண்டது ஒரு பொட்டு பனி.

சென்ற இதழில் இந்திரா ப்ராஸ் பூஜா வெட்டல்ஸ் பற்றிய கட்டுரையில் 'இரும்பிலே கலை வண்ணம்' என்று வந்துள்ளது. அதை 'பித்தளை' மற்றும் 'பஞ்சலோகம்' என்று திருத்திப் படித்துக் கொள்ளவும்.

கிறிஸ்துமஸுக்கு முந்தைய இரவில் ஜன்னலுக்கருகே குழந்தைகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வயதான தாத்தா யாரையுமே ஏமாற்றுவதேயில்லை...

பனி விழும் கிறிஸ்துமஸ் காட்சிகளை இலக்கியத்தில் பதிய வைத்த முக்கிய எழுத்தாளர் சார்லஸ் டிக்கின்ஸ். அவரது கிறிஸ்துமஸ் கரோல் எனும் புத்தகத்தை வாசித்தால் உங்கள் மீதும் பனி பெய்யும். பொட்டு பொட்டாக.

✍ மருதன்

சத்தம், தேவி போல 'பளிச்' திரையரங்குகள் அடையாறிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் இல்லாமல் போனாலும் இப்பகுதிவாசிகளின் செல்லத் திரையரங்கம் ப்ரார்த்தனா ட்ரைவ் இன் தியேட்டர்தான்.

F.I.R.

# கலாம் கனவு நிறைவேறுகிறது!

ஆலயத்திற்குள் நுழையும் போது, செருப்பைக் கழற்றி வைப்போம். ஆனால் இந்த ஆலயத்திற்குள் நுழையும்போது, ஜாதி, மத, மொழி, இன, பால் உணர்வுகளை எல்லாம் கழற்றி எறிந்து விட்டுத்தான் நுழைய வேண்டும். அந்த ஆலயம் 'சேவாலயம்'. ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லம், முதியோர் இல்லம் மற்றும் கிராமப்புற ஏழை மாணவர்களுக்கான உயர் நிலைப்பள்ளி அனைத்தும் கொண்டதே சேவாலயம். திருநின்றவூர் அருகிலுள்ள காசுவா கிராமத்தில் இயங்கி வருகிறது. அடையாறு கற்பகம் கார்டனிலுள்ள அதன் நிர்வாக அலுவலகத்தில் ஒருங்கிணைப்பாளர் வெங்கடரமணி நம்மிடம் பேசினார். "குழந்தைகளின் பள்ளி சேர்க்கையிலோ, டி.சி.யிலோ எதுலேயும் ஜாதி, மதம் குறிப்பிடுவது கிடையாது. ஜாதியை விரும்பாத ஒரு சமுதாயம் அமைப்பது எங்கள் நோக்கம். குழந்தைகளை அடிக்கவே மாட்டோம். பெரியவங்கிட்ட மரியாதையா பழகுறதுக்கு நல்ல பயிற்சி கொடுக்கிறோம். தமிழ் வழிக் கல்விதான். ஆங்கிலம், ஹிந்தி கத்துக் கொடுக்கிறோம். அந்தப் பட்டிக்காட்டுல மூணாவது படிக்கற சின்னப் பொண்ணுக்கு கூட 'பிரெஞ்ச்' பண்ணத் தெரியும். உயர் நிலைக் கல்வியில் விவசாயமும், கணிப்பொறியும் பாடமா வைச்சிருக்கோம்.



எந்தக் காரணத்தைக் கொண்டும் அழிவு தரும் 'நியூக்ளியர் சயின்ஸை' பாடமாகக் கொண்டு வர மாட்டோம். இதன் நிறுவனர் வி. முரளிதரன் காந்தி, பாரதி, விவேகானந்தர் இவர்களோட கொள்கைகளின்படி இந்நிறுவனத்தை நடத்திக்கிட்டு வர்றாரு. தையல் பயிற்சி, தோட்டக் கலை பயிற்சி, ஸ்கிரீன் பிரிண்டிங் இப்படி தொழில் சம்பந்தப்பட்ட பயிற்சிகளையும் கொடுக்கிறோம். எல்லாம் கண்டிப்பா ஏழை மாணவர்களுக்கு மட்டும். கடந்த 2 வருடங்களாக எங்கள் பள்ளி அரசுத் தேர்வில 100% வந்ததால, பிற மாணவர்கள் சேர்க்க கடிதம் போட வர்றாங்க. ஆனா நாங்க ஏழை மாணவர்களை நேரச் சென்று சேர்க்கிறோம். முக்கியமா, எங்க இல்லத்துல இருக்குற முதியோர்கள், இல்லக் குழந்தைகளோட நல்ல குடும்ப வாழ்க்கையை சந்தோஷமா வாழ்ந்துகிட்டு இருக்காங்க!" என்றார் புன்னகையுடன்.

கலாமின் கனவை நிறைவேற்றும் சேவாலயா பள்ளியின் கடவுள் வாழ்த்துப் பாடல் என்ன தெரியுமா... பாரதியின் "அச்சமில்லை... அச்சமில்லை..."

(உதவ விரும்பினால் ஃபோன் : 24468202)

✍ முகில்

சென்னையின் மிக முக்கிய அடையாளமாக மாறிவிட்டவை மேம்பாலங்கள். இவற்றில் அடையாறு மேம்பாலத்தை 'இது மேம்பாலமாக அல்லது மேலே அனுப்பும் பாலமா?' என்றெல்லாம் கேட்டது எதிர்கட்சித் தரப்பு. அப்படியென்ன அதிபயங்கர சிக்கல் இந்தப் பாலத்தினால் ஏற்பட்டுள்ளது? - விவரம் சேகரிக்க பலரிடம் பேசினோம் - சிலர்


• ராஜேந்திரபாபு

# தீக்... தீக்... பாலம்




விவரம் தந்தார்கள். அவற்றில் சில:

"இந்த மேம்பாலத்திலிருந்து வர்ற பஸ்கள் திருவான்மியூர் திரும்பறதுக்குப் பயன்படுத்தற இறங்கும் பகுதிதான் பிரச்னைக்குரிய பகுதி. இந்தப் பாலத்தை ஒட்டிய இடது பகுதி ரொம்பக் குறுகலா இருக்கும். ஒரேயொரு பஸ் போகலாம். அதுவும் பாலம் முடியறப்போ எப்போ வேணும்னாலும், பாலமும் பஸ்ஸும் உரசவும் வாய்ப்பு இருக்கு. அப்போ பஸ்ல ஜன்னல் ஓரமா உட்கார்ந்து வர்றவங்களுக்கு மிகப்பெரிய ஆபத்து இருக்கு" என்கிறார் பெசன்ட்நகரைச் சேர்ந்த வில்லியம்ஸ்.

இந்த வழியா பஸ், கார், ஆட்டோ போற மாதிரி சில பேர் நடந்தும் போறாங்க. அப்போ பின்னால பஸ் வந்துச்சுன்னா ஒதுங்கி வழிவிடத் தனி இடம் கூடக் கிடையாது. அந்த அளவுக்கு நெருக்கமான பகுதி அது. சரி, பாதையைக் கடக்கலாம்னு பார்த்தா, அதுக்கும் ஆபத்து - மேம்பாலத்திலிருந்து தொடர்ந்து வண்டிங்க வந்துகிட்டே இருக்கும். சரி - பாலத்துக்கு அடியில இருக்கற இடத்துல ஒதுங்கலாம்னா, அதுக்கும் வழி இல்லாம அந்த இடத்தை தனியார் இருசக்கர வாகனங்கள் ஆக்கிரமிச்சிட்டு இருக்கு என்று வருந்தினர் இப்பகுதி மக்கள். மேலும் இந்தப் பாலத்தால் வியாபாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் தரப்பு குமுறுகின்றது. மேலும் விபத்துக்கள் நடப்பதும் இங்கு வாடிக்கையான விஷயம்.

ஏன் இந்த நிலை? - இதற்கு என்னதான் தீர்வு? - மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் ராஜேந்திரபாபுவிடம் வினவினோம்:

"இந்தப் பாலத்தினாலயும், அதுக்குப் பக்கத்துல இருக்கற இடத்தாலயும் விபத்துகள் நடக்கறது உண்மைதான். இதுக்குக் காரணமான பாலத்தின் இந்தக் குறிப்பிட்ட பகுதி தேவையில்லைங்கறதுதான் எங்களோட கருத்து. ஆனா அதுக்காக பாலத்தோட பிரச்னைக்குரிய பகுதியை இடிக்கத்தேவையில்ல. இத்தனை நாள் பழகிட்டதால திடீர்னு அதை எடுத்துட்டா அதனால பாதிக்கப்படறது பொதுமக்கள்தான். அதனால அந்தப் பகுதியை இடிக்காம, வேற ஒரு தீர்வைக் கொண்டு வரலாம்.

ஆனந்தபவன் இருக்கிற பக்கம் பத்து அடி சாலையை அகலப்படுத்தினா, பேருந்துகளும், பொது மக்களும் போயிட்டு வர்றதும் சுலபமாயிடும். விபத்துகளும் தடுக்கப்படும். தவிர இந்தப் பாலத்தால வியாபாரம் பாதிக்கப்படுதுன்னு சொல்றது தப்பு. பொது மக்கள் நலனுக்கு சில இடையூறுகள் வந்தா, அதைச் சமாளிக்கறதுதான் நல்லது. அதை விட்டுட்டு பாலத்தையே சுத்தமாக எடுக்கணும்னு சொல்றது எனக்கு உடன்பாடு இல்ல - யாருக்கும் இருக்காதுன்னு நினைக்கிறேன். இதற்குத் தீர்வு சீக்கிரம் கிடைக்கும். மாநகராட்சி நடவடிக்கை எடுக்கும்" என்று முடித்துக் கொண்டார்.

✍ முத்து
📷 ராஜன்

## வாழ்க வளமுடன்!

மனித குலம் நிறைவும், அமைதியும் பெற்று வளமாக வாழ்வதற்குரிய கலை மனவளக்கலை. உருவாக்கியவர் வேதாத்திரி மகரிஷி. இவரின் 'உலக சமுதாய சேவா சங்கம்' 1958ல் ஆரம்பிக்கப்பட்டு இன்றும் தன் சேவையை மதங்களைத் தாண்டி, மனித மனங்களுக்காகச் செய்து வருகிறது. இதன் தலைமையகம் திருவான்மியூர் வால்மீகி நகரில் இயங்கி வருகிறது. உடல் நலத்திற்கும், மன வளத்திற்கும் எளிய முறை உடற்பயிற்சி, தியானப் பயிற்சி, காயகல்பப் பயிற்சி, அகத்தாய்வுப் பயிற்சிகள், பிரம்மஞான விளக்கம் ஆகியன கற்றுத் தரப்படுகின்றன. நகர வாழ்க்கையின் டென்ஷனைக் குறைத்து மனதை அமைதியாக்கும் கலையைக் கற்க டயல் பண்ணுங்கள்: 24410692


• வேதாத்திரி மகரிஷி


## கொஞ்சம் பனி... நிறைய இசை!

மார்கழிப் பனியோடு இன்னிசை மழையும் சேர்ந்து விட்டது. தனது 33வது பிறந்த நாளை பெரும் இசைத் திருவிழாவாக தற்பொழுது கொண்டாடிக் கொண்டிருக்கிறது நுங்கம்பாக்கம் கல்சுரல் அகாதெமி. கர்நாடக இசை, பரதநாட்டியம், மோகினி ஆட்டம் என்று பல முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. நாடகங்களும் அரங்கேறுகின்றன. பிரம்மாண்டமான அரங்கமும் பார்வையாளர்கள் கண்டுகளிப்பதற்கு ஏற்ற இருக்கை வசதிகளும் கொண்டு அமைந்துள்ள இந்த அகாதெமியில் தலைசிறந்த பல கலைஞர்களின் நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இசை ஆர்வலர்கள் பலர் அகாதெமியை சொர்க்க பூமியாகக் கருதி வருவதில் வியப்பேதுமில்லை. நுங்கம்பாக்கம் கல்சுரல் அகாதெமி,

போன்: 24834823 / 24860850



மியூசிக் வேர்ல்டு சென்னை இளைஞருக்கு மிகவும் பரிச்சயமான ஓர் இடம். இவர்கள் தற்பொழுது டி.டி.கே சாலையிலுள்ள செட்டியார் கூடத்தில் 'மியூசிக் ஃபெஸ்ட்' எனும் இசைக் கண்காட்சியைத் துவக்கியுள்ளனர். பாரம்பரிய கர்நாடக சங்கீதப் பாடல்கள் முதல் ஆங்கிலப் படங்களின் சிடி.டி.வி.டிக்கள் வரை ஒட்டு மொத்தமாகக் குவித்து 70% வரை சிறப்புத் தள்ளுபடி என அறிவித்துள்ளனர். என்ன, விசிட் போட்டு கிளம்பிட்டீங்களா? (ஜனவரி 2ம் தேதி வரை கண்காட்சி நடைபெறவுள்ளது) ✍ எழில்



## பூமராங்

✉ மயிலை காமதேனு (தியேட்டர்) எழிலாகக் கண்களுக்குப் பட்டபோது கபாலி (மூடியிருந்தாலும்) ஏன் படவில்லை?

- சிவஜோதினி, வியாசர்பாடி

✉ மந்தைவெளியில் தோண்டப்பட்ட பள்ளங்கள் பற்றி உமது ஃபோக்கஸ் ஏற்றமாக இருந்தது.

- செல்வி, மயிலை

உங்கள் கருத்துகளை chennaiscan@kalki weekly.comல் மெயிலலாம்.



# அலைபாயுதே II

**ம**னைவி இருந்தாலும் வாழ முடியாது, இல்லாமலும் வாழ முடியாது... நிம்மதியாக..!

தமது 'பிரியசகி' படத்துக்காக இப்படியொரு பில்ட்-அப் கொடுக்கிறார் இயக்குனர் அதியமான். படத்தில் ஹீரோயின் சதாவின் பெயர் பிரியா. ஹீரோ மாதவனின் பெயர் சந்தானகிருஷ்ணன். அதாவது சகி. இரண்டையும் இணைத்து படத்துக்கு 'பிரியசகி' என்று பெயரிட்டுள்ளனர்.

இதன் பூஜைக்கு வந்திருந்த மாதவனிடம் "ஏன் தமிழில் ஆளே காணோம்?" என்றோம். "சார், ஸ்கிரிப்ட் ரெடியாகாம நான் எந்தப் படத்துக்கும் சைன் பண்ண மாட்டேன். 'பிரியசகி' படத்தோட முழு ஸ்கிரிப்டும் எனக்கு பிடிச்சதாலதான் ஒத்துகிட்டேன். இந்தப் படம் அலைபாயுதேவோட நீட்டிப்பு என்றும் சொல்லலாம். கணவன் - மனைவிக்குள்ள பிரச்னையைத் தத்ரூபமாகச் சொல்லும் படம்" என்றார் கூலாக..

# 'காதல்' துளிகள்!



**செ**ன்ற வாரம் ஷங்கர் தயாரிப்பில் உருவான 'காதல்' வெளியான அன்று, பத்திரிகையாளர்களுக்கும் பிரசாத் லேபில் ப்ரிவியூ காட்டப்பட்டது. இயக்குனர் பாலாஜி சக்திவேல் மதுரையில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தைக் கொஞ்சமும் பிசகாமல் செலுலாய்டுக்குள் பதிவு செய்ய, இறுதியில் படம் முடிந்தவுடன் ஒட்டுமொத்தக் கைத்தட்டல்களையும் பாராட்டாகப் பெற்றார்.

'பாய்ஸ்' படத்தில் பத்திரிகைகளின் கண்டனங்களுக்கு உள்ளான ஷங்கருக்கு, இம்முறை விமர்சனங்கள் அப்படியே தலைகீழாக மாறி, பாராட்டு மழையில் நனைந்தார். அடுத்ததாக ஷங்கர் இயக்கி வரும் 'அந்நியன்' இதுவரை இந்திய சினிமாவில் சொல்லப்படாத கதை என்று இப்பொழுதிருந்தே ஆச்சரியம் தொடங்கி விட்டது.

ம்... சினிமா இயக்குனர்களைவிட கடவுள் அமைக்கும் திரைக்கதையில்தான் எத்தனை ஆச்சர்யங்கள்!

✍ சரு.கண்ணன்

# டாக்கீஸ் டாக்

📷 எழில்

**செ**ன்ற வாரம் புதன்று சாலிகிராமத்தில் ஒரே பரபரப்பு. ஏராளமான போலீஸார் வேறு ஆங்காங்கே தென்பட்டனர். 'என்ன ஏதாவது வெட்டுகுத்தா?' என்றால் சாலிகிராம வாசிகளிடமிருந்து நமக்குக் கிடைத்த பதில் - அஜித் ரசிகர் மன்ற கட்டடத் திறப்பு விழா.

விஜயகாந்த் சொந்தமான ஆண்டாள் அழகர் திருமண மண்டபத்துக்கு மிக அருகிலேயே அமைந்துள்ள அகில இந்திய அஜித் தலைமை ரசிகர் மன்ற கட்டடத் திறப்பு விழாவுக்குப் படையெடுத்து வந்திருந்த தங்கள் 'தல'யைக் காணத்தான் நூற்றுக்கணக்கான ரசிகர்கள் குழுமி, தொண்டை கிழிய 'தல தல தல' என்று கத்தி அந்தப் பகுதியையே சில நேரங்களுக்குப் பரபரப்பாக ஆக்கி விட்டனர்.


அஜித் ஆறுதலான பிறகு நிலைமை கட்டுக்கடங்காமல் போனது. ரசிகர்களின் ஆரவாரம் வடபழனி பஸ் நிலையம் வரை கேட்டிருக்கிறது. இடையிடையே வெளியே வந்து 'தல' தரிசனம் தர 'வால்'களெல்லாம் அப்படியே மெய்மறந்து போயினர். "மச்சான், தல வெள்ளையா இருக்குல்ல" என்று அத்தனை பேர் முகத்திலும் பரவசம். ஆனால் நெருக்கடியான குடியிருப்பு பகுதியில் தலைமை ரசிகர் மன்றம் அமைந்திருப்பதால் அன்று அனுபவித்த அந்தத் தொல்லைகளைத்தான் இனியும் அப்பகுதிவாசிகள் அடிக்கடி அனுபவிக்க வேண்டியதிருக்கும்.



# 'தல' ரொம்ப வெள்ளை!



**செ**ன்னையில் சென்ற வாரம் கே.வி.ஆனந்த் முதன்முதலாக இயக்குனராகக் களமிறங்கும் 'கனா கண்டேன்' படத்தின் ஆரம்பவிழா ஏவிஎம்மில் நடைபெற்றபொழுது, அனைவருக்கும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது கிரிக்கெட் வீரர் பாலாஜியின் வருகைதான். சமீபகாலமாக ஸ்ரீகாந்துடன் தோன்றி ஆனதால் அவர் அழைப்பின் பேரில் பூஜைக்கு வந்தவர், சுற்றிலும் நட்சத்திரங்கள், காமிராக்களின் ஃப்ளாஷ் என்று தன்னை வட்டமிட்டதில் மிகவும் கூசிப் போனார். குரூப் போட்டோ எடுக்கும்போது பாலாஜியையும் சேர்த்துக் கொள்ள, ரெயூண்டில் விட்டபடிகளை எகிறச் செய்பவர் அன்று ரொம்பவே கூச்சப்பட்டது கண் கொள்ளாக் காட்சி.



## "ஆட்டோகிராஃ்பும் அம்பேத்கரும்"

கிரீன்வேஸ் சாலை - சென்னை வி.ஐ.பி.க்கள் ஒட்டு மொத்தமாக டேரா போட்டிருக்கும் குடியிருப்புப் பகுதி. இங்கிருக்கும் அம்பேத்கர் மணி மண்டபத்துக்கு ஒரிரு அரசியல் வாதிகள் அவரது பிறந்த நாள், நினைவுநாளின் போது விசிட் செய்வதோடு சரி, அப்புறம் சத்தமாகக் கண்டுகொள்வதில்லை. பொது மக்களும் சரி - சுற்றுலாப் பயணிகளும் சரி- யாருமே பெரும்பாலும் எட்டிக் கூட பார்ப்பதில்லை. அப்பகுதியில் இருக்கும் ஒரிரு முதியவர்கள் இதனை தமது வாக்கிங் ஸ்பாட்டாக மட்டுமே பயன் படுத்துகின்றனர். கழிவறையோ அனுதினமும் பூட்டப்பட்டே இருக்கும். உள்ளே இருக்கும் அம்பேத்கர் தொடர்பான புகைப்படங்களோ - போவோர் வருவோரின் ஆட்டோகிராஃப்புகளால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கும். இதுதான் அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தின் இன்றைய அவல நிலை. இதை என்ன செய்வது என்பதை போஸ்டருக்குப் போஸ்டர் அவர் படத்தைப் போட்டு வோட்டுக் கேட்பவர்கள்தான் சிந்திக்க வேண்டும்.

✍ ஸ்வரா 📷 ராஜன்

## மெலடி மழை!

மழை ஒருமுறை வந்து மீண்டும் 'எப்போ வேணும்னாலும் வருவேன்' என செல்லமாக மிரட்டிச் சென்றதாலோ என்னவோ, அன்று வெள்ளி வைதானம் அப்படியே சில்லிட்டுப் போயிருந்தது. விஜய் டீவியின் "டிசம்பர் பூக்கள்" இசை வெள்ளத்திற்காக. குளிர் நடுக்கினாலும் மிர்ச்சி சுசித்ராவின் செம ஹாட்டான காம்பியரிங்கால் குளிரை மறந்து இசையை ரசிக்க முடிந்தது.

உன்னிமேனன் தனது மயக்க வைக்கும் குரலால் அனைவரையும் சொக்க வைத்துக் கொண்டிருந்தார். அவர் 'என்ன விலை அழகே..' என்று பேரம் பேசியபோதும் சரி.. 'மின்னலைப் பிடித்து..' விளையாடியபோதும் சரி... உண்மையிலேயே புது வெள்ளை மழைதான் பொழிந்து அனைவரையும் நனைத்தது. எம்.எஸ்.ஸுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் "காற்றினிலே வரும் கீத"த்தை அனுராதா ஸ்ரீராம் பாட, அவை வருமே உருகித்தான் போயினர்.

திடீரென சுசித்ராவுக்கும் அனுராதா ஸ்ரீராமுக்கும் ஓர் ஊடல் - "உங்களுடைய 'டண்டணக்கா' ஹிட்டாகும் அளவுக்கு மெலடி ஹிட்டாகலையே" என சுசித்ரா அனுவைச் செல்லமாய் சீண்ட, 'அன்பென்ற மழையிலே....' தொடங்கி தனது மெலடி ஹிட்டுகளை வரிசைகட்ட, கூட்டம் உண்மையிலேயே ரசித்துச் சிரித்தது.

✍ முத்து





### லப் - டப் லவ் லெட்டர்

என் வறண்ட "நிலத்"தில்
உன் பார்வை "நீர்" பட்டதால்
என்னுடல் முழுதிலும் காதல்
"நெருப்பு"
உன் மூச்சுக் "காற்று"
கிடைத்தால்
நான் பறப்பேன் "ஆகாயத்"தில்

- B. பாபு,
சென்னை - 51



## யூத்

# கனா காணும் காலங்கள்

பன்னிரண்டாவது தான் படிக்கிறார் மதுமிதா. அதற்குள் 'முதன்முதலாய்' (லேசா லேசா) 'கனா காணும் காலங்கள்' (7ஜி ரெயின்போ காலனி) என சூப்பர் ஹிட் பாடல்கள் பாடி, தமிழ் சினிமாவின் தவிர்க்க முடியாத பாடகியாகி விட்டார். அரையாண்டுத் தேர்வுக்காக ஓயாமல் படித்துக் கொண்டிருந்தவர், கேள்விகள் கேட்டு பதில்களுக்கெல்லாம் மார்க் உண்டு என்றவுடன் புக்கை மூடி விட்டு பேட்டிக்குத் தயாரானார்.

**கனா காணும்:**

என்னோட முதல் பாடலான 'முதன் முதலாய்' பாடல் கேட்டு செல்வராகவன், யுவன் ரெண்டு பேரும் நான்தான் '7ஜி'யில 'கனா காணும் காலங்கள்' பாடணும்னு விரும்பப்பட்டாங்க. ஹிந்துஸ்தானி ஃபீலிங்கோட நான்பாட 'உன்தாத் கல்தான் கான்'ங்கிற க்ரேட் சாரங்கி ப்ளேயர் ஹம்மிங் கொடுத்தார். என் ஃப்ரெண்ட்ஸ்களோடு 'உதயம்'ல படம் பார்த்தேன். அப்பப்பா, இந்த பாட்டுக்கு என்னோ வரவேற்பு!

**மற்றமொழிப் பாடகர்கள்!**

ஓ யெஸ். மலையாளம், ஹிந்தியிலிருந்து யார் வேண்டுமானாலும் தமிழ் சினிமாவுல பாடலாம். எப்பவும் திறமைக்குத்தான் மதிப்புக் கொடுக்கணும். சாதனா சர்கம்க்கு இருக்கும் திறமைக்கு இன்னும் நிறையப் பாட்டுகள் பாடணும். '7ஜி' ஷூட்டிங் ரிலீஸ் ஆனபோது அந்த 'கனா காணும் காலங்கள்' பாடிய ஆளைவிட சூப்பர் ஹிட்டாயிருக்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையில 'டேக் வைப்'ங்கிற ஹிந்திப் படத்துல பாடியிருக்கேன். இதுல என்னோட சுத்தமான உச்சரிப்பைக் கேட்டு 'நீயா சென்னைப் பெண்!' என எல்லோருமே ஆச்சர்யப்பட்டாங்க. என்னோட கனவே, சினிமாப் பாடகியா எல்லா மொழிகளிலும் முத்திரை பதிக்கணும்கிறதுதான்.

**கடல் தாண்டி:**

அப்பா நேவியில வேலை செய்யறதால உலகமெல்லாம் கடல் வழியா சுத்தியிருக்கேன். என்னோட முதல் ஸ்டேஜ் ப்ரோக்ராமே யுஎஸ்ல தான் நடந்தது. ஆனா 12 வயதுக்கு பிறகு அப்பாவுடன் செல்ல நேவி ரூல்ஸ் அனுமதிக்காததால, கடலில் பயணிக்க வாய்ப்புகளே கிடைப்பதில்லை. ஆங்.. சொல்லலையே.. எனக்கு இதுவரைக்கும் நீச்சல் தெரியாது!

**பிடித்த பாடகி:** எனக்குப் பிடிச்ச பாடகின்னா அது எம்.எஸ். அம்மாதான். 'Film hits of M.S. by Madhumitha' என்கிற என்னுடைய ஆல்பத்தைக் கொடுத்ததுதான் ஹாரிஸ் ஜெயராஜிடம் பாடுவதற்கு முதல் வாய்ப்புக் கிடைச்சது. ஒருமுறை எம். எஸ். அவர்களை நேரில் பார்த்து பாடிக் காண்பிச்சேன். 'பாலமீராவுக்கு என் ஆசீர்வாதம்'னு கையெழுத்துப் போட்டு பாராட்டுக் கடிதம் கொடுத்தாங்க.

**எதிர்காலம்:** ஐயா, அயோத்தியா, உள்ளக் கடத்தல், ஆயுதம்னு நிறையப் படங்களில் பாடிட்டிருக்கேன். யார் மாதிரியும் இமிடேட் பண்ணாம, எப்பவும் என் குரலுக்கென்று ஒரு தனித்துவம் இருக்கணும்கிறதுதான் என் லட்சியம். (சுட சுட அசத்தலாக பதிலளித்த மதுமிதாவுக்கு நாம் அளிக்கும் மதிப்பெண் 100/100)

✍ ச.ந. கண்ணன்

## வரி விளம்பரம்

**BOOK LIBRARY**

Enjoy latest Tamil and English Magazines on circulation basis. New No. 168, G.A. Road, (Opposite to Rainy Hospital) Old Washermanpet, Chennai - 21. Cell: 98843 82450, Library Timings 5.30 p.m to 9.30 p.m

**ஜோதிடம்**

ஜாதகம் கணிக்க, முகூர்த்தம் பார்க்க, கல்யாணப் பொருத்தம் நிர்ணயிக்க, ப்ரச்னம் சொல்ல, பொதுப்பலன் அறிய, யோக காலம் தெரிந்து கொள்ள, வார நாட்களில் மட்டும் பகல் 10 முதல் 1 மணி வரை அணுகவும்.

**கோமாண்டூர் ஸ்ரீநிவாசன், அஸ்ட்ரோ ஸ்கொயர், சாஸ்திரி நகர் முதல் மெயின் ரோடு, (வாட்டர் டேங்க் எதிரில், முதல் மாடி), அடையார், சென்னை - 20. தொலைபேசி : 24469160.**

**SPOKEN ENGLISH**

**+ 3 Excellent Spoken English**
"ஆங்கிலம் கற்றுக் கொள்வது இவ்வளவு சுலபமா?" "அது கற்றுக் கொடுப்பவரைப் பொறுத்தது!" - பாரேன். +3ல் சேர்ந்தவர்கள் ஏங்கிக் கொண்டேதான் இருக்கிறார்கள். நீங்கள் அதிர்ஷ்டசாலி. **S. Sivakumar, Cell: 9884382450**, New No. 168, G.A. Road, (Opp. Rainy Hospital) Chennai - 21.






## பூட்டிவச்சி வாடகை தர்றோம்!

அடையார் திருவிக பாலத்திற்கு அருகே நீங்கள் வந்து கொண்டிருக்கும் போதே உங்கள் மூக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தை நோக்கி நீளும் - அந்த இடம் சென்னை மாநகராட்சியால் கட்டித்தரப்பட்டுள்ள பூ மற்றும் பழ மார்க்கெட். நறுமணத்தை அள்ளி வீசும் இவற்றை விற்பனை செய்பவர்களின் வாழ்க்கையோ அவ்வளவு வாசமாக இல்லை. ஏனிந்த நிலை? அப்பகுதியில் வியாபாரிகள் சிலரிடம் கேட்டோம்.

"இங்கு மொத்தம் 32 பழக்கடைகளும், 14 பூக்கடைகளும் உள்ளன. ஆனால் இந்தக் கடைகள் இரு வரிசைகளில் எதிரும் புதிருமாகக் கட்டப்பட்டிருப்பதால் இங்கு மார்க்கெட் இருப்பது பார்வைக்கே தென்படாது. அதனால் இங்கு வந்து யாரும் பழமோ பூக்களோ வாங்காததால் வியாபாரம் சுத்தமாகப் படுத்துவிட - இங்கிருந்த சிலர் கடையை மூடி விட்டு - வெளியே சென்று பிளாட்பாரத்திலும், தள்ளு வண்டியிலும் விற்பனை செய்யத் துவங்கிவிட்டனர். குறிப்பிட்ட சிலர் மட்டும் படத்தில் காட்டப்பட்டுள்ளதைப் போல மார்க்கெட்டுக்கு வெளியே வைத்து விற்பனை செய்கின்றனர். கடைகள் திறக்காமல் மூடப்பட்டிருந்தாலும், வாடகை மட்டும் கடைக்கு ரூ.410 வீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது" என்கிறார் ஒரு மூத்த வியாபாரி.

"வியாபாரத்திற்கு உதவாத வண்ணம் கடைகள் கட்டப்பட்டிருப்பதால், நாங்கள் வாடகை தர இயலாது என்று மாநகராட்சியிடம் சொல்லி விட்டோம். பிற்பாடு வழக்கெல்லாம் நடந்து, தற்போது இந்த மார்க்கெட்டை பொது மக்கள் பார்வைக்கு படும் வண்ணம் ∃ வடிவில் கடைகள் அமைத்துத் தருவதாக மாநகராட்சி நிர்வாகம் சம்மதித்தது. அதன் பின்னர் நாங்கள் நிலுவைத் தொகையைச் செலுத்தி வருகிறோம். ஆனால் சொன்னபடி இன்னும் மார்க்கெட்டின் அமைப்பை மாநகராட்சி மாற்றித்தருவதற்கு முயற்சி எடுக்கவில்லை" என்ற வியாபாரிகளின் கருத்துக்கு மாநகராட்சியிடம் விளக்கம் கேட்டதற்கு,

"சென்ற ஆட்சிக்காலத்தின் போது தவறாகத் திட்டமிட்டு இது போன்று கட்டடம் கட்டிவிட்டனர். இருந்தாலும் அதையே சொல்லிக் கொண்டிருக்காமல், இதற்குத் தீர்வு காணும் முயற்சியாக ஒரு புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். அநேகமாக புத்தாண்டில் அவர்களுக்கு ஒரு நல்ல விடிவு கிடைக்கும்" என்று பதிலளித்தனர். இவர் விட்டால் அவர் செய்வார் - அவர் விட்டால் இவர் செய்வார் என்று இருந்துவிடாமல், தம்மிடம் நம்பி வரும் இந்த வியாபாரிகள் வாழ்வில் மணம் வீச மனம் வைப்பார்களா சம்பந்தப்பட்டவர்கள்..?


📷 + ✍ கலை



### 'காவு கேட்கும் பள்ளம்'

அழகி படத்துல நந்திதா தாஸோட மகன் ஆக்ஸிடெண்ட் ஆகிக் கிடப்பானே... அந்த சிக்னல் தான் இந்தப் பள்ளம் இருக்கும் கரெக்ட் லொகேஷன். கார்னர்ல இருக்கிற இந்தப் பள்ளம் வழியே ஏகப்பட்ட மக்கள் திடுதிடுவென வருவார்கள் - காரணம் அந்தப் பள்ளத்துக்கு கூப்பிடு தூரத்துல ஜெயந்தி, தியாகராஜன்னு ரெண்டு தியேட்டர்கள் வேற இருக்கு. நடைபாதையில இருக்கும் இந்தப் பள்ளம் பகல் நேரத்துலயே குத்துமதிப்பாத்தான் தெரியும் - ராத்திரி நேரத்துல சுத்தமா வே தெரியாது. டிராபிக் நெருக்கடி எப்போதுமே அதிகமாக இருக்கும். இந்தப் பள்ளத்தை சீக்கிரமா மூடி இந்தப் பகுதி மக்களை ஒவ்வொருத்தரா குழிக்குள்ள தள்ளிடாம சீக்கிரமா நடவடிக்கை எடுங்கப்பா!

📷 + ✍ முரளி



திருவான்மியூரில் இருக்கிறது விக்ரம் சாராபாய் இன்ஸ்ட்ராணிக்ஸ் எஸ்டேட். எலக்ட்ரானிக்ஸ் துறையில் ஓரளவுக்கு ஞானமுள்ள இளைஞர்களை இங்குள்ள கம்பெனிகள் போட்டி போட்டுக் கொண்டு அழைக்கின்றன. ஆனால் கிராமத்தில் படித்து வேலை தேடி சென்னைக்கு வரும் இளைஞர்கள் பலருக்கு இந்த இடம் பற்றி கொஞ்சமும் தெரியாது. தற்போது வேலைதேடி சோர்ந்து போயிருக்கும் எவர் வேண்டுமானாலும் இங்கு வாருங்கள் பயோடேட்டாவுடன். டைடல் பார்க்கிலிருந்து வெறும் அரை கி.மீ. தூரத்தில் இருக்கிறது இந்த VSI Estate.

✍ ஸ்வரா

## சென்னை செம ஹாட் மச்சி!

"போலே, போலே, சமான் ஜல்தி..!" என்று சென்ற வாரம் ஐ.ஐ.டியில் கொஞ்சம் அதிகமாகவே ஹிந்திக் கூச்சல்கள் காதில் விழுந்து கொண்டிருந்தன.

இண்டர்காலேஜ் போல இண்டர் ஐ.ஐ.டிகளுக்கிடையே நடக்கும் ஸ்போர்ட்ஸ் மீட் சென்ற வாரம் சென்னை ஐ.ஐ.டியில் நடைபெற்றது. இதற்காக டெல்லி, மும்பை, கான்பூர், குவாத்தி, கரக்பூர், ரூர்க்கி என நாட்டிலுள்ள அனைத்து ஐ.ஐ.டிகளிலுமிருந்து மாணவர்கள் வந்திருந்து கேம்பஸையே குதூகலப் படுத்திக் கொண்டிருந்தனர். ரூர்க்கியிலிருந்து வந்த ஆகாஷ், ஹாக்கி கோல் கீப்பராக கிரவுண்டில் கலக்கிக் கொண்டிருந்தார். "ஓ நோ. சென்னை செம ஹாட். இந்த ஹெல்மெட், ட்ரெஸ் போட்டு ஆடும்போது பயங்கரமா புழுங்குது. டிசம்பர் மாசமாச்சே, பயங்கரமா குளிரும்னு தப்புக்கணக்குப் போட்டு நாங்க எல்லோரும் ஸ்வெட்டர், கம்பளியெல்லாம் கொண்டு வந்தோம்" என்றார் சிரிப்போடு.




✍ செந்தில்



## பெண்கள் எங்கே?

சென்னையில் சென்ற வாரம் இன்டர்நேஷனல் ஃபிலிம் ஃபெஸ்டிவல் நடைபெற்றது. கிட்டத்தட்ட ஒரு வாரம் பைலட் திரையரங்கில் நடைபெற்றதில் ஹாலிவுட், பிலிப்பைன்ஸ், ஃப்ரெஞ்ச், ஜெர்மன், இத்தாலி, தாய்லாந்து, சீனா, இலங்கை மொழிப்படங்களோடு தமிழிலிருந்து 'ஆட்டோகிராஃப்'பும் திரையிடப்பட்டது. பொதுவாக ஃபிலிம்சேம்பர், அலையன்ஸ் பிரான்சிஸ் போன்ற இடங்களின் இதுபோலொரு விழாவுக்கும் அயல்நாட்டுப் படங்களுக்கும் இருக்கும் அமோக வரவேற்பு இவ்விடத்தில் கிடைக்கவில்லை. கட்டணத்தைத் தவிர்த்திருந்து இலவசமாகத் திரையிட்டிருந்தால், சர்வதேச ஃபெஸ்டிவலின் நோக்கம் நிறைவேறியிருக்கும். அதிலும் வந்தவர்களில் பெண்களை எண்ணுவதில் மிகவும் சிரமம் ஏற்பட்டது. பின்னே, யாராவது வந்திருந்தால்தானே எண்ணுவதற்கு?"

செந்தில்



## பொலிட் பீரோ

தயாராகி வருகிறார்களாம். எதிர்க்கட்சியினர் மன்றம் நடக்கும் சமயம் வெளிநடப்பு செய்து நாளிதழ் செய்திகளில் இடம் பிடித்து விளம்பரம் தேடி வருகிறார்கள். ஆனால் ஆளும் கட்சியோ உள்ளே இருந்து காரியம் சாதித்து, எம்.எல்.ஏ ஆவோம் என்று கொக்கரிக்கிறார்களாம். ஆக பதவிதான் நோக்கமே தவிர, சேவை நோக்கம் இல்லை யாது. நடத்துங்க... நடத்துங்க.

● சென்னையில் தனக்கென்று ஒரு பலத்தை ஏற்படுத்தியே ஆக வேண்டும் என்று முனைப்புடன் செயலாற்றி வரும் மறுமலர்ச்சிக் கழகத்துக்கு, வரும் சட்டமன்றத் தேர்தலில் கணிசமான இடங்கள் சென்னையில் ஒதுக்க வேண்டும் என்று இப்போதே நச்சரிக்கத் துவங்கி விட்டனராம். இதற்குச் செவிசாய்க்காத பட்சத்தில், புயல் கரையைக் கடந்தாலும் கடக்கலாம் என்கின்றனர் கழகத் தொண்டர்கள்.

● சென்னை மாநகராட்சியின் ஆளும் - எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கட்சிக்கு மூன்று பேர் வீதம், எம்.எல்.ஏ சீட் கேட்கத்

● 'புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம் துவங்கப்பட்டதே மத்திய அரசின் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு முட்டுக்கட்டை போடும் எண்ணத்துடன்தான்' என்ற பேச்சு தற்போது கிளம்பியிருக்கிறது. சென்னை மக்களுக்கு குடும்ப அட்டை வழங்கும் திட்டத்தில் ஏற்பட்ட குளறுபடிகளும் ஆளும் தரப்பைச் சிக்கலில் மாட்டி விட்டுள்ளதாம். 'இவற்றை எதிர்கட்சிகள் விவகாரமாக்கினால் என்ன செய்வது?' என்று ரொம்பவும் குழம்பிப் போயுள்ளதாம் ஆளும் தரப்பு.

கலை

## பராக்கு பார்க்க ஒரு பார்க்



டெட்டால் பார்க் டெட்டால் பார்க்குன்னு ஒன்னு புச்சா வந்திருக்குன்னு கபாலி நம் மண்ட சொன்னதும், சரி ஒரு தபா பார்த்துட்டு வரலாம்னு வாக் வுட்டேன் நைனா. சும்மா ஜில் பாண்சியா கீது போ. பார்க்குன்னா சிமெண்ட்டு பெஞ்சு, ஆலமரம் இதெல்லாம் இருக்கணுமா வாணாமா? இங்க அந்த மாதிரி ஒன்னையும் காணோம் நைனா. ஆனா, சும்மா சொல்லக் கூடாது. எம்மாம் பெரிய பில்டிங் கட்டிக்கிறானுங்க தெரியுமா? டெட்டால் போட்டு கழுவுன மாதிரி தலையெல்லாம் பளபளன்னு கீது. குத்திக்கிறு ஜோரா தலை சீவிக்கலாம். அதான் டெட்டால் பார்க்குனு பேர் வைச்சிருக்காங்க போல. ஷோக்கா இல்லை?

சரின்னு உள்ளார நுழைஞ்சு டை கட்டின ஒரு ஆளுகிட்டே டாக் வுட்டேன். "ரம்ப்பிர் தல இந்த பார்க்குல எங்க குந்திக்கிறது?" உடனே அந்த புண்ணியவான் "தோ தோ தில் தல நாட்டு தட்டு பார்க்கு" தல புன்னான்னு அப்படின்னு பீட்டர் வுட ஆரம்பிச்சுட்டாரு. சரி தான் நம்மள விட பெரிய தலன்னு எஸ்கேப் ஆயி உள்ளார பூந்தேன்.

ஏதோ கம்ப்யூண்டரோ கம்ப்யூட்டரோ இருக்குமே அதான் நைனா டி.வி பொட்டி. அதுக்கு எதிர்த்தாப்புல குஷன்ல குந்திக்கினு பசங்களும் பொண்ணுங்களும் மோளம் அடிக்கிற மாதிரி டப்பு டப்புன்னு தட்டிக்கினு கீறாங்க. நம்ம தலீவர் படம் போடுவாங்கன்னு நானும் முக்கால் மணி நேரம் நின்னு பார்த்தேன். ஒன்னியும் காணோம். அப்படி என்ன தான் பண்றாங்கன்னும் அண்டர்ஸ்டாண்டு ஆவல. ரொம்ப டிபரெண்டு பார்க்தான் நைனா? பேஜ் கண்டுக்கினு வா...

பஜார் பக்கிரி

**பூவிலங்கு மோகன்**
**இடம்: பெசன்ட் நகர் பீச்**

"சில்லுன்னு குளிர்காத்து, பஞ்சு மெத்தை மாதிரி மணல், இசையோட வர்ற அலை, மெல்ல எட்டிப் பார்க்குற சூரியன், அந்த 'ஆரஞ்சு' நிற வானம், இந்த மாதிரி ரொம்ப அழகான காலை வேளையில பெசன்ட் நகர் எலியாட்ஸ் பீச்ல நிம்மதியா மூச்சு விட்டுட்டு நடக்கறதுன்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். அன்றைய வேலைகளை உற்சாகமா செய்ய, அந்த அதிகாலை வாக்கிங்தான் சக்தி கொடுக்குது. நிறைய விஐபிக்களை அந்தக் காலை வேளையில இங்க பார்க்கலாம். ஆனா முந்தைய இரவு நடந்த ஏதாவது சாலை விபத்துல யாராவது அடிபட்டுக்கிடப்பாங்க. ஏதாவது வாகனங்கள் கவிழ்ந்து கிடக்கும். இந்த மாதிரி அடிக்கடி பார்த்திருக்கேன். அதான் மனசை என்னமோ பண்ணுது."



ஷிவ்





சென்னை எக்ஸ்ப்ரஸ்

To Advertise contact
2232 4281 / 2231 4673




## பால் கேக் பரவசம்!

அடையாறு... நாக்குக்கு ஆச்சர்யம் தரும் இடம் அடையாறு ஆனந்த பவன்தான். இவங்களோட தயாரிப்புகளில் சுவை, சுத்தம், தரம் கலந்தே இருக்கும்னு சென்னை மக்களுக்கு சொல்லணுமா என்ன? தன் புதிய ஆனந்தத்தை பெசன்ட் நகரில் சென்ற வாரம் துவக்கிய பவன், சென்னையில் மட்டும் 19 இடங்களில் இயங்கி வருகிறது. இவங்களோட இதின் துவக்க, புத்தாண்டு ஸ்பெஷல் என்னன்னு தெரியுமா? பால் கேக் (100% சைவம்) பேரே நீரை வரவழைக்குதே! மத்தபடி 'பெங்காலி ஸ்வீட்ஸ்' வகைகள் எப்பவுமே ஆஹா! அதுக்கு கூட்டங்கள் மத்தியில வரவேற்பு ஜோரா! அதிரசம், முறுக்கு வகைகள் கூட தனி டேஸ்ட். கஜூரா பேகர், சம்பாகலி, மலாய் சாண்ட் விச், மலாய் சந்திரகலா... இப்படி நிறைய ஸ்வீட்ஸ் எல்லாமே மல்லிகா ஷெராவத், மலாய்கா அரோரா, பிபாஷா பாசு மாதிரி செம ஸ்வீட்!

முகில்



## To வடபழனி, வித் லவ்...

ஹாய் சென்னை, நாங்க ஏற்கெனவே சொன்ன மாதிரி, அடுத்த இதழ் தி.நகர் ஸ்பெஷலா மலரப்போகுது. தி.நகரிலிருந்து நல்ல வரவேற்பு. இதோ 9.1.05 இதழ் வடபழனி ஸ்பெஷல். என்ன ரெடியாயிட்டீங்களா? வடபழனி மற்றும் அதை சுற்றியுள்ள ஏரியாவோட பிரச்னைகள், சாதனையாளர்கள், விழாக்கள், டேஸ்ட்.காம், உங்க படைப்புகளை எல்லாம் டிசம்பர் 22ம் தேதிக்குள் எங்களுக்குத் தட்டி விடுங்க. உங்களை நேரில் பார்க்க நாங்க இதோ வந்துகிட்டே இருக்கோம்.

- லஜ்ஜாவதி

முகவரி: சென்னை ஸ்கேன்,
47-NP, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 600 032. ஃபோன்: 22345622, 23, 24.
E-mail:chennaiscan@kalkiweekly.com, chennaiscan@indiatimes.com

# ஏ.ஆர். ரஹ்மான் ரொம்ப சமர்த்து!

'ருக்குமணி.. ருக்குமணி', 'தைய்ய தைய்ய தைய்யா..' என்று தனது டிபிகல் குரலால் ஒரு கலக்குக் கலக்கியவர் 'மால்குடி' சுபா. திருவான்மியூர் வாசியான அவரை, நமது சி.ஐ.பி (Chennai's Important Person) பகுதிக்காக அவரது 'கொஞ்சும் கோவிலில்' சந்தித்தோம்.

**வால்பாறை... வட்டப்பாறையெல்லாம் உங்க வீட்ல நிறைய இருக்குதாமே...**

(கலுக்கென்று சிரித்துவிட்டு) அதெல்லாம் இங்க இல்ல. வால்பாறைங்கற ஒரு ஊர்ல இருக்கு. அதையெல்லாம் கூட ஷூட்டிங் ஸ்பாட்டுல பார்த்ததோட சரி.

**இப்போ என்ன பண்ணிட்டிருக்கீங்க...**

அம்மாதான் இருக்கேன். ஆனா நிம்மதியா, சந்தோஷமா இருக்கேன். ஆரம்பத்துல ரெண்டுநாள் வீட்ல சும்மா இருந்தா வாழ்க்கை என்னாகுமோன்னு பயப்படுவேன். ரோட்டு துண்டைப் போட்டு, என் கணவர் பிஸ்னஸ் பார்க்க, நான் பாடுற மாதிரி கனவெல்லாம் வரும் (குலுங்கிக் குலுங்கி சிரிக்கிறார்) ஆனா இப்போ ஓரளவுக்குச் செட்டில் ஆயிட்டதால பயமே கிடையாது.

**டப்பிங், ஆக்டிங் பண்றதுக்கு ஐடியா இருக்குதா...!**

வேணாம் சாமி. ஒரு தடவை 'நாடோடி தென்றல்' படத்துக்காக அந்த இங்கிலீஷ் பொண்ணுக்கு டப்பிங் கொடுத்து பட்ட பாடு போதும். நடிப்புங்கறது என்னை மாதிரி பாப் கலைஞர்களுக்கு இயற்கையான ஒன்னுதான். ஆனா நடிக்க ஆர்வமெல்லாம் பெரிசா இல்ல.

**கணவரைத் தூங்க வைக்க பாடிய பாட்டு...**

சேச்சே... நீங்க நினைக்கற மாதிரி இல்ல என் ஹஸ்பெண்ட். என்னோட ஃப்ரெண்ட், வெல்விஷர் எல்லாமே அவர்தான். அவர் கொடுத்த சப்போர்ட்தான் இன்னிக்கு 'மால்குடி சுபா'ங்கற பேர் இருக்கறதுக்குக் காரணம். (இப்போ என்ன கேட்டுட்டோம் இவ்வளோ ஃபீலிங்ஸ்...?)

**நீங்கள்லாம் வந்துதான் தமிழைக் கொன்னுட்டீங்களாமே...**

ஒத்துக்கிட்டுதான் ஆகணும். என்ன செய்யறது? நாங்கள்லாம் வாழ்ந்த, வளர்ந்த சூழ்நிலை அப்படி. தெலுங்கு, இங்கிலீஷ்ல எழுதி ஓரளவுக்கு தத்தித் தத்தி தமிழ்ல பாடிட்டு இருக்கோம்.

**அடிக்கடி முணுமுணுக்கிற பாட்டு...**

'நாதோடுதான் நான் பேசவேன்..' பாட்டை அடிக்கடி ஹம் பண்ணுவேன். ஆனா பாடத் தெரியாது.

**கோபம் வந்தா எப்படி வெளிப்படுத்தறது வழக்கம்...!**

[illegible] பாத்திரத்தையெல்லாம் அடிச்சி தூள் பண்ணிடுவேன்ல. கொஞ்சுண்டு கோபம் வந்தா சின்னச் சின்ன பாத்திரம். பெரிசா வந்தா அண்டா குண்டாதான்... அந்த நேரத்துல ரொம்ப பாவம் தெரியுமா என் ஹஸ்பெண்டும், என் பையனும் (பாத்திரங்களும் தான்!)

**அடம் பிடிச்சி சாதிச்ச காரியம்னு எதைச் சொல்வீங்க..!**

இந்த வீட்டை வாங்கினது தான். என் ஹஸ்பெண்டுக்கு இதுல இஷ்டமில்லே. நான்தான் பிடிவாதம் பண்ணி வாங்கினேன். இந்த வீடுதான் எங்களுக்கு இருக்கும் மிகப் பெரிய நம்பிக்கை.

**உடம்பு குண்டாக ஒரு சூப்பர் ஐடியா ப்ளீஸ்...**

அதை ஏன் என்னைப் பார்த்துக் கேட்கணும்? சரி. மனசை சந்தோஷமா வச்சிக்கோங்க. நிறைய ஐஸ்கிரீம் சாப்பிடுங்க. சாப்பிடுங்க... சாப்பிட்டுக்கிட்டேயிருங்க. சீக்கிரமே குண்டாயிடுவீங்க.

**மனசுக்கு ரொம்ப திருப்தி தந்த பாட்டுன்னு எதைச் சொல்லலாம்?**

ஏ.ஆர். ரஹ்மான் மியூசிக்ல பாடின எல்லாப் பாட்டுமே எனக்கு ரொம்பத் திருப்தி தந்த பாட்டுகள்தான். எனக்கு அவர் கூட ஒர்க் பண்றது ரொம்ப ஈஸி. ரஹ்மான் ரொம்ப சமர்த்துப் பையன். இன்னமும் சமர்த்தாவே இருக்கார். இன்னொன்னு, சமீபத்துல ஊனமுற்றோருக்காக நடத்தப்பட்ட ஒரு விழாவுல அவங்க முன்னால நான் பாடினதும், அதை அவங்க ரொம்ப ரசிச்சதும் ரொம்ப மனத் திருப்தி தந்து விட்டது.

**காதல்...**

இப்போ ரோஜாப் பூவைப் பார்க்கிறோம். அழகா இருக்கு. உடனே நமக்குப் பிடிச்சிடுது. கிட்ட வந்து பார்த்தா அதன் பின்னால நிறைய முட்கள். அப்பவும் அந்த ரோஜாப்பூவே பிடிச்சிருந்தா, அதுதான் உண் [illegible] குன்னு தெரிஞ்சவுடன் விலகினா அது காதல் இல்ல.

**உங்க திருமணம்...**

ம்... அவர் என்னை லவ் பண்ணினார். நான் அவரை ரொம்ப லைக் பண்ணினேன். போதுமா!

**யாரை நேர்ல சந்திக்கணும்னு ஆசை... (அப்துல் கலாமைத் தவிர)..!**

உண்மையிலேயே எனக்கு கலாமைப் பார்க்கணும்னு ஆசை. அவரைப் பார்த்தா அவர் முன்னால 'ரகுபதி ராகவ ராஜா ராம்' பாட ஆசை!

இரா. முத்துக்குமார்




Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 359 / 03 - 05*
Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki issue Dated 26.12.2004


வாசகர்களுக்கு
கிறிஸ்துமஸ் புத்தாண்டு
வாழ்த்துகள்!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka

